பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை

29 C 24 C

# உதயன்


UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 028 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 09, செவ்வாய் 24.12.2013




பக்கம் 06
சீனா மீண்டும் ஊடுருவல்


பக்கம் 07
மீண்டும் வெடித்தது போராட்டம்


பக்கம் 22
டைமன்ஸ் நூற்றாண்டுக் கிண்ணத்தை தனதாக்கியது நாவாந்துறை சென்.மேரிஸ்


பக்கம் 23
இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்குச் செல்லும்










மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 11 எலும்புக் கூடுகள் மீட்கப்பட் டன. இந்த நிலையில் புதைகுழி தோண்டும் பணி நேற்றுமுதல் திடீரென இடைநிறுத் தப்பட்டுள்ளது. இதனையடுத்து தோண்டிய புதைகுழியைப் பாதுகாப்பாக மூடும் பணி யில் மன்னார் பொலிஸார் நேற்று ஈடுபட் டனர். (த-5-12)

# மன்னார் மனிதப் புதைகுழி தோண்டும் பணி நிறுத்தம்

## *மீட்கப்பட்ட 11 மண்டை ஓடுகள் பகுப்பாய்வுக்கு*

யாழ்ப்பாணம், டிசெ. 24
மன்னார் திருக்கேதீஸ்வரத் தில் கண்டுபிடிக்கப்பட்ட பெரும் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் நேற்றுத் திடீரென நிறுத்தப்பட்டன. எதிர் வரும் சனிக்கிழமை வரை புதைகுழியைத் தோண்டும் பணிகள் இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீட்கப்பட்ட 11 மண் டையோடுகளும் பரிசோத னைக்கு அனுப்பிவைக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை, குடி தண்ணீர் குழாய் இணைப்பு வேலைகளுக்காக மன்னார் திருக்கேதீஸ்வரத்தை அண்டிய பகுதி களில் வீதியின் அருகே மண் ணைத் தோண்டிய போது அங்கு மனித மண்டை யோடுகள், மனித எச்சங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸா ருக்குத் தகவல் தெரிவிக்கப் பட்டுகடந்த சனிக்கிழமை முதல் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலை யில் புதைகுழியைத் தோண் டும் பணிகள் இடம்பெற்றன.

கடந்த சனி, ஞாயிறு இரு தினங் களும் புதைகுழியைத் தோண் டும் நடவடிக்கைகள் வேக மாக இடம்பெற்றன. இதன் மூலம் இங்கு புதைக்கப்பட்டி ருந்த 11 மண்டையோடுகள், எலும்புகள் என்பன மீட்கப்

21 ஆம் பக்கம் பார்க்க

## சுனாமி ஒத்திகை பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், டிசெ. 24
பருத்தித்துறை பிரதேச செய லர் பகுதிக்குட்பட்ட இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் இன்று செவ்வாய்க்கிழமை சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஒத்திகைப் பயிற்சி இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை தெற்கு (ஜே/ 401), பருத்தித்துறை கிழக்கு (ஜே/403) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு இடர்முகா

21 ஆம் பக்கம் பார்க்க

## பஸ் மோதி வயோதிபர் சாவு

தென்மராட்சி.டிசெ.24
வீதியில் சைக்கிளில் சென்ற வயோதிபரை இ.போ.ச பஸ் மோதியதில் அவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். பஸ் ஸின் சில்லுக்குள் சைக்கிள் அகப்பட்டு சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்று திங் கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி சங்கத் தானையில் இடம்பெற்றது.

கொடிகாமம் வெள்ளாம் போக் கட்டியைச் சேர்ந்த சின்னப்பு அருளப்பு (வயது 73) என்ப வரே உயிரிழந்தவராவார்.

சாவகச்சேரி வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று விட்டு மருந்துகளுடனும், சைக்கிள் திருத்துவதற்கான உதிரிப்பாகங் களுடனும் அவர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை

21 ஆம் பக்கம் பார்க்க

## செய்தியாளரை தாக்கியவர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, டிசெ. 24
'உதயன்'பத்திரிகையின்வன்னிப் பிராந்திய செய்தியாளராகக் கட மையாற்றும் ந.கிருஷ்ண குமாரைத் தாக்கிய குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்டவரை விளக் கமறியலில் வைக்குமாறு கிளி நொச்சி நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

'உதயன்' வன்னிச் செய்தி யாளர் கடந்த சனிக்கிழமை தாக்குதலுக்கு உள்ளாகி கிளி நொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவரைத் தாக்கிய குற்றச்சாட்

21 ஆம் பக்கம் பார்க்க

# மன்னார் புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை தேவை

## *காணாமற்போனோரின் எச்சங்களாக இருக்கலாம் என்று ஆயர் இராயப்பு யோசப் சந்தேகம்*

மன்னார், டிசெ. 24
போர் காலத்தில் அரச படைக ளினால் கடத்தப்பட்டு காணா மற்போன தமிழ் உறவுகளின் எலும்புக்கூடுகளே மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியி லிருந்து மீட்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்ட மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப், இதுதொடர் பில் சர்வதேச விசாரணை உடன் தேவை என்றும் வலி

21 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.இந்து மாணவனின் கொலைக்கு நீதி வேண்டும்

## *மாணவர்கள் நேற்று போராட்டம்*



யாழ்ப்பாணம், டிசெ. 24
கொலை செய்யப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஜதுசனின் சாவுக்கு நீதி கோரி யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ்.கச்சேரிகிழக்கு ஒழுங்கை யிலுள்ள, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.

21 ஆம் பக்கம் பார்க்க

# கட்டாய கருத்தடை விவகாரம் மனித உரிமைகள் குழுவுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 24
கிளிநொச்சியில் முன்னெடுக் கப்பட்ட கட்டாயக் கருத்தடை தொடர்பிலான அறிக்கை மனித உரிமைகள் ஆணைக் குழு வின் யாழ்பிராந்தியக் கிளைக்கு சுகாதார அமைச்சினால் கையளிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காகத் தலை மையகத்துக்கு அனுப்பப்பட் டுள்ளதாகப் பிராந்திய ஆணை யாளர் த.கனகராஜ் தெரிவித் தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில்

21 ஆம் பக்கம் பார்க்க

# போர் இழப்பீடு குறித்த மதிப்பீடுகள் நிறைவு

## *விவரங்கள் உடன் கொழும்புக்கு*

யாழ்ப்பாணம், டிசெ. 24
போர் இழப்பீடு தொடர்பாகக் கடந்த இரண்டு வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த கணக்கெடுப்பு நடவடிக்கை கள் முடிவுக்கு வந்துள்ளன.

இவற்றைக் கிராம சேவை யாளர் பிரிவு ரீதியாக மாத்தி ரம் தொகுத்த பின்னர் உடன டியாகவே தலைமையகத்

21 ஆம் பக்கம் பார்க்க

# கமலைக் கைவிட்டார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 24
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் றெக்ஷயனைச் சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் மாவட்ட அமைப்பாளருமான கந்தசாமி கமலேந்திரனை (கமல்) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைவிட்டுவிட்டார்.

கமலேந்திரன் சட்டத் தரணி ஊடாக கோரிய உதவியையும் மறுத்த அமைச்சர் டக்ளஸ், நீதிமன்றமே அதனைப் பார்த்துக்கொள்ளட்டும் என்று தெரிவித்தார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது:

கமல் என்று அழைக்கப்படும் கந்தசாமி கமலேந்திரன் முன்னரே பெற்றோரை இழந்துவிட்டார். அதனால் என்னுடனேயே அவர் வளர்ந்தவர். தற்போது அவர் இவ்வாறு செய்துவிட்டார்.

கமல், அவரது சட்டத் தரணி ஊடாக உதவுமாறு என்னிடம் கோரியுள்ளார். ஆனால் அதனை நீதிமன்றமே பார்த்துக்கொள்ளட்டும் என்று நான் கூறியுள்ளேன் - என்றார் டக்ளஸ். (த-4)

# வைத்திய சாலைத் தொண்டர்களின் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

## இன்று முதல் அவர்கள் பணிக்கு

யாழ்ப்பாணம், டிசெ.24
யாழ்.போதனா வைத்தியசாலையில் 12 நாள்களாகத் தொண்டர்கள் முன்னெடுத்து வந்த கவனவீர்ப்பு போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் பணிக்குத் திரும்புவதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை ஊழியர்கள் என்ற பெயரில் அவர்களைப் பணியாற்றுமாறும் அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அவர்களை நிரந்தர நியமனம் செய்வதா அல்லது ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதா என்பது பற்றித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் இல்லாதவர்கள் அதனைப் பெறுவதற்கு முயற்சி எடுக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தம்மிடம் கூறியதாகத் தொண்டர்கள் மேலும் கூறினர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகியவற்றைச் சேர்ந்த தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொண்டர்கள் 80 பேருக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரச் சித்தி உள்ளது. அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும். ஏனைய 127 பேருக்கு கல்வித் தரம் பிரச்சினையாக உள்ளது. அவர்கள் தற்போது வைத்தியசாலை ஊழியர்களாகப் பணியாற்ற முடியும். அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஏனைய விடயம் தீர்மானிக்கப்படும் என்று கூறப்பட்டதாகத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட 168 பேருக்க விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# சுகாதார கற்கை மாணவர் பேராதனையில் போராட்டம்

இணைந்த சுகாதாரக் கற்கை நெறியில் பல்கலைக்கழகம் மேற்கொண்ட மாற்றத்தைக் கண்டித்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




“3+1 என்ற போர்வை வேண் டாம்”, “நான்கு வருட இணைந்த சுகாதார சேவையை உறுதி செய்” போன்ற வாசகங்கள் எழு தப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தி இருந்தனர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்கள் தமது பட்டப்படிப்பை நான்கு வருடத்தில் இருந்து மூன்று வருடப் பொதுப் பட்டப்படிப்புக்கு மாற்றியதுடன், தகுதியானவர்கள் அதன் பின்னர் மேலதிகமாக ஒரு வருடம் பட்டப்படிப்பை தொடரவும் முடியும் என பல்கலைக்கழக நிர்வாகம்தீர்மானம்மேற்கொண்டது.

இந்தத் தீர்மானத்தைக் கண்டித்தே மாணவர்கள் நேற்று பேராதனைப் பல்கலைக்கழக நுழைவாயிலில் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் இணைந்த சுகாதாரப் பீட மாணவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராக கோசமெழுப்பினர்.

"3+1 என்ற போர்வை வேண்டாம்", "நான்கு வருட இணைந்த சுகாதார சேவையை உறுதி செய்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தி இருந்தனர்.

இதேவேளை பதில் உரிய தரப்புக்களிடமிருந்து தகுந்த பதில் வரும் வரை தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவித்தார். (ஐ-400)

# பொலிஸ் அச்சுறுத்தலுக்குள்ளும் சுகாதாரத் தொண்டர்கள் கவனவீர்ப்பு

## இன்றும் தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.24
யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். தொடர்ந்து போராட்டம் செய்தால் அனைவரையும் கைது செய்துவிடுவோம் என்று பொலிஸார் அச்சுறுத்தியுள்ளனர். எனினும் இன்றைய தினமும் நாம் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

2005,2010,2012 ஆகிய மூன்று வருடங்களிலும் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் நாம் பங்கு பற்றினோம். மூன்று முறையும் எமக்கு நியமனம் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் 2012 பெப்ரவரியில் தொண்டர்களாக 21 மாதங்கள் கடமையாற்ற நாம் நியமிக்கப்பட்டோம். 17 வருடங்களாக பலர் பணிபுரிகிறார்கள். ஆனால் கடந்த வருடத்திலிருந்தே மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவாகத் தருகிறார்கள்.

விலைவாசி உயர்வான இந்தக் காலத்தில் 6 ஆயிரம் ரூபா எதற்குப் போதுமானது ? ஊர் ஊராகச் சென்று தாய் சேய் நலன் பேணுவதும் குழந்தைக்கு நிறையளத்தல் எனப் பல பணிகளை செய்து வருகிறோம்.

இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் தொண்டர்கள் அல்லாத வெளியாள்களை நேர்முகத் தேர்வுக்கு அழைத்து நியமனம் வழங்கி உள்ளார்கள். மூன்று மாதங்கள் பணியாற்றியவர்களுக்கும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கும் இதன் போது நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜீ.சீ.ஈ உயர்தரம் சித்தி பெற்றவர்கள், பல வருடங்கள் பணியாற்றுபவர்கள் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளனர். சுகாதாரத் திணைக்களத்தினர் தமக்கு நியமனம் வழங்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்று தொண்டர்கள் கேள்வியை எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் து.கேதீஸ்வரனிடம் கேட்ட போது,

ஒவ்வொரு சுகாதாரத் தொண்டரினதும் சேவைக் காலத்தை உறுதிப்படுத்த பட்டியல் தயாரிக்கப்படும்.

இதன்போது தொண்டர் தாம் பணியாற்றிய பிரிவின் குடும்ப நல உத்தியோகத்தரிடமோ அல்லது பொது சுகாதார பரிசோதகரிடமோ உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்றைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் இவர்கள் தொண்டராகப் பணியாற்றிய காலத்தில் பயன்படுத்திய கையேடுகளும் பரிசீலிக்கப்படும். இந்த ஆவணங்கள் கோரப்பட்ட இரண்டு வார காலப் பகுதியில் அவற்றை தொண்டர்கள் தமது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளினதும் தொண்டர் பட்டியல் ஒன்றிணைக்கப் பட்டு அவை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைகளில் காட்சிப் படுத்தப்படும். அவை உறுதிப் படுத்தப்பட்ட பின்னர் எதிர் காலத்தில் சுகாதாரத் தொண்டர்கள் உள்வாங்கப்படும் போது இவர்கள் பெயர்களும் பரிந்துரை செய்யப்படும்.

ஆனால் இனிவரும் காலங்களில் புதிதாக சுகாதாரத்தொண்டர்களாக எவரையும் இணைப்பதில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூனில் மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவே நேர்முகத் தேர்வை நடத்தியது. மூன்று மாதங்கள் பணியாற்றியவர்கள், வெளியாளர்கள் நியமனம் செய்யப்பட்டமைக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவே பொறுப்பு - என்றார். (ஐ-4)

# ஒரு நாளேயான சிசு எரியூட்டப்பட்டு புதைப்பு

## உரும்பிராயில் கொடூரம்

யாழ்பபாணம்,டிசெ.24
உரும்பிராயில் நேற்று திங்கள் கிழமை சிசுவின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. அந்தச் சிசு பிறந்த பின்னர் எரியூட்டப்பட்டே உரப்பையினுள் சுற்றப்பட்டு மண்ணுக்குள் புதைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அந்தச் சிசுவின் தாய் எனக் கருதப்படும் 24 வயதுடைய பெண் ஒருவர் உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து நேற்று முன்தினம் தொடக்கம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் போது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த சிசுவின் சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பற்றைக் காணி ஒன்றுக்குள் புதைக்கப்பட்டுள்ளது. அதனை கண்ட அயலவர்கள் அது பற்றி கிராம அலுவலர் ஊடாக கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அதனை உறுதிப்படுத்தி நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

சிசுவின் சடலம் நேற்று மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

குறித்த யுவதிக்கு மலையகத்தைச் சேர்ந்த ஒருவருடன் தொடர்பு இருந்துள்ளது என்றும், குறித்த நபர் யுவதியைக் கைவிட்டு படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே யுவதி குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர் அதனை எரியூட்டிப் புதைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (த-4)

# சாவகச்சேரி நீதிமன்று விரைவில் திறப்பு

தென்மராட்சி,டிசெ.24
சாவகச்சேரி நீதிமன்ற வளாகத் தொகுதி அடுத்த மாதம் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொ ள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 15.9 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட நீதிமன்ற வளாகத் தொகுதிக் கட்டடத்திற்கான அடிக்கல் கடந்த 2011 ஜனவரி மாதம் அப்போதைய பிரதம நீதியரசரினால் நாட்டப்பட்டது.

நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நீதி அமைச்சர் ரவுப் ஹக்கீம், பிரதம நீதியரசர் மொஹான் பீரீஸ் ஆகியோர் திறந்து வைப்பர் என தெரிவிக்கப்படுகிறது.

1984 ஆம் ஆண்டு சாவகச்சேரி நீதிமன்ற வளாகத் தொகுதி எரித்து அழிக்கப்பட்ட பின்னர் இதுவரை காலமும் தனியார் வீடுகளில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறைச் சாலைகளில் நவீன தொழில்நுட்பம்

சிறைச்சாலைகளின் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்குச் சிறைச்சாலை திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி வெலிக்கடைச்சிறைச்சாலையில் முதலில் அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பொருத்தப்படவுள்ளன.

இந்த நடவடிக்கை இந்த வாரத்தில் இடம்பெறும் எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. சிறைச்சாலையினுள் இடம் பெறும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத் தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலைக்குள்ளும் அதிநவீன தொழிநுட்பங்கள் பொருத்தப்பட உள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் 32 சிறைச்சாலைகள் உள்ள போதிலும் வெலிக்கடை சிறைச்சாலையிலேயே முதற்கட்டமாக இந்த அதிநவீன தொழில்நுட்பங்கள் பொருத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



# நியமனம் கோரி மாநகரசபை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.24
யாழ்.மாநகர சபையின் ஊழியர்கள் தமக்கான நிரந்தர நியமனம் கோரி நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
யாழ்.மாநகர சபையின் வேலைப் பகுதி மற்றும் ஏனைய பகுதிகளில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் ஊழியர்களாகக் கடமையாற்றும் 300 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இந்த ஊழியர்களே நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இது தொடர்பாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்ததாவது:-
யாழ்.மாநகர சபை ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுப்பதற்காக வட மாகாண ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் கல்வித் தகைமைக்கு அப்பால் காலத்தின் அடிப்படையில் நியமனத்தை வழங்குமாறு ஆளுநர் அனுமதித்துள்ளதால் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.
இது தொடர்பாக கொழும்பு மாநகர சபையுடனும் கலந்துரையாடியுள்ளோம். பொதுச் சேவை ஆணைக் குழுவின் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக கல்வித் தகைமையை கருத்தில் கொள்ளாமல் ஆளுநரின் அனுமதியுடன் நியமனம் வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது-என்றார்.
இந்த நியமனங்கள் வழங்கப் படுவதன் மூலம் 200 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பயனடையவுள்ளனர். (வ-14)

## வரணி மருத்துவமனைக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருக

*சுகாதார அமைச்சரிடம் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் வேண்டுகோள்*

வரணி, டிசெ.24
வரணி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் கடந்த வாரம் வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சர் பி.சத்தியலிங்கத்தை யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து குறித்த பிரதேச வைத்தியசாலையில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் குறித்த மனு ஒன்றைக் கையளித்தனர். அதுபற்றிய கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர்.
கலந்துரையாடப்பட்ட விடயங்களாவன:-
* ஆண், பெண் நோயாளர் இணைப்பு விடுதி வசதிகள் அமைத்தல்.
* அம்புலன்ஸ் நிறுத்தி வைக்கவும் அதன் சாரதி தங்குவதற்கும் அறைவசதியை ஏற்படுத்தல்.
* வைத்தியசாலை குடும்பநல சேவையாளர் தங்கி கடமை புரிய உரிய விடுதி வசதியை ஏற்படுத்தித்தரல்.
* வரணிப் பிரதேசத்தில் பின் தங்கிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களை நிறுவ ஆவன செய்தல்.
* வைத்தியசாலை உள்ளக வீதி புனரமைப்பு, மற்றும் பாதுகாப்பு வேலியை சுவராகமாற்றி அமைத்தல்.
போன்ற விடயங்களை பிரதேச நலன் கருதி நிறை வேற்றித் தருமாறு கேட்கப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் நோயாளர் நலன்புரி சங்கத்தின் சார்பில் சங்க உபதலைவர் சி.சின்னத்தம்பி, செயலாளர் சி.அருணாசலம், உப செயலாளர் செ.நவரட்ணசாமி மற்றும் நிர்வாகசபை உறுப்பினர் ம.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் குறித்த வைத்தியசா லைக்கு பயணம் மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார். (வ-122)

## தனியார் பஸ்கள் சேவைப் புறக்கணிப்பு

*எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*

யாழ்ப்பாணம், டிசெ.24
வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எதிர் வரும் 27 ஆம் திகதி மாவட்டங்களுக்கிடையில் இடம் பெறும் அனைத்து பஸ் சேவைகளையும் நிறுத்தி புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளது.
வவுனியா தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்படும் முறைகேடான போக்குவரத்துச் சேவையை நிறுத்துமாறு வலியுறுத்தியே இந்தப் புறக்கணிப்பு இடம்பெறவுள்ளதாக வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவலர் எஸ்.கெங்காதரன் அறிவித்துள்ளார்.
இதுதொடர்பாக வடமாகாண போக்குவரத்து வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர், தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் உட்படப் பலருக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, வவுனியாவுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் பரந்தன் ஊடாக நடத்தப்படும் பஸ்சேவையை நெடுங்கேணி அல்லது மாங்குளம் ஊடாக நடத்துவதற்கு வடபகுதியின் ஐந்து மாவட்டச் சங்கங்களும் ஒத்துக்கொண்ட நிலையில் வவுனியா மாவட்டச் சங்கம் இதனை இதுவரை நடைமுறைப்படுத்தாததன் காரணமாகவே இந்தச் சேவைப் புறக்கணிப்பு இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது. (க-400)

"–"


**வடமாகாண போக்குவரத்து வர்த்தக வாணி பம் மற்றும் கிராமிய அபி விருத்தி அமைச்சர், தனியார் போக்குவரத்துத்துறை அமைச் சர் உட்படப் பலருக்கும் அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது.**

## கிளிநொச்சியில் இருந்து நாளாந்தம் கோட்டைக்கு 3 ரயில் சேவைகள்

யாழ்ப்பாணம், டிசெ.24
கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டைக்கு தற்போது நாளாந்தம் 3 தடவைகள் ரயில் சேவைகள் இடம் பெற்று வருவதாக கிளிநொச்சி ரயில் நிலையத்தினர் அறிவித்துள்ளனர். ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து கடந்த 3 மாதங்களாக யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் இருந்து கொழும்புக்குச் செல்வோர் அதிகமானோர் ரயில் சேவையை தங்களின் போக்குவரத்துக்கு பயன்படுத்தி வருகின்றனர். காலை 6 மணிக்கு யாழ்.தேவி ரயிலும், பிற்பகல் 2.10 மணிக்கு கடுகதி ரயிலும் இரவு 8.30 மணிக்கு இரவு தபால் சேவை ரயிலும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தச் சேவைகளை விட பிரதி ஞாயிறு தோறும் நண்பகல் 11 மணிக்கு மாத்தறைக்கு விசேட ரயில் சேவை நடைபெற்று வருகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

## நன்னீர் மீன் விருத்திக்கு குளத்தில் மீன் வளர்ப்பு

*காக்கைதீவு குளம் ஒன்றில் 7 ஆயிரம் மீன் குஞ்சுகள் நேற்று விடப்பட்டன*




யாழ்ப்பாணம், டிசெ.24
நன்னீர் மீன் வளர்ப்புக்கென காக்கை தீவு கடற்பகுதியில் குளம் ஒன்றில் 7 ஆயிரம் மீன் குஞ்சுகள் நேற்று விடப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரி வித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
'சேவாலங்கா' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் தேசிய நீரியல் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நன்னீர் மீன்வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்காக மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கான திட்டத்தில் நேற்று காக்கைதீவு கடற்பகுதியில் ஒதுக்கப்பட்ட குளம் ஒன்றில் 7 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.
மீன்குஞ்சுகள் காலத்துக்கு ஏற்ப வளர்ச்சியடைவதற்குத் தேவையான பராமரிப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (வ-14)

"–"

**நன்னீர் மீன்வளர்ப்பை அபிவிருத்தி செய்வதற்காக மீன் குஞ்சு களை வளர்ப்பதற்கான திட் டத்தில் நேற்று காக்கைதீவு கடற்பகுதியில் ஒதுக்கப்பட்ட குளம் ஒன்றில் 7 ஆயிரம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.**

## கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு உயிர்காப்பு அங்கி கட்டாயம்



வலி.தென்மேற்கு, டிசெ.24
கடற்கலங்களுடன் தொழிலாளர்களும் படகோட்டிகளும் காப்புறுதி செய்வதுடன் தொழிலுக்குச் செல்லும்போது உயிர்காப்பு அங்கிகளும் அணிய வேண்டுமென்று கடற்றொழில் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்தத் திட்டம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.
கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய கடற்றொழில் மகா சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
கடற்றொழில் அமைச்சர் [illegible] ராஜித சேனரத்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சகல மாவட்டங்களிலிருந்தும் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
இதன்போது அமைச்சர் தெரிவித்ததாவது:
கடற்கலங்களில் கடற்றொழி[illegible]லாளர்கள் கடலில் எதிர்நோக்கிய இயற்கை மற்றும் ஏனைய இடர்களினால் கடற்றொழிலாளர்களின் உயிருக்கும் அவர்களின் உடைமை களுக்கும் பெரியளவில் பாதிப்பு ஏற்பட்டது. அந்தப் பாதிப்பு அவர்களின் குடும்பத்தினரையும் வெகுவாகப் பாதித்துள்ளது.
கடற்கலங்கள் உட்பட படகோட்டிகள் மற்றும் தொழிலாளர்கள் காப்புறுதி செய்து உயிர்க்காப்பு அங்கிகளை அணிந்திருந்தால் கடற்றொழிலாளர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.
2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதி, உயிர்காப்பு அங்கி அணிதல் ஆகியவை நடை முறைப்படுத்தவுள்ளது.
இதேவேளை, சகல வகையான இயந்திரம் இணைந்த கலங்கள் மற்றும் கடற்றொழில் கலங்களுக்குப் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கு காப்புறுதிச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்படவுள்ளது. என்றும் தெரிவித்தார். (வ-115)

## பல்கலைக்கு தகுதியானோரில் வடக்கு வரலாற்றுச் சாதனை

### ஜனாதிபதி மஹிந்த புகழாரம்



"வரலாற்றில் முதற் தடவையாக இம்முறை அதிகூடிய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்ற மாகாணமாக வடக்கு மாகாணம் திகழ்கின்றது. இன்று வடக்குப் பிள்ளைகள் கல்வியில் முன்னிலை வகிக் கின்றனர்" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புகழாரம் சூட்டியுள்ளார்.

"வடக்குப் பிள்ளைகள் இன்று கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள் ளமை கல்வித்துறைக்கு கிடைத்த பெரு வெற்றியாகும்" என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிக ளைப் பெற்ற மாணவர்கள் நேற்று ஜனாதிபதி மஹிந்த ரஜபக்ஷவை சந்தித்தனர்.

அலரிமாளிகையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன, கல்விப் பிரதிய மைச்சர் மொஹான் லால்குறே, மக்கள் வங்கியின் தலைவர், ஜனாதிபதி செயற் பாட்டுக்குழுவின் பிரதானி காமினி செனரத், கல்வியமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, கல்லூரி அதிபர் கள், குறித்த பிள்ளைகளின் பெற்றோர் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். இதன்போது கருத்து வெளியிடு கையிலேயே கல்வியமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

தெற்கிலுள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்படுவது போல் வடக்கு பாட சாலைகளுக்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதன் பிரதிபலனாக இன்று அந்தப் பிள்ளைகள் ஏனைய பிரதேசங்களுக்குச் சமாந்தரமாக கல்வித்துறையில் விசேட திறன்களை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர் என்றும் கல்வியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்,

"கொடூர தீவிரவாதத்தை இல்லா தொழித்து வடக்குக்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்ததால் அதன் பிரதிபலனாக இன்று வடக்குப் பிள்ளைகள் கல்வியில் முன்னிலை வகிக்கின்றனர். வரலாற்றில் முதற் தடவையாக ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு அதிகூடிய மாணவர்கள் தெரிவான மாகாணமாக இம்முறை வடக்கு மாகாணம் திகழ்கின்றது - என்றார்.

# தமிழக முதலமைச்சரை சந்தித்தனர் மீனவர்கள்

### இலங்கைச் சிறையில் வாடுவோரை விடுக்குமாறு வலியுறுத்தினர்



சென்னை, டிசெ.24
இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 110 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை மீனவப் பிரதிநிதிகள் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

நாகப்பட்டினத்தில் இருந்து 15 விசைப் படகுகளுடன் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற 110 பேரை, கோடியக்கரைக்கு தென் கிழக்கே கடந்த 11ஆம் திகதி இலங்கைக் கடற்படை யினர் கைது செய்தனர். அவர் கள் இலங்கையின் திரு கோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி நாகை மாவட்டத்துக்கு உட்பட்ட 9 கிராமங்களைச சேர்ந்த மீனவர்க ளும், அவர்களுக்கு ஆதரவாக 45 கிராம மீனவப் பிரதிநிதிகளும் மற்றும் காரைக்கால், புதுக் கோட்டை மாவட்ட மீனவப் பிரதிநிதிகளும் நாகையில் கால வரையற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மீனவப் பிரதி நிதிகளும், சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரும் சென்னையில் நேற்று முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து மனுவொன்றைக் கையளித்துள் ளனர்.

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள மீனவர் சங்கப் பிரதிநதிகள், "மீனவர்கள் விவகாரத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதலமைச்சர் உறுதியளிதுள்ளார். இதனால் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கை விடுவது குறித்து ஆலோசிக் கப்படும்" என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களை மீட்கக்கோரி தொடர் உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்ட 15 பெண்கள் மயக்கமடைந்துள்ளனர்.

2ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்த உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே அவர்கள் மயக்கமடைந்தனர். அதை யடுத்து அவர்கள் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டனர். எனினும் இப்போராட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 2000 பேர் தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ற)

## போரழிவுத் தகவல்களை இதுவரை வழங்காதோர் உடன் பதிவு செய்க

உள்நாட்டுப் போரினால் உயிரிழந்த மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பான தொகை மதிப்பு நடவடிக்கைகளுக்கு இதுவரை தகவல்களை வழங்காதவர்கள் உடனடியாகத் தமது கிராமசேவையாளரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் தொகை மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களம் என்பன கேட்டுக் கொண்டுள்ளன.

1982 ஆம் ஆண்டு மற்றும் அதன் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால், உயிரிழந்துள்ளவர்கள், காணாமற்போனவர்கள், காயமடைந்தவர்கள், அங்கவீனமடைந்துள்ளவர்கள், சொத்துச் சேதங்கள் தொடர்பில் தகவல்கள் சேகரிப்பதற்குக் கணக்கெடுப்பு உத்தியோகத்தர் நேற்றுத் திங்கட்கிழமை வரை, வருகை தராமல் இருந்திருந்தால் அது தொடர்பில் கிராம சேவையாளரிடம் சென்று தகவல் தெரிவிக்குமாறும், இதன் போது பாதிப்புத்தொடர்பான சகல தகவல்களையும் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அரச நிர்வாக மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் என்பன மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளன. (த-5)

## மரண அறிவித்தல்



### திருமதி பராசக்திஅம்மா தம்பிராசா

(உரிமையாளர், குமாரவேல் மருந்தகம், பருத்தித்துறை)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்திஅம்மா தம்பிராசா நேற்று (23.12.2013) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேல் தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஸ்ரீஸ்கந்தராஜா, கண்ணகை, சந்திரா, காலஞ்சென்றவர்களான தவராஜா, சிவராஜா ஆகியோரின் அன்புத் தாயும், அழகுராணி, சபாரட்ணம், பரமேஸ்வரன், கமலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும் , காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், செல்லம்மா, Dr. சபாரட்ணம், சுந்தரலிங்கம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கந்தையா மற்றும் ரூபவதி, பரமேஸ்வரி, பரமசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜேந்திரன், கயல்விழி, எழிலரசி, மதுரா, மாதுளா, தீபன், சஞ்சீவ், கோபிகா ஆகியோரின் அன் புப் பேர்த்தியும்,அபிநயன், தாரணி, மேனன், நிலானி, ஆரபி, சுரபி, ராகவேந்தன், அபூர்வன், நிலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24/12/2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

689, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 8126

## மீனவர்களுடன் புதுடில்லிக்கு சென்று தீர்வுக்கு வலியுறுத்த வேண்டும் 'ஜெ'

### பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, டிசெ.24
அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா புதுடில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும்படி வலியுறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

"வங்கக்கடலில் மீன் பிடிப்பதற்காகச் செல்லும் தமிழக மீனவர்களைச் சிறை பிடித்துச் செல்வது தான் இலங்கை இராணுவத்தின் வாடிக்கையாகி விட்டது.

அதிலும் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய் வது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இலங்கைச் சிறைகளில் வாடும் 210 தமிழக மீனவர்களை விடுவிக்கவும், அவர்களுக்கு சொந்தமான 70 படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக் கும்படி மத்திய, மாநில அரசு களுக்கு அரசியல் கட்சிகள் பலமுறை கோரிக்கை விடுத் தன. மீனவர்களும் கடந்த 11 ஆம் திகதி முதல் கால வரையற்ற வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், அவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்ற இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. தமிழக முதல மைச்சரோ மீனவர்கள் கைது செய்யப்படும் போதெல்லாம் பிரதமருக்கு கடிதம் எழுது வதுடன் தமது கடமை முடிந்து விட்டதாக நினைத்துக் கொள் கிறார். இதுவரை 35 முறை பிரதமருக்கு முதல்வர் கடிதம் எழுதியும் பயனில்லை.

மீனவர்கள் போராட்டங்களை நடத்துகின்றபோதும் இதுவரை அரச தரப்பிலிருந்து எவரும் அவர்களைச் சந்தித்துக் குறைகளை கேட்கவில்லை. மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் நாகையைச் சேர்ந்தவர் தான். அவர் நாகப்பட்டினத்தில் தான் இருக்கிறார் என்ற போதிலும் மீனவர்களைக் சந்தித்து, குறை களைக் கேட்க முயற்சி செய்ய வில்லை.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவும், அவர்களின் படகுகளை மீட்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக தமிழகத்திலிருந்து எழுப்பப்படும் குரல்களை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவு டன் முதல மைச்சர் ஜெயலலிதா புதுடில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும்படி வலியுறுத்த வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## மரண அறிவித்தல்

### வைரமுத்து சிவலிங்கம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு -05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சிவலிங்கம் நேற்று (23.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பருத்தித்துறையைச் சேர்ந்த வைரமுத்து - பருவதம் தம்பதியரின் அன்புமகனும் மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவசுவாமி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் சிவலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும் சாந்தகுமாரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை ஒட்டுமடம் இன்பம் அந்தியகால மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 4.30 மணிக்கு தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 56 மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
215, C 3/8, அண்டர்சன் தொடர்மாடி கொழும்பு - 05.

தகவல்:
மனைவி, மகன்
077 5474143

## சங்கக் கிளைகளின் இலாபம் பகிர்வு

பளை, டிசெ.24

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்கக் கிளைகளில் கிடைக்கும் இலாபத்தை கிளையின் அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் புதிய செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நுகர்வோர் கூட்டுறவின் மூலாதாரத்திட்டத்தின் கீழ் இலாபத்தை அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டத்தை முதன்முறையாக ஆரம்பித்து கிளைக் கடைகளில் திட்டம் தொடர்பான அறிவித்தல்களையும் மக்களுக்கு காட்சிப்படுத்தியுள்ளனர்.

சங்கக்கிளைகளில் நடைபெறும் விற்பனையில் கிடைக்கும் இலாபத்தை பகிர்ந்தளித்து அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சங்க இயக்குநர் சபையில் தீர்மானிக்கப்பட்டு. புதிய செயற்றிட்டம் கிளைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் க.தியாகராசா தெரிவித்தார். (வ-9)



யாழ்.பருத்தித்துறைக் கடற்கரை வீதியில் சக்கோட்டையில் அமைந்துள்ள வெள்ள வாய்க் கால் தற்போது திருத்தப்பட்டு வருகிறது. இவ்வாய்க்கால் இவ்வீதியூடாக சக்கோட்டைப் பிள்ளையார் கோயில் வரை திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. (வ-51)

## இருளில் மூழ்கிய இடிகுண்டு வீதி

யாழ்ப்பாணம், டிசெ.24

**வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கட்டுடை இடிகுண்டு வீதிக்கு மின்சார வசதி செய்யப்படவில்லை.**

மேற்படி கட்டுடை இடிகுண்டு ஆனது கட்டுடை நவாலி-மானிப்பாய்க்கான பிரதான வீதி உள்ளது.

எனவே வீதியால் பயணம் செய்வோர் இருளில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் ஆபத்தான நிலையிலேயே செல்ல வேண்டியுள்ளது.

இதேவேளை இடிகுண்டு வீதிக்கு மின் வழங்குமாறு கோரி கடந்த காலங்களில் 5 இற்கும் மேற்பட்ட கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் இது வரை மின்வழங்கவில்லை.

கடந்த காலங்களில் இடிகுண்டு வீதிக்கு மின்சாரம் வழங்குமாறு கோரியதற்கு அதற்கு அருகில் உள்ள தூக்குணி ஆலயத்துக்கு இணைப்பு வழங்கி விட்டு மின்சார சபையினர் சென்றுள்ளனர்.

**வீதியால் பயணம் செய்வோர் இருளில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்வதுடன் ஆபத்தான நிலையிலேயே செல்ல வேண்டியுள்ளது.**

கட்டுடை இடிகுண்டு வீதிக்கு மின் இணைப்பை வழங்குமாறு வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரியூடாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக கொழும்பு பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் கவனத் துக்கு கொண்டு வரப்படவுள்ளது. (வ-50)

# இயற்கை அழிவால் பயிரழிவுகளை எதிர்நோக்கியோருக்குக் கடனுதவி

### *இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்புக் கடன் ஆலோசகர் தெரிவிப்பு*

அச்சுவேலி, டிசெ.24

பயிர்ச் செய்கை நடவடிக்கையில் இயற்கை இடர், நோய்த் தாக்கம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டு வருமான இழப்புக்கு உள்ளாகிய விவசாயிகள் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதன் மூலம் தவணை தப்பிய கடன் தொகை இரண்டு வருட காலப்பகுதியில் தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்துவதற்கு உரிய சலுகையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் கிராமிய கொடு கடன் திட்டத்தின் கீழ் கடனுக்கு விண்ணப்பித்து கடனைப் பெற்று தொழில் முயற்சி நடவடிக்கைக்கு பயன்படுத்தலாம்.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு கடன் ஆலோசகரும் கடன் குழுக்களின் தலைவருமான ஆர்.ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

தவணை தப்பியகடன் மற்றும் மீண்டும் தொழில் முயற்சிக்காகக் கடன் பெறல் தொடர்பாக ஆர்.ஸ்ரீபத்மநாதன் மேலும் கூறியதாவது:

வடபகுதியில் போர் முடிவடைந்து அமைதி ஏற்பட்ட காலச் சூழலில் பல்வேறு வங்கிகளும் நிதி நிறுவனங்களும் போட்டி நிலையில் கடன்களை வழங்கியுள்ளன.

அதேநேரத்தில் மழை வெள்ளம், காலம் தப்பிய மழை, பயிர்களில் ஏற்பட்ட நோய்த் தாக்கம் போன்ற அசாதாரண நிலைமைகளால் விவசாயிகள் வருமான இழப்புக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளாகி உள்ளனர்.

பலர் ஒரே தேவைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கடன் பெற்றுள்ளனர். ஒரு சிலர் பெற்ற கடனை உரிய தேவைக்குப் பயன்படுத்தாமல் ஆடம்பரத் தேவைக்கும் வேறு தேவைக்கும் பயன்படுத்தி கடனாளியாக உள்ளனர்.

விவசாயிகள் பருவ கால பயிர்ச் செய்கைக் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பயிர்ச் செய்கை முயற்சியில் மீண்டும் ஈடுபட முடியாமல் அல்லற்படுகின்றனர்.

இயற்கை இடர் மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க காரணிகளால் பாதிப்புக்கு உள்ளாகி வருமான இழப்புக்கு உள்ளாகியவர்கள் வங்கி முகாமையாளர்களை நேரில் சந்தித்து தமது பாதிப்பை எழுத்து மூலம் சமர்ப்பித்து கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இரண்டு வருட காலத்தைப் பெற்றுக் கொள்வதோடு குறித்த கால இடைவெளியில் தவணை ரீதியாகக் கடனைத் திருப்பிச் செலுத்தலாம். அத்துடன் மீண்டும் கடன் பெறுவதற்கு உரிய முறையில் விண்ணப்பித்து கடன்பெற்று தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

வங்கி முகாமையாளர் வாடிக்கையாளரின் நம்பிக்கை மற்றும் களநிலையைக் கருத்திக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்வார். இந்த நடைமுறை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட 23 வங்கிகளுக்கும் ஏற்புடையது என்று தெரிவித்தார். (வ-11)

**தமது பாதிப்பை எழுத்து மூலம் சமர்ப்பித்து கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இரண்டு வருட காலத்தைப் பெற்றுக் கொள்வதோடு குறித்த கால இடைவெளியில் தவணை ரீதியாகக் கடனைத் திருப்பிச் செலுத்தலாம்.**

## சைக்கிள் திருட்டு

வலி.தென்மேற்கு, டிசெ.24

காலஞ்சென்ற ஒருவரின் நினைவாக மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மதிய போசன நிகழ்வில் கலந்து கொண்ட ஒருவர் பல ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளை இழந்துள்ளார். சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திய திருடன் அவரது சைக்கிளை இலாவகமாக எடுத்துச் சென்றுள்ளான். கடந்த மாதம் இறந்துபோன வீதிஒப்பந்த வேலை செய்யும் மானிப்பாயைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரின் 31 ஆவது நாள் சிரார்த்த தினத்தை முன்னிட்டு மானிப்பாயிலுள்ள வலிதென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் மதிய போசன நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற ஒருவர் சைக்கிளை மண்டபத்துக்கு வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்று மதிய போசனத்தில் கலந்துவிட்டு வெளியே வந்த போது சைக்கிளைக் காணாது அதிர்ச்சிக்குள்ளானார். (வ-115)


## துறைமுகத்தில் இடம் இல்லை; 30 நிமிடம் கடலுக்குள் குமுதினி

*நெடுந்தீவில் இருந்து நேற்று திங்கட்கிழமை காலை குறிகாட்டுவானுக்குப் பயணிகளுடன் வந்த குமுதினி படகு குறிகாட்டுவான் துறைமுகப் பாலத்தில் நிறுத்த முடியாததால் 30 நிமிடங்களுக்கு மேல் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குறிகாட்டுவான் துறைமுகப் பாலத்தில் நயினாதீவுப் படகுகள் மக்கள் வந்து சேரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டு காத்திருந்ததாலேயே குமுதினிப் படகைத் துறைமுகப் பாலத்தில் அணைக்க முடியாத நிலை ஏற்பட்டது.*

*நெடுந்தீவுப் படகு வரும்போது துறைமுகப் பாலத்தின் மேற்குப் பகுதியில் உள்ள அனைத்துப் படகுகளும் அப்புறப்படுத்தப்பட்டு அதற்கு வழிவிட வேண்டும் என்ற நியதி அடிக்கடி மீறப்படுவதுடன் இது தொடர்பாக துறைமுகப் பகுதியில் உள்ள படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி தீர்வு எட்டப்பட்டது. எனினும் இந்த முடிவின் படி நெடுந்தீவுப் படகுகளுக்குரிய பகுதியை படகு வரும் போது விட்டுக் கொடுத்துப் பயணிகள் இறங்க இடம் கொடுக்காது கடலில் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாகக் காத்திருக்க வைக்கும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. இதனால் நோயாளர்கள் மற்றும் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொண்டு அன்றைய தினமே நெடுந்தீவுக்குச் சென்றுவிடலாம் என்ற நோக்குடன் அதிகமானோர் இரவு யாழ்.நகரில் தங்கி நின்று மறுநாளே தமது பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. தென்பகுதியில் இருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்காகவும் அவர்களைத் தாமதப்படுத்தாது நயினாதீவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற நோக்குடனேயே அங்கே பணியில் உள்ளவர்கள் அன்றாடம் செயற்படுகின்றனர்.*

*சில சமயங்களில் நயினாதீவுக்குச் செல்லும் பயணிகள் நெடுந்தீவுக்கான படகுகளில் ஏறுவதும் படகு புறப்பட்டுச் செல்லும்போது கடலில் வைத்து நாம் நயினாதீவுக்குப் போக வேண்டும் என்று கூறி படகைத் திரும்ப குறிகாட்டுவான் துறைமுகத்துக்குச் செல்ல வைப்பதன் மூலம் நெடுந்தீவு மக்களை மேன்மேலும் சிரமப்படுத்தும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. நிலைமையைப் புரிந்துகொள்ளாத பயணிகள் சிலர் படகோட்டிகளைக் குறை கூறித் திருப்தியடைவதும் உண்டு. அதிகாரிகளும் மாகாண சபையும் இது விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (வ-7)*

## சன சமூக நிலையத்தின் அவலநிலை



தென்மராட்சி, டிசெ.24

சிறப்புடன் இயங்கி வந்த சாவகச்சேரி பெரிய அரசடி சன சமூக நிலையம் சிதைவடைந்து காணப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். ஏ-9 வீதியின் அருகில் காணப்படும் இந் தச் சனசமூக நிலையத்தை பெருமளவு மக்கள் பயன்படுத்தி வந்தனர்.

2000 ஆம் ஆண்டு போர் வேளையில் சேதமடைந்த குறித்த நிலையம் புனரமைக்கப்படாத நிலையில் நீண்ட காலமாக மூடப்பட்டு காணப்படுகிறது.

சேதமடைந்து காணப்படும் நிலையக் கட்டடத்தைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (வ-9)

# சீனா மீண்டும் ஊடுருவல்

## *காஷ்மீரில் மீண்டும் பதற்றம்*

புதுடில்லி, டிசெ.24
இந்திய எல்லைப் பகுதிக்குள் சீன இரணுவ வீரர்கள் மீண்டும் அத்துமீறி நுழைந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அதையடுத்து காஷ்மீரில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சேப்சி மற்றும் லடாக் பகுதிகளில் கடந்த வாரம் நுழைந்த 20 சீன வீரர்கள் அங்கு கூடாரங்களை அமைத்திருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளபோதும், இந்திய இராணுவம் அதுகுறித்து உறுதிப்படுத்தவில்லை.

நேற்றுமுன்தினம் இந்திய -சீன இராணுவ அதிகாரிகளுக்கிடையே பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கும் நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. அதையடுத்து லடாக் பகுதிளில் பதற்றம் நிலவுவதுடன், மக்கள் அச்சத்துடன் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.



கடந்த ஏப்ரல் மாதம் சீன இராணுவ வீரர்கள் இந்திய எல்லைப் பகுதியில் நுழைந்து கூடாரம் அமைத்தமை இரு நாடுகளுக்கிடையில் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. அதன்பின்னர் இரு தரப்பு இராணுவ அதிகாரிகளும் பலமுறை சந்தித்து பேச்சு நடத்திய பின்னரே சீன வீரர்கள் அந்த இடத்தை விட்டு பின்னகர்ந்தனர். (ற)

# இந்திய வடமாநிலங்களில் கடும் பனிப் பொழிவு

புதுடில்லி, டிசெ.24
இந்தியாவின் வட மாநிலங்களில் கடும் குளிர் நிலவுவதால் மக்களின் அன்றாடப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பனிச்சரிவு ஏற்பட்டதில் இரு இளம் பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

பாண்டிபோரா மாவட்டத்தை சேர்ந்த இந்த பெண்கள் ஆற்றில் நீர் எடுக்கச் சென்ற போது இந்த விபத்து நடந்துள்ளது. மாநில தலைநகர் ஸ்ரீநகர் பகுதியில் வெப்பநிலை -3 செல்சியஸுக்கும் கீழ் சென்றுள்ளதால் சாலைகளில் பனிக் கட்டிகள் உருவாகியுள்ளன.

இதனால் ஸ்ரீநகர் ஜம்மு நெடுஞ்சாலையில் போக்குவரத்து தடைப்பட்டது. டெல்லியிலும் இரண்டாது நாளாக கடும் குளிர் நிலவியது. சிம்லா, மணாலி உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத்தளங்களில் அதிகளவு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

காற்றில் ஈரப்பதத்தின் அளவு அதிகரித்துள்ளதாக வானிலை மையம் அறிவித்துள்ளது. (ற)

# குமரிமுத்து காலமானார்



சென்னை, டிசெ.24
நகைச்சுவை நடிகர் குமரிமுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

45 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் சினிமாவில் நடித்துள்ள குமரிமுத்து 500க்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்துள்ளார். தனது வித்தியாசமான சிரிப்பினால் மக்களைச் சிரிப்பூட்டிப் பிரபல்யமானவர்அவர்.

ஆரம்ப காலத்தில் மேடை நாடகங்களில் நடித்து வந்தவர் 1960ஆம் ஆண்டு சினிமாவில் நடிக்க ஆரம்பித்து 4 தலைமுறை நடிகர்களுடன் நடித்துள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜனி, கமல், அஜித், விஜய் எனப் பல முன்னணி நடிகர்களின் படங்களிலும் நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். (ற)

# பீகார் முதலமைச்சர் மீது செருப்பு வீசித் தாக்குதல்


முஷாபர்பூர், டிசெ.24
பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி ஒன்றில் அவர் மீது செருப்பு வீசப்பட்டதை அடுத்துப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பீகார் மாநிலம் முஷாபர்பூர் அருகே உள்ள பெகுசராய் என்ற இடத்தில் ஐக்கிய ஜனதா தள கட்சியின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் நிதிஷ் குமார் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அங்கு அவர் "மோசமான சட்டம் ஒழுங்கு நிலை மற்றும் நிர்வாக திறமையின்மையை பீகாரில் ஏற்படுத்த பழைய கூட்டாளிகள் (காங்கிரஸ் – ஆர் ஜேடி) மீண்டும் ஒன்றிணைந்து வருகின்றன. ஆர். ஜே.டி. - காங்கிரஸ் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது மாலையில் சூரியன் மறைந்த பின்னர் தாங்கள் கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வீட்டை விட்டு வெளியே வரவே மக்கள் பயந்தார்கள். பீகார் மாநிலத்தை 15 ஆண்டுகளாக மோச மான நிலையில் வைத்திருந் ததற்கு காங்கிரஸ் மற்றும் ஆர்.ஜே.டி. ஆகிய இரு கட்சிகளுமே பொறுப்பு" என்று தெரிவித்தார்.

அவ்வாறு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது நிதிஷ் குமாரை நோக்கி கூட்டத்திலிருந்து செருப்பு ஒன்று வீசப்பட்டது. ஆனால் அந்த செருப்பு அவர் மீது படவில்லை. எனினும் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.

பெருந்திரளான மக்கள் திரண்டிருந்ததால், செருப்பு வீசியவரைப் பொலிஸாரால் கண்டு பிடிக்க முடியவில்லை. (ற)




ஜிசாட்-14 தொலைத் தொடர்பு செயற்கைக் கோள் எதிர்வரும் ஜனவரி மாத முதல்வாரம் விண்ணுக்குச் செலுத்தப்படும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) அறிவித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் விண்ணில் செலுத்தப்படவிருந்த இந்த செயற்கைக்கோள், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இறுதி நேரத்தில் நிறுத்தப்பட்டது. தற்போது அவை சரி செய்யப்பட்டுள்ள நிலையில் ஜனவரி 5ஆம் திகதி பிற்பகல் செயற்கைக் கோள் விண்ணுக்குச் செலுத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. (42348) (12.3.6)

தொடர்பு: 077 711 1400

**அறைகள் வாடகைக்கு**

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடி முன்பாக சகல வசதிகளும் உள்ள அறைகள் வாடகைக்குண்டு. பெண்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு:077 837 9401, 021 222 1171 (42936)(4.6.3)

**காணி விற்பனைக்கு**

பொற்பதி றோட், அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 3¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

(42933) தொடர்புக்கு: 077 711 1400

**வேலைவாய்ப்பு**

கணினி தட்டெழுத்தாளர் மற்றும் உதவியாளர் உடன் தேவை.
ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங்சென்ரர் பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
021 222 0231, 077 617 6794 (42927)(4.6.3)

**கடமை நிறைவேற்றும் உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்) நியமனம்**

மடுவலயக்கல்விஅலுவலகத்தில் காணப்படும் கடமை நிறைவேற்றும் உதவிக்கல்விப்பணிப்பாளரு(தமிழ்)க்கான பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் (மன்னார் வலயம்,மடு வலயப்பாடசாலைகள்) கடமையாற்றும் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

01.இலங்கை அதிபர் சேவை I, இலங்கை அதிபர் சேவை 2-I மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை I ஐச் சேர்ந்தவர்கள்.
02.தொழில் தகைமைகள்:- கல்வி முதுமாணி/கல்வி தத்துவமாணி/ பட்டமேற்கல்வி டிப்ளோமா/பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்/ கல்வியியற்கல்லூரி டிப்ளோமா.

மேலதிக தகவல்களுக்கு மடு வலயக்கல்விப்பணிமனையின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்(நிர்வாகம்) அவர்களிடம் தொடர்பு கொள்ளவும்.(தொ.பே இல:-0234920439).மாதிரிப்படிவத்தை மடு வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 03/01/2014 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளர்,மடு வலயக்கல்வி அலுவலகம், ஆண்டாங்குளம், அடம்பன் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஏ.ஜே.குரூஸ்,
வலயக்கல்விப்பணிப்பாளர், மடு வலயம். (சி/10653)(4.6.3)

# நனைந்து போன ஊசிப் பட்டாசு லாலு

## *யஷ்வந்த் சின்ஹா கிண்டல்*

புதுடில்லி, டிசெ.24
ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தலைவர் லாலு பிரசாத் நனைந்து போன ஊசி பட்டாசு என்று கிண்டலடித்துள்ளார் பா.ஜ.க. மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா.

கால்நடை தீவன ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த லாலு பிரசாத் யாதவ், கடந்த சில தினங்களுக்கு முன்பு விடுதலை செய்யப்பட்டார். வெளியே வந்தவுடன் மதவாதசக்திகள் ஆட்சிஅமைக்க ஒருபோதும் ஆதரவளிக்க முடியாது என்றும், ராகுல் தான் பிரதமர் பதவிக்கு தகுதியானவர் என்றும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே யஷ்வந்த் சின்ஹா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பீகார் முதல்வர் நிதிஷ்குமார் உள்பட பலரும், நடப்பு அரசியல் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கின்றனர். அதில் லாலுவும் ஒரு ரகம். அவர் தற்போது நனைந்து போன வெற்று ஊசி பட்டாசு போன்றவர். அவரது பேச்சு இன்றைய அரசியல் நிலைவரத்தில் எடுபடாது.

மோடியின் அறை கூவல் காரணமாக ஜார்கண்டில் காணப்பட்ட ஸ்திரமற்ற தன்மை மாறி ஒரு கட்சி ஆட்சி அமையும்" என்றுதெரிவித்துள்ளார் அவர்.(ற)

# மக்களை ஏமாற்றுகிறது ஆம் ஆத்மி

புதுடில்லி, டிசெ.24
புதுடில்லியில் காங்கிரஸ் ஆதரவுடன் ஆம் ஆத்மி ஆட்சியமைப்பது மக்களை ஏமாற்றும் செயல் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ஜ.க மூத்த தலைவர் ஹர்சவர்த்தன்.

புதுடில்லியில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிராகக் கோஷமிட்ட ஆம் ஆத்மி கட்சி ஊழல் புரிந்த காங்கிரசுடன் அதிகாரத்திற்காக கூட்டு வைத்துள்ளது என்று அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார். (ற)

# மீண்டும் வெடித்தது போராட்டம்

## *தாய்லாந்தில் தொடர்கின்றது பதற்றம்*

பாங்ஹொக், டிசெ.24
தாய்லாந்தில் அரசுக்கு எதிரான போராட்டம் ஞாயிற்றுக் கிழமை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

தாய்லாந்தில் ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் அரசுக்கு எதிராக கடந்த ஒரு மாதமாக எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளில் இருந்து விலகினர். அதையடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்த பிரதமர் யிங்லக் ஷினவத்ரா முன்வந்தார்.

எனினும் அதை ஏற்றுக்கொள்ளாத போராட்டக்காரர்கள் பிரதமர் தனது பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கோரி போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அந்தநிலையில் அந்த நாட்டு மன்னரின் 86ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு போராட்டத்தை எதிர்க்கட்சிகள் ஒத்திவைத்தன.

மன்னர் பூமிபோல் அதுல்ய தேஜ், "மக்கள் போராட்டத்தை கைவிட்டு அமைதியான முறையில் அரசுடன் தீர்வு



காண வேண்டும்" என வலியுறுத்தியிருந்தார்.

பிரதமர் யிங்லக் ஷினவத்ரா எதிர்வரும் பெப்ரவரி மாதம் தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளதுடன், காலவரையற்ற போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. அதையடுத்து தலைநகர் பாங்ஹொக்கில் ஆயிரக்கணக்கானோர் கடந்த ஞாயிற்றுக் கிழமை திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து போராட்டக் குழுத் தலைவர் தாங்க்ஸ்பான் கூறுகையில், "இங்கு நடைபெறும் பேரணி அரசுக்கும், பிரதமருக்கும் நெருக்கடியை ஏற்படுத்தும்" என்று தெரிவித்துள்ளார்.

அதையடுத்து தாய்லாந்தில் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

### தென் சூடானில் இருந்து வெளியேறுகிறது ஐ.நா.

ஜோங்லி, டிசெ.24
தெற்கு சூடானில் நடைபெற்று வரும் மோதல்கள் காரணமாக அங்குள்ள ஐ.நா. ஊழியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

தலைநகர் ஜோங்லி பகுதியில் பணியாற்றி வந்த ஐ.நா. ஊழியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் பாதுகாப்புக் கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தெற்கு சூடானில் டிசெம்பர் 15ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் சண்டையால் அங்கு 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அந்தப் பகுதியில் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர கூடுதல் படைகளை அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உத்தரவு பிறப்பித்துள்ளார். (ற)

### நடப்பாண்டில் ஊடகவியலாளர்கள் 126 பேர் சாவு

லண்டன், டிசெ.24
நடப்பாண்டில் சர்வதேச ரீதியில் பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடக பணியாளர்கள் என 126 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச தகவல் பாதுகாப்பு அமைப்பு மேற்கொண்ட புதிய ஆய்வு ஒன்றிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

பத்திரிக்கையாளர்களுக்கு ஆபத்தான நாடுகள் வரிசையில் முதல் இடத்தில் சிரியா உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இடம் பிடித்துள்ளன.

சிரியாவில் நடப்பாண்டில் 19 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. குறைந்தது 18 வெளிநாட்டு பத்திரிக்கையாளர்கள் மற்றும் 20 சிரியா நாட்டை சேர்ந்த பத்திரிக்கையாளர்கள் ஆகியோர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் சிறை பிடிக்கப்பட்டோ அல்லது கடத்தப்பட்டோ உள்ளனர் என்று அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது. (ற)

## தொலைக்காட்சி பார்ப்பதற்கு இடையூறு: குழந்தையை அடித்துக் கொன்ற இளைஞன்

நியூயோர்க், டிசெ.24
தொலைக்காட்சியில் உதைபந்தாட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது இடையூறு விளைவித்தமைக்கான குழந்தையை அடித்துக் கொன்றுள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்.

அமெரிக்காவில் ஒக்லஹோமாவை சேர்ந்தவர் 22 வயதான டிரிவியான்ஸ் மார்கஸ் வோல்கர். அவர் தீவிர உதைபந்தாட்ட இரசிகர். சம்பவத்தன்று இவர் தனது காதலி வீட்டுக்கு சென்று இருந்தார். அங்கு தொலைக் காட்சியில் நேரடியாக ஒளிபரப்பான உதைபந்தாட்டத்தைப் இரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது காதலியின் 5 மாத ஆண் குழந்தை தொடர்ந்து அழுது கொண்டே இருந்தது. சமாதானம் செய்தும் அழுகையை நிறுத்தவில்லை. அது வோல்கருக்கு பெரும் தொந்தரவாக இருந்தது. அதனால் ஆத்திரம் அடைந்த வால்கர் காதலியின் கையில் இருந்த குழந்தையைத் திடீரென பறித்தார். 2 அடி உயரத்துக்கு தூக்கிப் பின்னர் தரையில் வீசினார்.



அதனால் குழந்தையின் தலையில் காயம் ஏற்பட்டது. காதில் இருந்து இரத்தம் வழிந்தது. மயங்கிய நிலையில் இருந்த குழந்தையை மருத்துமனைக்குக் கொண்டு ஓடினார் காதலி. ஆனால் அந்தக் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டது என்று மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர்.

அதையடுத்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து வோல்கரை கைது செய்தனர். விசாரணையின்போது, உதைபந்தாட்டத்தைப் பார்க்க விடாமல் தொடர்ந்து தொந்தரவு செய்ததால் ஆத்திரத்தில் குழந்தையை அடித்து கொன்றேன் என்று தெரிவித்துள்ளார் வோல்கர். (ற)

### சிரியாவில் விமானத் தாக்குதல்: 44 பேர் சாவு



அலப்போ, டிசெ.24
சிரியாவின் அலப்போ நகர் மீது சிரிய இராணுவத்தினர் நடத்திய விமானத் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்தின் படைகள், கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள அலெப்போ நகரை கைப்பற்றுவதற்காக கடந்த 15ஆம் திகதி முதல் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றன. சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் கிளர்ச்சியாளர்களைப் பலவீனமானவர்களாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

8ஆவது நாளான நேற்று மசாகென் ஹனானோ என்னுமிடத்தில் சந்தை, சாலைகள் மற்றும் கட்டிடங்கள் மீது கடும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 44 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பிரிட்டனை சேர்ந்த மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன. (ற)

## நமீபியா விமான விபத்து: திட்டமிட்டே நடைபெற்றது

### *விசாரணைகளில் அம்பலம்*

நமீபியா, டிசெ.24
நமீபியாவில் நிகழ்ந்த விமான விபத்தை அதன் விமானி உள்நோக்கத்துடனேயே ஏற்படுத்தியதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கிலிருந்து கடந்த மாதம் 29ஆம் திகதி அங்கோலாவுக்கு புறப்பட்டுச் சென்ற விமானம் நமீபியாவின் வப்வாட்டா தேசியப் பூங்கா அருகே திடீரென விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 6 விமானப் பணியாளர்கள் உட்பட 33 பேர் உயிரிழந்தனர். அந்த விபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

இந்த நிலையில், விமான கருப்புப் பெட்டியில் பதிவான தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணையில் பைலட் உள்நோக்கத்துடனேயே விபத்தை உண்டாக்கியுள்ளமை அம்பலமாகியுள்ளது.

இது குறித்து மொசாம்பிக் விமானப் போக்குவரத்து ஆணையத்தலைவர் ஜோயோ அப்ரியூ தெரிவிக்கையில்,

"அந்த விமானத்தை விமானி சந்தோஷ் பெர்னாண்டஸ் கீழே இறக்குவதற்குக் கையாண்ட விதம் விபத்தை ஏற்படுத்தும் நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் பின்னணியில் உள்ள காரணம் என்ன என்று தெரியவில்லை. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

விமானி யாரையும் உள்ளே விடாமல் தனது அறையைப் பூட்டியதுடன், எச்சரிக்கை சமிக்ஞைகளையும் கவனத்தில் கொள்ளவில்லை." என்று தெரிவித்துள் ளார். (ற)

## பிரேஸில் பஸ் விபத்து: 14 பேர் சாவு



பரிஸ், டிசெ.24
பிரேஸிலில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பிரேஸிலின் சவோ பாவ்லோ நகர தேசிய நெடுஞ்சாலையில் இந்த விபத்தில் இடம்பெற்றுள்ளது. பிரேஸிலின் தென்பகுதியான குரிடிபா நகரில் இருந்து, ரியோடி ஜெனிரோவிற்கு சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து இடம்பெற்றபோது, குறித்த பஸ்ஸில் 50 பேர் வரையில் பயணித்துள்ளனர். விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. பொலிஸார் முதற்கட்ட விசாரணைக்களை ஆரம்பித்துள்ளனர். (ற)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES – VAVUNIYA CAMPUS

Applications are invited by me up to 24th January, 2014 from suitably qualified applications for the following posts:

**1. UNIVERSITY MEDICAL OFFICER**

1. The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**NOTE:** One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale**: U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.

**Selection By** : Interview.

**2. NURSING OFFICER, GRADE II**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

AND

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

**3. SUPERVISOR (LANDSCAPE), LOWER GRADE**

**Qualifications:**

i) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings

AND

ii) Successful completion of one year's practical training course in Agriculture conducted by the Department of Agriculture or equivalent.

**Salary Scale** : U-MN1 (III A) - Rs.16,070-17x155-18,705 p.m

**Selection** : By Aptitude Test and Interview

**4. CURATOR (LANDSCAPE) GRADE III**

**Qualifications:**

i. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology &Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/ Forestry from a recognized university/HEI with not less than one (01) year of experience in Landscaping in a State/Corporation or reputed Private sector organization in supervisory capacity

OR

ii. Should possess a four year special Degree in Botany of a recognized university/HEI with not less than two (02) years of experience in landscaping in State/Corporation or reputed Private sector organization in supervisory capacity

**Salary Scale**: U-EX 1(II) Rs.26, 020-3x585-27,775(EB) 28,420; 6x645; 6x585-35,800 p.m

**Selection**: by a structured interview.

**5. ENGINE – CUM – PUMP DRIVER, GRADE II**

**Qualifications** :

i. Pass in the 8th standard.

ii. Should be conversant with –

a) Reading scale 1/32" and recording factional dimensions, operation of engines, pump, routine adjustments and maintenance including oil fitters;

b) Use of feeler gauges, reading and understanding pressure and temperature gauges;

c) Carrying out minor repairs, repairing, placing and fitting working parts of pumps and engines.

iii. Not less than 2 years' experience as a Pump Driver in a Government Department, State Corporation or in a recognized engineering establishment.

Salary Scale : U-PL 3(III) Rs.15, 650 – 16 x 140 – 17,890 p.m

Selection : By Trade Test and Interview

**6. ELECTRICIAN, GRADE II**

**Qualifications:**

i. Pass in the 8th standard.

ii. Should be conversant with

a) Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses various types of wiring, joining, testing meters and small transformers ;

b) Reading and understanding drawings and diagrams. Reading scales and record fractional dimensions;

c) Care and the use of the tools in the trade.

iii. Not less than 2 years' experience as an electrician in a government department, State Corporation or in a recognized establishment.

Salary Scale : U-PL 3 (III) Rs.15, 650 – 16 x 140 – 17,890 p.m

Selection: By Trade Test and Interview

**AGE LIMIT: Not more than 45 years for the above all posts.**

**NOTE: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.**

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non – Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m. in size. Only Applications sent on the specified form will be accepted.

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR**
**24/12/2013**

(C/10655)(10.6.3)

BEACON
வதிரி கரவெட்டி
A/L 2016
கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவு
ஆரம்பம் - 28.12.2013
சனி காலை 8.30 மணி
வழமையான ஆசிரியர்கள் நிர்வாகி.
(43020)(10.6)

சேவை நலன் பாராட்டும்
பிறந்தநாள் வாழ்த்தும்



திரு. வேலாயுதம் இதயராசன் - Linesman

அகவை அறுபதில் கால்பதிக்கும் திரு.வேலாயுதம் இதயராசன் அவர்கள் எமது அலுவலகத்தில் கடமையுணர்வோடு 36வருடங்களாக சேவை யாற்றி இன்று (24.12.2013) ஓய்வுபெற்றுச் செல்கின்றார்.
அவரது சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பச்சிலைப்பள்ளி,
பிரதேசசபை, பளை.

செயலாளர்
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

கற்றுக் கொண்ட பாடம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு

உள்நாட்டு யுத்தத்தினால் உயிரிழந்த / காயமடைந்த நபர்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பான தொகைமதிப்பு – 2013

1982 மற்றும் அதன் பின்னர் இடம்பெற்றஉள்நாட்டுயுத்தம் காரணமாகதங்களதுகுடும்பத்தில் எவராவது
- உயிரிழந்துள்ளார்களா?
- காணாமல் போயுள்ளார்களா?
- காயமடைந்துள்ளார்களா?
- அங்கவீனமடைந்துள்ளார்களா?
- தங்கள் குடும்பத்தில் எவருக்காவதுசொத்துச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதா?




2013 டிசம்பர் 23ஆம் திகதிவரைஉங்கள்
குடும்பத் தகவல்களைச்
சேகரிப்பதற்குகணக்கெடுப்புஉத்தியோகத்தர்
சமுகமளிக்கவில்லையெனின்,
கிராமஉத்தியோகத்தரைச்
சந்தித்துஅதுபற்றித் தெரிவிக்கவும்.

தங்களின் தகவல்களைஉறுதிப்படுத்துவதற்குத் தேவையானசகலஆவணங்களையும் எடுத்துச் செல்வதற்குமறந்துவிடாதீர்

அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
மற்றும்
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

# புனரமைக்கப்படாத 171 வீதிகளால் இடர்களை எதிர்கொள்ளும் மக்கள்

*மாந்தை கிழக்கில் இந்த அவலநிலை*

முல்லைத்தீவு, டிசெ.24
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் மோசமாகச் சேதமடைந்து காணப்படும் 171 வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 71 கிராமங்களில் அமைந்துள்ள இந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் மக்கள் இடர்களை எதிர் கொண்டுள்ளனர்.

"_"
மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 185 வீதிகளில் 23 வீதிகள் மாத்திரமே புனரமைக் கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 71 கிராமங்களில் தற்போது 2 ஆயிரத்து 698 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பாண்டியன்குளம்- வவுனிக்குளம் வீதி, கிடாய் பிடித்த குளம் வீதி, கொம்புவைத்த குளம் வீதி, இராமையன்குளம் வீதி, ஒட்டறுத்தகுளம் வீதி, மூன்று முறிப்பு வீதி உள்ளிட்ட ஒன் பது வீதிகளில் ஒரு வீதிகூட இதுவரை புனரமைக்கப்ப டாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.


இவற்றுடன் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 185 வீதிகளில் 23 வீதிகள் மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளன. ஏனைய வீதிகள் இதுவரை புனரமைக்கப் படவில்லை.

இவ்வாறு பிர தேச சபைக்குச் சொந்தமான 185 வீதிகளில் 162 வீதிகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக் குச் சொந்தமான 9 வீதிகளும் என மொத்தமாக 171 வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப் படுகின்றன.

இதனால் இந்தப் பகுதியில் உள்ள குடும்பங்கள் தமது போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றன. (க-6)

## தொல்லைகளை ஏற்படுத்தும் கட்டாக்காலி கால்நடைகள்

*துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில்*



முல்லைத்தீவு, டிசெ.24
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கட்டாக்காலி கால் நடைகளால் பெரும் தொல்லைகள் ஏற்படுவதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களில் பெரும் போக நெற் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பயிர்களும் வளர்ந்துள்ளன. இவற்றை இரவில் நடமாடும் கட்டாக்காலி கால் நடைகள் அழித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப் படுத்துவதற்கு எவரும் முன்வருவதில்லையென விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

மேலும் இந்தக் கட்டாக்காலி கால்நடைகள் தெரு ஓரங்களில் தங்குவதால் விபத்துக்களும் அதிகம் ஏற்படுகின்றன.

கட்டாக்காலி கால் நடைகளால் முள்ளியவளை, முல்லைத்தீவுப் பகுதிகளில் உயிரிழப்புக் களும் ஏற்பட்டுள்ளன. எனவே துணுக்காய்ப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த உரியவர்கள் முன்வர வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (க-415)

### மரை இறைச்சி வைத்திருந்தவருக்கு தண்டம்


முல்லைத்தீவு, டிசெ.24
மரை இறைச்சியை எடுத்துச் சென்றவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் நபரொருவர் 22 கிலோ மரை இறைச்சியை விற்பனை செய்யும் பொருட்டு கொண்டுசென்ற போது ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் பொலிஸ் உப பரிசோதகர் சமன் தலைமையில் சென்று அந்த வியாபாரியின் மீன் பெட்டியைச் சோதனையிட்டனர்.

அதில் 22 கிலோ அளவிலான மரை இறைச்சி கண்டுபிடிக் கப்பட்டது. குறித்த நபரை மரை இறைச்சியுடன் முல்லைத்தீவு நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். அந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் நீதிவான் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் எச்சரிக்கை செய்து அவரை விடுவித்தார். (க-500)

# மீள்குடியமர்ந்து 4 வருடம் நிரந்தர வீடுகள் இல்லை

*கொட்டில்களில் அவலப்படும் புதறிகுடா மக்கள்*



முல்லைத்தீவு, டிசெ.24
முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளைப் பிரதேசத்திலுள்ள புதறிகுடா கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வீடுகள் வழங் கப்படாத நிலையில் 156 குடும்பங்கள் இடர்களுடன் வசித்து வருகின்றனர்.

இந்தக் குடும்பங்கள் போர் முடிவடைந்த பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் மீளக்குடியமர்ந்தன.

ஆனால் நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் இந்தக் குடும்பங்கள் தற்காலி கக் கொட்டகைகளிலேயே வசித்து வருகின்றன.

197 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வசிக்கின்ற போதிலும் இந்த 156 குடும்பங்களும் நிரந்தர வீடுகள் வழங்கப்படாத நிலையில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றன. (க-415)

## சுகாதாரக் கேடுகளுடன் வவுனியா பஸ் தரிப்பிடம்

வவுனியா, டிசெ.24
வவுனியாவின் பல இடங் களிலும் அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பிடங்கள் சுகாதாரக் கேடுகளுடன் காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பயணிகளின் நன்மைக்கென இந்த பஸ் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்ட போதிலும் தற்போது இவை கேடுகள் நிறைந்து காணப்படுவதால் பயணிகள் பயன்படுத்த முடியாத நிலையே காணப்படு கின்றது.

வவுனியா கோயில்குளம் வீதி தொடக்கம் ஆசிகுளம் சந்தி வரையில் உள்ள பஸ் தரிப் பிடங்களில் இந்த அவல நிலை காணப் படுகின்றது.

இவற்றுக்கு உள்ளே புல் பூண்டுகள் நிறைந்துள்ளதுடன் கால்நடைகள் மற்றும் மனிதர்களின் கழிவுகளும் காணப்படு கின்றன.

குறிப்பாக வவுனியா கோயில் குளம் வீதி தொடக்கம் ஆசி குளம் சந்தி வரையில் உள்ள தரிப்பிடங்களில் இந்த அவல நிலை காணப்படுகின்றது.

மேற்படி பஸ் தரிப்பிடங்கள் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் வருவதால் பிரதேச சபையினர் இதில் கவனம் செலுத்த வேண்டுமென பயணிகள் தெரிவிக்கின் றனர். (க-421)

### புதிய கட்டடம் திறப்பு

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

சுமார் 80 மில்லியன் ரூபா செலவில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் இடப்பெயர்வுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கட்டடப் பணிகள் தற்போதுதான் நிறைவடைந்துள்ளன. (க-18)

### மாணவர்களுக்கு கௌரவம்

முன்பள்ளியிலிருந்து அடுத்த ஆண்டு பாடசாலை செல்லும் மாணவர்களைக் கௌரவிக் கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள 'புதிய பொய்கை' முன்பள்ளியில் கல்வி கற்று அடுத்த ஆண்டு பாடசாலை செல்லும் சிறார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி ஆசிரியை கலையரசி தலைமையில் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும் மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவருமான ரி.இராசநாயகம் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (க-6)

## பாலியல் விழிப்புணர்வு

*பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில்*

அக்கராயன், டிசெ.24
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரு கின்றன.

இதில் எயிட்ஸ் விழிப்புணர்வு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாக பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

சில பாலியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்த நிலையில் இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது.

துணுக்காயில் நீண்ட தூரங்களுக்கு இடையில் கிராமங்கள் அமைந்திருப்பதன் காரணமாகத் தமது பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என விழிப்புணர்வு செயற் பாடுகளில் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (க-18)

## பக்தர்கள் சபரிமலை பயணம்

வவுனியா, டிசெ.24
வவுனியா மாவட்டத்தில் இருந்து 2 ஆயிரம் ஐயப்ப பக்தர்கள் சபரிமலைக்குப் பயணமாகியுள்ளனர்.

தற்போது வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் ஐயப்பன் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் சிறுவர் முதல் பெரியோர் வரை பக்திபூர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 2 ஆயிரம் ஐயப்ப பக்தர்கள் சபரிமலையில் அமைந்துள்ள ஐயப்பன் ஆலயத்துக்குச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். (க-402)

# வெள்ளம் தேங்கி நிற்பதால் சாவற்கட்டு மக்களுக்கு இடர்கள்



[illegible], டிசெ.24
மன்னார் மாவட்டத்தில் அண்மையில் பெய்த கன மழை காரணமாக வெள்ள நீர் தேங்கி நிற்பதால் சாவற்கட்டு கிராம மக்கள் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேலும் மன்னார் பிரதேசத்திலுள்ள காந்திபுரம், தரவன்கோட்டை, எமில் நகர் பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்களில் மழை வெள்ள நீர் நிறைந்து காணப் படுவதால் மக்கள் அந்த நீரை அகற்றும் நடவடிக்கை களில் ஈடுபட்டுவருகின்றனர். (க-415)

# அதிகரித்துவரும் தொற்றாநோய்; தடுப்பு முறைகளை கையாள்க

## அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி வலியுறுத்து

மட்டக்களப்பு.டிசெ.24
இலங்கையில் தொற்றுநோய் குறைந்து தொற்றாநோய் அதிகரித்து வருகின்றது.
இதற்கான தடுப்பு முறைகளைக் கையாள்வது அவசியமாகும் என்று அக்கரைப்பற்று சுகா தார வைத்திய அதிகாரி ஐ.எல். சித்தீக் தெரிவித்தார்.
அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட அக்கரைப் பற்று பாயிஸா மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கான தொற்றா நோய் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.
பாடசாலையின் அதிபர் எம்.ஏ. ஏ.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.றாசேந்திரமூர்த்தி, பொதுச் சுகாதார பரிசோதகர் ஈ.ரி.சலீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
சுகாதார வைத்திய அதிகாரி ஐ.எல்.சித்தீக் மேலும் தெரிவித்ததாவது:-
நீரிழிவு நோய், மாரடைப்பு, குருதி அழுத்தம், கொலஸ்ரோல், பாரிசவாதம் போன்ற தொற்றா நோய்கள் நமது நாட்டில் அதிகரித்து வருகின்றன. வெளித் தோற்றத்தில் சுகதேகி போல் தென்பட்டாலும் சிலர் ஏதோவொரு தொற்றா நோய்க்கு உட்பட்டுள்ளனர்.
உடம்பின் நிறையை அதிகரிக்க விடாது உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதுடன் உணவுக் கட்டுப்பாடு , மது மற்றும் புகைப்பிடித்தலைத் தவிர்ப்பதன் மூலமே தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.
தொற்றா நோய்களுக்கு உட்பட்டிருப்போர் எண்ணெய், இறைச்சி வகைகளை உணவில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் நன்மையளிக்கும்- என்றார். (வ-193)

## விழிப்புணர்வுப் பயிற்சி பட்டறை

இடம்பெயர்ந்த பெண்கள் தீர்மானம் எடுத்தலிலும் பொருளாதார வலுவூட்டலிலும் பங்குபற்றுத லுக்கு ஏற்ற சூழலுக்கு சாத்திய மளித்தல் திட்டத்தின் கீழ் வன் னியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை வவுனதீவில் இடம்பெற்று வருகின்றது. பெண்களுக்கான வலுவூட்ட லுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு அமெரிக்கன் தூதரகத்தின் அனுசரணையுடன் 6 கட்ட வலுவூட்டல் பயிற்சியை நடத்தவுள்ள நிலை யில் இதன் முதல் கட்டப்பயிற் சிப் பட்டறை சனிக்கிழமை ஆரம்பமானது. (வ)

# தொழில் கல்வியைப் பெறுவதிலும் பெற்றோர் பிள்ளைகளை வழிநடத்துக

## மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவிப்பு



மட்டக்களப்பு.டிசெ.24
முதலாம் ஆண்டுக்கு எந்தப் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்ப்பது என்பதில் கூடிய அக்கறை கொண்டு சேர்க்கப்படுகின்ற பிள்ளைகளில் 10 வீதமானோர் மாத்திரம் உயர் கல்விக்குச் செல்கின்றனர். மிகுதி 90 வீதமானோரும் எந்தவித ஏற்பாடுகளுமின்றி தவிக்க விடப்படு கின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டச்செயலக தொழில் உருவாக்கம் மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட தொழில் சந்தையில் ஆற்றிய தலைமை உரையிலேயே அவ்வாறு தெரி வித்தார்.
அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் காலத்தின் தேவைக்கு ஏற்ப தொழில் பயிற்சி நெறிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். காலத்தின் தேவைக்கு ஏற்ப தொழில் பயிற்சி நெறிகளை நெறிப்படுத்த வேண்டும்.
பெற்றோர் முதலாம் ஆண்டுக்கு எந்தப் பாடசாலையில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பது என்பதில் கூடிய அக்கறை காட்டுவது போன்று தொழில் கல்வியைப் பெறுவதற்கு அக்கறை காட்டுவதில்லை. உயர் கல்விக்கு செல்ல முடியாத பிள்ளைகளுக்கு தொழில் கல்வியை பெற்றுக் கொடுக்க முதலாம் ஆண்டில் பிள்ளைகளை சேர்ப்பதற்குக் காட்டும் அக்கறை காட்ட வேண்டும்.
தொழில் திறனையும் தொழில் கல்வியையும் பெற்றுக்கொடுக்க உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு உதவ வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

> தொழில் திறனையும் தொழில் கல்வியையும் பெற்றுக்கொடுக்க உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு உதவவேண்டும்.


100% புலமைப்பரிசில் இலவசம்

ADB EKSP Education for Knowledge Society Project

கல்வி அமைச்சின் EKSP செயற்றிட்டத்தின்

CISI CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

அனுசரணையுடன் வழங்கப்படும் புமைப்பரிசில் திட்டத்தின் மூலம்
CISI (The Chartered Institute for Securities & Investment - UK)
நிறுவனத்தின் கற்கைநெறியில் இணைந்திடுங்கள்







க.பொ.த உயர்தரம் – 2013
சித்தி பெற்ற மாணவர்களுக்கு
அனுமதியில் முன்னுரிமை
வழங்கப்படும்

*பல்கலைக்கழகத்துக்கு புகுவதற்கு முன் நிதியியலில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசத் (UK) தராதரம் ஒன்றினை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு....*
*வட மகாணத்தில் இப்போது "கேற்வே" இடமிருந்து மட்டுமே........*

நீங்கள் :
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணித, விஞ்ஞான, வணிகத் துறைகளில் சித்தியடைந்தவரா?
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருக்கிறீர்களா?
24 வயதுக்கு உட்பட்டவரா?

ஆம் எனின் அருகிலுள்ள "கேற்வே" நிலையத்தில் விண்ணப்பத்தைப் பெற்று இணைந்து கொள்ளுங்கள்

தலைமையகம் :
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 567 5555

கிளைகள்:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி, 021 567 8444
50, பருத்தித்துறை வீதி நெல்லியடி, 021 226 2395
கரடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி,கிளிநொச்சி 021 228 0068

(c.10646)

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்வமுடைய மாணவர்கள் தமது சுயவிபரக்கோவைகளுடன் தொடர்பு கொள்ளவும்
0787 692 692 / 0718 692 692


# நவீன வைத்திய சாதனங்களுடன் காத்தான்குடி மருத்துவமனை



மட்டக்களப்பு.டிசெ.24
சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார திணைக்களத்தின் வழிகாட்டலில் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் மட்டக்களப்பு-காத்தான்குடி வைத்தியசாலையில் முதற்தடவையாக நோயாளிகளின் நன்மை கருதி நவீன வைத்திய சாதனங்களுடன் அமைக்கப்பட்ட விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு, மத்திய கிருமி நீக்கல் வழங்கல்பிரிவு, வைத்தியசாலை துணிகள்வழங்கல்பிரிவு ஆகிய மூன்று வைத்திய பிரிவுகளை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.
இதன் போது வைத்தியசாலையின் மூன்று பிரிவுகள் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ. எம்.மன்சூர் ஆகியோரினால் உத்தியோகபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.
காத்தான்குடி வைத்தியாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கிழக்குமாகாண சுகாதார அமைச்சர்எம்.ஐ.எம். மன்சூர் ஆகியோர் கலந்து கொண்டதோடு கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக், காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர், காதி நீதிபதி மௌலவி எஸ்.எம். அலியார் (பலாஹி), மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகம், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.நஸீர்தீன் , காத்தான்குடி வைத்தியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் நிஹாஜ் உட்பட உலமாக்கள் , இராணுவ அதிகாரிகள், ஊர் பிரமுகர்கள், புத்திஜீவிகள், காத்தான்குடி வைத்தியசாலை வைத்தியர்கள், வைத்திய தாதிகள், வைத்திய ஊழியர்கள், அபிவிருத்திச் சங்க ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
இவ் வைத்தியசாலையில் குறித்த மூன்று பிரிவுகள் திறக்கப்பட்டுள்ளதால் காத்தான்குடி பிரதேசத்திலுள்ள மக்களும் அதனை அண்டியுள்ள ஆரையம்பதி, பாலமுனை, கரபலா, காங்கேயனோடை, ஒளளிக்குளம், சிகரம் ஆகிய கிராம மக்களும் பெரிதும் நன்மையடையவுள்ளதுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளக்கூடிய சில வைத்திய சேவைகளை நவீன வைத்திய சாதனங்களுடன் இங்கு மேற்கொள்ள முடியும் என்பதும் குறிபிடத்தக்கது. (வ)




எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் எவ்வாறான வியூகங்களை வகுத்து செயற்படுவது என்பது தொடர்பில் நவோதய மக்கள் முன்னணியின் உயர்மட்டக்குழு நேற்றுமுன்தினம் மாலை கட்சித் தலைமை அலுவலகத்தில் கூடி முக்கிய ஆலோசனை நடத்தியது. இதில், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் டபிள்யூ.எஸ்.டக்ளஸ் செனவிரத்ன, நவோதய மக்கள் முன்னணியில் இணைந்து கொண்டார். அத்துடன், முன்னணியின் தலைவர் கலாநிதி எஸ்.கே.கிருஷ்ணா முன்னிலையில் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான சிறப்பு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

# தமிழ் அரசியல் கைதிகளுக்காக வழக்காட நவோதய மக்கள் முன்னணி இலவசத்திட்டம்

## *உறவினர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கோருகிறார் கிருஷ்ணா*

கொழும்பு.டிசெ.24

நிதி நெருக்கடியால் வழக்குத் தொடரமுடியாமல் நீண்ட நாள்களாக சிறைச்சாலைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு உதவுவதற்கு நவோதய மக்கள் முன்னணி முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம், தமது விடுதலையின் நிமித்தமோ அல்லது பிணை வேண்டியோ வழக்குத் தொடரவிரும்பு வோருக்கு சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்துகொடுப்பதற்கான திட்டத்தை குறிப்பிட்ட அமைப்பு 2014 புத்தாண்டு முதல் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.



எனவே, சிறைச்சாலைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களோ அல்லது அவர்களுக்கு நெருக்கமானவர்களோ நவோதயா மக்கள் முன்னணியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உதவியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று முன்னணியின் தலைவர் கலாநிதி எஸ்.கே. கிருஷ்ணா உதயனுக்குத் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தம்மால் முடிந்த அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மேல்மாகாண சபைத் தேர்தல் மற்றும் நவோதயாவின் இலவசக் கல்வித் திட்டம் ஆகியன தொடர்பிலும் உயர்பீடக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.-

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வெறுமனே ஆர்ப்பாட்டங்களை நடத்துவதால் மட்டும் பயனில்லை. அறிக்கைகள் விடுவதாலும் உணர்ச்சி பொங்க வீரவசனங்கள் பேசுவதாலும் அவர்களின் பிரச்சினைகள் தீரப் போவதுமில்லை.- இந்த உண்மையை தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இந்த விடயத்தை நாம்புத்திசாதூர்யமாக கையாள வேண்டும். அத்துடன், நடைமுறைக்கு சாத்தியமானவற்றை செய்வதன் மூலமே அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். இதன் நிமித்தமே சட்டரீதியான உதவிகளை வழங்குவதற்கு நவோதய மக்கள் முன்னணி முன்வந்துள்ளது- என்றும் கிருஷ்ணா தெரிவித்தார். (ஓ-சி)

# மாணவர்களுக்குப் போதைப்பொருள் விற்றவர் பொலிஸாரிடம் சிக்கினார்

கொழும்பு.டிசெ.24

பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக பாபுள் எனப்படும் போதைப் பொருள் வைத்திருந்த நபர் ஒருவர் இரத்தினபுரி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.



ஹொரண பிரதேச பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போதே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இரத்தினபுரி பிரதேச பிரபல பாடசாலை ஒன்றின் முன்பாக வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நபரிடமிருந்து 176 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் விசாரணைகளுக்காக இரத்தினபுரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கொழும்புத்துறைமுகத்தில் மீட்கப்பட்ட புராதன பீரங்கி

## *விரிவாக்கப் பணியின்போது*

கொழும்பு,டிசெ.24

இலங்கையில் இதுவரையிலும் கிடைத்திராத மிகப் பெருத்த உருவமைப்பிலான பீரங்கியொன்று கொழும்புத் துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

2,000 கிலோவுக்கும் மேற் பட்ட நிறையுடைய இந்தப் பீரங்கி செப்பினால் செய்யப்பட்டுள்ளதோடு, தற்போது மேற் கொள்ளப்பட்டு வரும் கொழும்புத்துறைமுகத்தை விரிவுபடுத்தும்செயற்பாட்டின் போது மணல் வெளியேற்றப்பட்ட வேளையில் இந்தப்பீரங்கி கண்டெடுக்கப்பட்டது.



கிடைத்துள்ள தகவல்கள் மீது இந்தப் பீரங்கியை தொல்லியல் ஆய்வுகள் திணைக்களத்திடம் கையளிப்பதற்கு மேற்படி துறைமுக விரிவாக்கப் பணியை மேற்கொண்டு வரும் சீன நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், மேலிடத்து உத்தரவொன்றின் பேரில் துறைமுக அதிகார சபையினால் அதை தொல்லியல் ஆய்வாளர் திணைக்களத்துக்கு வழங்குவது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

...ளைப் பற்றி அறிந்து கொண்டதுமே அதை எடுத்துச் செல்வதற்கு தொல்லியல் திணைக்களம் லொறி ஒன்றை அனுப்பியிருந்ததாகவும் ஆனாலும் துறைமுக அதிகாரசபை அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்ததாகவும் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (ஓ-22)

# அசிட் வீச்சுக்கு இலக்கான தாய் சிகிச்சை பயனின்றி சாவு

கொழும்பு.டிசெ.24

காலி மாவட்டம், கனங்கே கடை வீதி, பூஹூ லஹேன பகுதியில் தாய், மகள் இருவர் மீதும் கடந்த செவ்வாய்க்கிழமை அசிட் வீச்சு நடத்தப்பட்டதால் பலத்த எரிகாயங்களுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர்களின் தாயான எம்.ஜி. தயாவதி (வயது - 57) கடந்த வியாழக்கிழமை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த அசிட் வீச்சில் சிக்கிய அவரது 27 வயது மகள் மிகவும் ஆபத்தான நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொக்கல ஆடைத் தொழிற்சாலையில் பணி முடிந்து வந்த மகள் வெளியில் காத்திருந்த தாயுடன் வீடுநோக்கி நடந்து சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில்



வந்த இனம்தெரியாத இருநபர்கள் அவர்கள் மீது அசிட்டை விசிறிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள்.

கனங்கே பொலிஸார் சந்தேக நபர்களைத் தேடிப்பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். (ஓ-சி)

முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
01.10.1928

மறைவு
04.01.2013

திதி : ஸப்தமி

அமரர்

ஆறுமுகம் முத்துக்குமாரு (முத்துவேலு)

[ஓய்வுபெற்ற தபால் ஊழியர்]

வாழவைத்த தெய்வம் இன்று வானம் சென்றதேனோ?
எங்களை அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் வளர்த்த எங்கள்
அன்பு ஐயாவே! நீங்கள் மறைந்து ஓராண்டு
என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்களை
மறக்க முடியாதய்யா உங்கள் நினைவுகளைக்
கண்ணீரோடு நினைவுகூரும்.

36/20, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
T.P. 021 300 2519

உங்கள் அன்பிற்குரிய
மனைவி, பிள்ளைகள்,

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எட்டாக் கனியாகத் தேய்ந்து போன தமிழ்க் கைதிகளின் விவகாரம்

2013 ஆம் ஆண்டு முடிவடையப் போகிறது. இன்னமும் ஏழு நாள்கள் கடந்தால், புத்தாண்டு பிறந்துவிடும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதேபோன்று தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையும் முன்னேற்றம் எதுவுமின்றி மற்றொரு ஆண்டுக்குள் பிரவேசிக்கிறது. அரசியலில் ஆரவாரம் இன்றிப் பிறக்கிறது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோது நல்லிணக்கத்துக்கு அடையாளமாகத் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. வடமாகாணத் தேர்தலின் பின்பும் தமக்கு விடிவு கிடைக்கலாம் என்று கைதிகள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். இந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் கானல் நீராகிவிட்டன.

கடந்த காலங்களில் சிறைகளுக்குள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கவனத்தை ஈர்த்து வந்த தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலையில் அறவே நம்பிக்கை இழந்துவிட்டார்கள்.

அவர்கள் நம்பியவர்கள் எல்லோரும் அவர்களைக் கைவிட்டு விட்டார்கள். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. கைதிகளின் விடுதலை தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் அற்ப மாற்றந்தானும் ஏற்படவில்லை. நாட்டின் பல பகுதிகளிலும் தடுப்பு முகாம்களிலும் விளக்கமறியல் சாலைகளிலும் இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது சரியான எண்ணிக்கைகூட உத்தியோக ரீதியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லை.

அவர்களது விடுதலை தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கடந்த ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஆண்களும் பெண்களுமாக இவர்களது எண்ணிக்கை சுமார் ஆயிரம் என்று தெரிவித்திருந்தார்.

இவர்களில் பலர் ஐந்து வருடங்கள் முதல் பதினைந்து வருடங்கள் வரை சிறையில் இருக்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தின் போது விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக, ஆயுதப் போராட்டத்தில் பங்களித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கைதிகளில் மதகுருமாரும், நோயாளிகளும், உள்ளடக்கப்பட்டுள்ளனர். சுகவீனம் காரணமாகவும், நோய் காரணமாகவும் சிலர் உயிரிழந்துள்ளனர்.

ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்க முடியும் அல்லது நீதிமன்றம் மூலம் இவர்களுக்குப் பிணை வழங்க முடியும். ஆனால் எதுவுமே இதுவரை சாத்தியப்படவில்லை. அது குறித்துக் கருத்தில் கொள்ளப்படவில்லை. இந்தக் கைதிகளில் பெரும்பாலானோர் வசதியற்றவர்கள். வழக்குத் தொடரக்கூட இவர்களிடம் பணம் இல்லை. இத்தகைய கையது நிலையில், நவோதய மக்கள் முன்னணி அவர்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

அரசியல்வாதிகளின் அறிக்கைகளாலும் வாக்குறுதிகளாலும் பயன் எதுவும் ஏற்படாது விரக்தியில் இருந்த கைதிகள் விவகாரத்தில், நவோதய மக்கள் முன்னணித் தலைவர் கலாநிதி எஸ்.கே. கிருஷ்ணா யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து மேற்கொண்டுள்ள நடவடிக்கை, அவர் களுக்கு ஓரளவேனும் விமோசனம் தரும் என்று மேலோட்ட மாகவேனும் நம்பலாம்.

தமது விடுதலையின் நிமிர்த்தமோ அல்லது பிணை வேண்டியோ வழக்குத் தொடர விரும்பும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு சட்டத்தரணிகளை இலவசமாக ஏற்பாடு செய்து கொடுப்பதே நவோதயாவின் திட்டம். சிறைச்சாலைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் அல்லது அவர்களுக்கு நெருக்கமானவர்கள் நவோதய மக்கள் முன்னணியின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த இலவச உதவித்திட்டம் மூலம் பயன்பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வெறுமனே ஆர்ப்பாட்டங்களை நடத்துவதால் பயனில்லை. அறிக்கைகள் விடுவதாலும் பயனில்லை. உணர்ச்சி பொங்கும் வீர வசனங்களும் பயனளிக்கப்போவதில்லை.

இந்த அரசு எவற்றுக்கும் பணிந்துபோகக் கூடியதல்ல. இதனைத் தமிழ்க் கட்சிகள் புரிந்துகொள்ளவேண்டும். நடைமுறையில் சாத்தியமாவதையே சிந்தித்துச் செயற்பட வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் இவர்களது பிரச்சினை பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

வெலிக்கடைச் சிறையில் 1983 இல் 53 தமிழ் அரசியல் கைதிகளும், களுத்துறைச் சிறையில் 1997இல் மூன்று தமிழ் அரசியல் கைதிகளும், பண்டாரவளை, பிந்துனுவெவவில் 2000 ஆம் ஆண்டில் 26 தமிழ் அரசியல் கைதிகளும் கொல்லப்பட்டனர். 2012 இல் வவுனியா விளக்கமறியல் சாலையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 40 கைதிகள் காயமடைந்தனர். இவர்களில் 15 பேர் மோசமான நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் சேர்க்கப்பட்டவர்களில் இருவர் பின்னர் உயிரிழந்தனர்.

இத்தகைய ஒரு பின்னணியில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு தொடர்ந்து பாதுகாப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

அவர்களது விடுதலை எட்டாக்கனியாக மாறி விட்டதால் சட்ட நடவடிக்கை ஒன்றே இவர்களுக்கு எஞ்சியுள்ள ஒரே தெரி[illegible]னையே அனைத்துலக நாடுகளும் வெறும் ஒப்பியாசாரத்துக்கு அங்கீகரிக்கும் என்று ஓரளவேனும் நம்பலாம்.

# பெரும்பான்மையினரைக் காப்பாற்ற மாறுகிறது அரசியல் சட்டம்

கந்தவனம் கோணேஸ்வரன்

ஒரு ஜனநாயகநாட்டின் அரசு தனது மக்களுடைய எண்ணங்களையும் அபிலாஷைகளையும் உள்வாங்கி, அவற்றை முடிந்த வரையில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, எப்போதோ ஆக்கிக்கொண்ட சட்டங்களை இடம், பொருள், காலம் அறியாமல் அப்படியே பயன்படுத்த முனையக் கூடாது. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசமைப்பின் 29ஆவது உறுப்புரை சிறு பான்மை இனங்களுக்குப் பாது காப்பளிக்கும் எனக் கருதப்பட்டது. எந்தவொரு சாராரும் பாதிக்கப்படக் கூடியதான சட்டங்கள் எவற்றையும் ஆக்குதல் கூடாது என்று கூறி அது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அரணாக நிற்கிறது என நம்பப்பட்டது. இவ்வுறுப்புரையின்படி வலிமையிற் குறைந்த ஒரு மொழிக்கோ, இனத்துக்கோ, சமயத் துக்கோ தீங்கு விளைவிக்கும் சட்டங்கள் ஆக்கப்படமுடியாதவை என்றெண்ணமும்அப்போதுஇலங்கையில் பரவலாகக் காணப்பட்டது.

ஆனால், இலங்கை சுதந்திரமடைந்த அதே ஆண்டு இச்சட்டம் தகர்த்தெறியப்பட்டு பத்துலட்சம் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். தமிழர்களின் வாக்குப் பலத்தைக் குறைவடையச் செய்ததன் மூலம் அவர்களின் எண்ணங்கள், செயற்பாடுகள் என்பவற்றின் வலிமை பாதியாகக் குறைக்கப்பட்டது. சிங்கள அரசியல்வாதிகளின் நலன்களுக்கு உகந்தாற் போல செயற்படும் தன்மை சட்டரீதியாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

### தனிச் சிங்களத்திட்டமே இனக்கலவரத்தின் வேராகியது


இன்றைய ஆளுங்கட்சியின் ஸ்தாபக தலைவர்கூட அதே 29ஆவது உறுப்புரை அரசமைப்பில் உயிர்ப்புடன் இருக்கும் வேளையில்தான் தனிச் சிங்களச் சட்டத் தைக் கொண்டுவந்து நாட்டைப் பிளவுப்படுத்தியதோடல்லாமல் அரசமைப்பையும் உதாசீனம் செய்தார். இனக்கலவரம் மூண்டு நாடே பற்றி எரிந்தது. தமிழர்கள் வேறு, சிங்களஅரசு வேறு என்ற மனப் போக்கு சாதாரண மக்கள்வரை விதைக்கப்பட்டது.

சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பான ஒரு சரத்துக்கூட அரசமைப்பில் இருக்கக்கூடாது என்று கருதியே பண்டாரநாயக் கவின் மனைவி ஸ்ரீமாவோ 1972இல் புதிய குடியரசு அரசியல் யாப்பை அறிமுகம் செய்தார். அதில் சட்டப்படி பௌத்தம் முதலிடம் பெற்றது. ஏனைய மதங்கள் இரண்டாம் பட்சமாயின. சிங்களமே அரச மொழி என்றானது. சில இடங்களில் வசதி கருதித் தமிழும் பயன்படுத்தப்படலாம் என்ற நிலை காணப்பட்டது. ஒரே வார்த்தையில் இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்று அடித்துக்கூறப்பட்டது. பௌத்தம் முதன்மையிடத்தில் வைக்கப்பட வேண்டும் என்று கூறுகின்ற இலங்கை அரசியல்சட்டம்தான் ஏனைய மதங்க ளையும் பாதுகாக்க வேண்டும் என்றும் கூறுகிறது. முதன்மை இடம் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தமிழர்களின் பிரதேசங்களில் எல்லாம் புதிய புத்தர்களை நிலைப்படுத்தத் துடிக்கும் அரசதரப்பினர், ஏனைய மதங்கள் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் 14(1)ன் படி பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதன் கருத்தை மிக அலட்சியமாக நோக்கி இன்று கோவில்களையும், பள்ளிவாசல்களையும் தகர்த்து வருகிறார்கள். கடந்த செவ்வாயன்று கொழும்பில் மூன்று பள்ளிவாசல்களில் தொழுகை நடத்தப் படக்கூடாது என்று பொலிஸார் உத்தரவிடும் அளவுக்கு இலங்கைச் சட்டங்கள் வகைசெய்திருக்கின்றன. அவற்றுக்கு ஏதுவாக எல்லோரையும் அமைச்சர்களாக்கி அழகு பார்க்கின்ற முஸ்லிம் மக்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கிறார்கள்.

### தமிழர்கள் தொடர்ந்தும் நியாயம் கேடகின்றனர்

இந்தவகைச் சட்ட நடைமுறையைத் தான் தமிழர்கள் தொடர்ந்தும் எதிர்த்து வருகிறார்கள். ஏழு மாகாணங்களிலும் சிவில் அதிகாரிகள் ஆளுநராக இருக்கும்போது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும் இராணுவ அதிகாரிகள் ஆளுநராக நியமனம் பெறுவது ஏன் ஏன்று கேட்கிறார்கள். கிழக்கின் முதலமைச்சரும் எதிர்கட்சித் தலைவரும் ஆளுநர் தொடர்பாக கருத்துத் தெரிவிக் கவே அஞ்சுகின்ற நிலையில் வடக்கு மாகாணசபையின் அத்தனை உறுப்பினர்களும் இராணுவ அதிகாரியை ஆளுநராகத் தொடர்ந்திருக்க அனுமதிக்க வேண்டா மென அரசிடம் இரண்டாவது முறையாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

வடக்குக்கிழக்குத் தமிழ்மக்களைப் பொறுத் தவரையில் அவர்கள் அரசியற் சட்டங்களுக்குத்தான் அடிபணிய வேண்டியவர்களே யொழிய அரசின் விருப்பங்களுக்கல்ல. இன்றைய ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையைக்கூட வடக்குக்கிழக்குத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளில் மஹிந்த சிந்தனைக்கு ஆதரவான வாக்களிப்பு இடம்பெற்றிருந்த வேளையில் தமிழர்கள் நியாயமான சுயமரியாதையுடைய ஆட்சி முறைமையை வேண்டியே வாக்களித்தார்கள். 2009 அவலங்களுக்குப் பின்னரும் கூடத் தலை கவிழ்ந்து கொள்ளாமல் நிமிர்ந்து நின்றே சகல தேர்தல் களிலும் தங்கள் விருப்பத்தைச் சொன்னார்கள்.





### வட மாகாணசபையின் அபிலாசைகள் புறக்கணிக்கப்படுவது ஜனநாயகத் துரோகம்

ஒவ்வொரு மாகாணசபையும் மக்கள் ஆணையைப் பெற்றிருப்பதுபோலவே வடக்கு மாகாணசபையும் மக்களாணையுடன்தான் செயற்படுகின்றது. எனவே வடக்கு மாகாணசபையின் அபிலாஷைகளை அரசியற் சட்டங்களின் துணை கொண்டு அரசு புறக்கணிக்க முனையுமானால் அது ஜனநாயகத் துரோகமாகவே முடியும். வடக்கு மாகாணசபையின் வேண்டுகோள்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருப்பதைவிட அவற்றை நிறை வேற்றித் தமிழ்மக் கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை விதைக்கும் வாய்ப்பைத் அரசு தவறவிடாமல் இருப்பதுவே மேல்.

வடக்கின் நெருக்கடிபற்றி பேசிக் கொண்டிருக்கையில் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்ற வேண்டும் என்ற அழைப்பும் அரசதரப்பால் விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதியின் விரலசைவில் நடைமுறைப்படுத் தக்கூடிய செயற்பாடுகளான வடக்கு ஆளுநர் மாற்றம், படைக் குறைப்பு என்பவையே அலட்சியப் படுத்தப்படும் போது பலர்கூடி முடிவெடுக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் வெற்றிகரமாக அமையும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

விறைப்பாகச் சட்டம்பேசிக் கொண்டிருந்த வடபகுதி ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வடக்கு முதல்வருடன் பேசுவதற்குத் தயாராகி அதற்கான அழைப்பையும் விடுத்திருக்கிறார். ஜனாதிபதிகூட வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது வடக்கு மாகாணத்தை இணைந்து அபிவிருத்தி செய்வோம் வாருங்கள்.' என்று வட மாகாணசபை முதல்வருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

வடக்கின் அபிவிருத்தியே பிரதானம் என்று மக்கள் நினைத்திருந்தால் வட மாகாணசபைக்கு ஆகக் குறைந்தது பலமான எதிர்க் கட்சியாகவாவது அரச கட்சி தெரிவு செய்யப்பட்டிருக்கும். அது நடவாதபோது ஜனாதிபதி தொடர்ந்தும் வடக்கின் அபிவிருத்திப் பற்றிப் பேசி மயக்கம் ஏற்படுத்துவதை விடுத்துத் தமிழர்களின் மனங்களை வெல்லும் மார்க்கத்தைத் தேட முயல வேண்டும். அதற்கிசைவாகச் செயல்பட வேண்டும்.

பிரச்சினைகள் இருக்கின்றன என்று பேசிக்கொண்டிருப்பதாலோ, வெளிநாடுகளின் தலையீடுகளை நிராகரிக்கின்றோம் என்று அறிக்கை விடுவதாலோ இலங்கை அரசால் எதுவும் சாதிக்க முடியாது. இந்துக் கோவில்களை உடைப்பதாலோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று பேசுவதாலோ தமிழர்களின் போராட்டவுணர்வைக் குறைத்துவிடவும் முடியாது.

> பண்டாரநாயக்கவின் மனைவி ஸ்ரீமாவோ 1972இல் புதிய குடியரசு அரசியல் யாப்பை அறிமுகம் செய்தார். அதில் சட்டப்படி பௌத்தம் முதலிடம் பெற்றது. ஏனைய மதங்கள் இரண்டாம் பட்சமாயின. சிங்களமே அரச மொழி என்றானது. சில இடங்களில் வசதி கருதித் தமிழும் பயன் படுத்தப்படலாம் என்ற நிலை காணப் பட்டது. ஒரே வார்த்தையில் இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்று அடித்துக் கூறப்பட்டது.

# ஆயிரத்தில் அல்ல கோடிகளில் ஒருவர்

ஒரு இலங்கைத்தமிழனது பார்வையில் எம்.ஜி.ராமச்சந்திரன் என்பவர், தலைவனுக்குத்தலைவன், இதய தெய்வம் என்ற நிலையில் என்றும் மிகப்பெரிய கௌரவத்துடனும், நன்றியுடனும் பார்க்கப்படும் ஒருவர். எந்தவொரு கலைஞனுக்கும் அடிமைப்பட்டுவிடாத இலங்கைத்தமிழன், எம்.ஜி.ஆர் என்ற நாமத்துக்கு மட்டும் கொண்டாட்டம் எடுத்தகாலங்கள் ஆச்சரியமானது.

அதுபோல உலகத்தலைவர் எவருக்கும் சிலைவைத்து வழிபடாத சமூகம், எம்.ஜி.ஆர் என்ற அந்த தலைவ னுக்குமட்டும் சிலையெழுப்பி தலைகுனிந்து இன்றும் வணக்கம் சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஏனெனின் இலங்கைத்தமிழனின் இன உணர்வுக்கும், விடியல் என்ற பயணத்திற்குமான ஆணிவேர் எம்.ஜி.ஆர் என்ற அந்த அன்பு மனிதனே என்பதில் இன்றுவரை தமிழ் சமூகம் அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் நெஞ்சில் வைத்து துதித்துகொண்டிருக்கின்றது.

1987 ஆம் ஆண்டுகளின் முன்பகுதி பெரும் இடர்கள் ஆபத்துக்கள், குண்டுவீச்சுக்கள், ஷெல் வீச்சுக்களுக்கு மத்தியில் நாளை எங்கள் உயிர் ஒட்டுமொத்தமாக பறிக்கப்பட்டுவிடும் என்ற பீதியுடன் நாம் வாழ்ந்துவந்தாலும், எம்.ஜி.ஆர் இருக்கின்றார் என்ற தைரியம் எம் சுற்றத்தில் உள்ள பெரியவர்களின் பேச்சுக்களிலும், போராளிகளின் நம்பிக்கைகளிலும் தெளிவாகத்தெரிந்தமையினை மறந்து விடவில்லை.

உணவுக்கு பஞ்சம் ஏற்பட்ட நிலையில் உணவுகளுடன் வந்த இந்தியக்கடற்படை கப்பல் கள் இலங்கை கடற்படையினால் எச்சரிக்கப்பட்டு, திரும்பி அனுப்பட்டதும், ஆனால் உடனயடியாகவே பிற நாடு ஒன்றின் வான்பரப்பு என்றாலும் வாடுவது தமிழ் இனம் என்ற எம்.ஜி.ஆரின் அசைக்கமுடியாத பிடிமானத்தால் இந்திய மிராஜ் விமானங்கள் இலங்கைக்கு மேலாக சுற்றிவந்து உணவுப்பொருள்களைக் கொட்டிவிட்டு சென்றது.

> இலங்கைத்தமிழனின் இன உணர்வுக்கும், விடியல் என்ற பயணத்திற்கு மான ஆணிவேர் எம்.ஜி.ஆர் என்ற அந்த அன்பு மனிதனே என்பதில் இன்றுவரை தமிழ் சமூகம் அசைக்கமுடியாத நம்பிக்கை யுடன் நெஞ்சில் வைத்து துதித்துகொண் டிருக்கின்றது.

ஆனால் சில சூழ்ச்சிகளால், இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில், ஈழத்தமிழர்களின் தாயகங்களில் சிங்களப் படைகளை மிஞ்சிய ஊழித்தாண்டவங்கள் இடம்பெற்றபோது, நோய்ப்படுக்கையில் படுத்திருந்தாலும் அவர்களுக்காக ஏங்கிய ஒரே உன்னதமான ஜீவன் எம்.ஜி.ஆர் மட்டுமே. இத்தனை கொடுமைகளுக்கும் மத்தியில் நாம் இருக்கும்வேளைகளில், இந்திய அமைதிகாக்கும் படைகள், தமிழ் மக்களை கொன் றொழித்த வேளை, எம்.ஜி.ஆரின் இழப்பு எங்களின் இழப்பாகவே எங்களுக்கும் தோன்றியது.

எங்களைக்காப்பாற்ற இனி எவரும் இல்லை என்ற அன்றைய நாள்களின் அந்த மக்களின் அவலக்குரல் இறுதிமட்டும் தீர்க்கதரிசனமாகவே போய்விட்டது.

எம்.ஜி.ஆரின் எங்கள் மீதான கரிசனை வெறும் வார்த்தைகளாக இருக்கவில்லை, அரசியல் இலாபங்களாக இருக்கவில்லை, அதற்கான தேவைகளும் உச்சத்தில் இருந்த அவருக்கு இருக்கவில்லை. காசுக்காகவோ, தன் காரியங்களுக்காகவோ அது இருக்கவில்லை. உண்மையான உணர்வு, பாசம், நேசிப்புக்களுக்காகவே அது இருந்தது. அந்த நேசம், பாசம் அவர் மறையும் வரை அவரிடம் உச்சமாக இருந்தது.

ஏழை மக்கள் வாழ்வு மலர
ஏணி யாக நின்றவர்.
கோழைத் தனங்கள்
இல்லா அன்புக்
கொள்கை யாலே வென்றவர்.'

பசியை உணர்ந்தும் படிப்பை
இழந்தும்
பண்பின் வழி வளர்ந்தவர்.
வசைவு இல்லா வாழ்க்கை முறையை
வறுமை யிலுந் தேர்ந்தவர்.

தாயின் தாளை வணங்கி நாளைத்
தொடங்கு கின்ற பண்பினர்.
கோயில் கூடத் தாயின் அன்புக்
கோட்ட மென்றே வாழ்ந்தவர்.

நடிப்பின் மூலம் இளைஞர் தம்மை
நல்வழிக் குக் கொணர்ந்தவர்.
நடிக்கும் ஆட்சி யாளர் போக்கை
நிமிர்ந்து நின்று எதிர்த்தவர்.

உழைத்த பொருளை ஊருக் களித்து
உவகை கொண்டு வாழ்ந்தவர்.
மழைக்கு நிகராய் மண்ணில் கொடுத்த
மாண்பி னாலே சிறந்தவர்.

விழியில் வழியும் துளிநீர் கூட
உலகை வருத்தும் என்றவர்.
விழிநீர் மக்கள் மழையாய் பொழிய
உலகை நீங்கிச் சென்றவர்.

புரட்சி நடிகர் பொன்மனச் செம்மல்
மக்கள் திலகம் ஆனவர்.
புரட்சித் தலைவர் ஆகி ஆட்சியில்
புதுமை செய்தே போனவர்.

இன்னும் பலநூ றாண்டு
அவர்புகழ்
இந்த மண்ணில் வாழும்.
எளிமையும் இனிமையும் இரக்கமும்
எனஅவர் பண்புக ளெம்மை ஆளும்.

*கந்தவனம் கோணேஸ்வரன்*





## மக்கள் திலகம்

# உன்னிடம் தான் இருக்கிறது மகிழ்ச்சி

அருவி

மகிழ்ச்சியை மனத்தின் ஒரு நிலை என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். எனவே மனம்தான் அதன் நிலைக்களம், உற்பத்தி மையம் என்று தெரிகிறது. ஆனால் உண்மையான மிகிழ்ச்சி என்ற நிலையை யாரும் தேடுவதில்லை. மகிழ்ச்சிக்குக் காரணமான சில பொருள்களையும் மனிதர்களையும் அனுபவங்களையும் தான் தேடுகின்றனர். அதனால்தான் மிகழ்ச்சி அவர்களை விட்டு விலகிப் போகிறது. மகிழ்ச்சி என்பதை எதிலிருந்தோ கிடைப்பது என நினைப்பதால் தான் அது கிடைப்பதில்லை. கிடைத்தாலும் நிலைப்பதில்லை. மகிழ்ச்சி தன்னிடமே தான் இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்தால் மகிழ்ச்சியை அவர்கள் தேடவேண்டிய அவசியம் இல்லை. ஞானிகள், உதாரணம் ஒன்றைக் கூறுகிறார்கள். நாய் ஒன்று எலும்பைக் கடிக்கும்போது எலும்பு குத்தியதால் தனது வாயிலிருந்து கசியும் ரத்தத்தை ஏதோ அந்த எலும்பில் இருந்து வருவதுபோல் நினைத்து சுவைக்குமாம். உண்மையில் தன் வாயில் இருந்து வெளிவரும் ரத்தம் தான் அது என்று அந்த நாய்க்குத் தெரியாது. அதுபோல் வேறு எதிலோ - யாரிடமோ கிடைக் கும் மகிழ்ச்சி, உண்மையில் தன்னி டம் இருக்கும் மகிழ்ச்சிதான் என்பது மனிதர்களுக்குத் தெரிவதில்லை.

பொருள்கள், மனிதர்கள் மூலமாய் மகிழ்ச்சி கிடைக்கும் என்று மகிழ்ச்சிக்காக அவற்றைச் சார்ந்திருப்பவர்கள், அவற்றின் மூலம் தங்கள் மகிழ்ச்சி குறையவும் கூடும் என்பதை உணர வேண்டும். அது கிடைத்தால் - அது நடந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்பது ஒரு மாயை. நடப்பதிலும் கிடைப்பதிலும் மகிழ்ச்சிக்கு எதிரான அம்சமும் இருக்கலாம். இந்த நிமிடத்துக்கு ஒன்று மகிழ்ச்சியைத் தருகிறது என்றால், அடுத்த நிமிடத்தில் அது மகிழ்ச்சிக்கு எதிரானதாகவும் மாறலாம். நாமாக எமது மகிழ்ச்சியைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் வெற்றி இருக்கிறது.

### மனமே மகிழ்வுக்குக் காரணம்

மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பெரும் செல்வம், பெரிய வீடு, கார் போன்றவை எல்லாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. யார் வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்குத்தேவை மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்ற மன உறுதிதான். மகிழ்ச்சி தான் முக்கியம் என்று கருதுபவர்களுக்கு மனத்தைக் கட்டுப்படுத்தும் பழக்கமும் வந்துவிடும். குறிப்பிட்ட சில விஷயங்களால் அல்லது பிரச்சினைகளால் மகிழ்ச்சி குறையும் என்பதை நடைமுறை ரீதியாக ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். சராசரி மனிதர்கள் எல்லாம் தவஞானிகள் அல்ல.

ஆனால், இது நீங்கலாகப் பார்க்கும்போது யார் யார் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்பதை ஒரு பொதுப்பார்வையாகப் பார்த்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.

மற்றவர்களைத் தேவையில்லாமல் ஆராய்பவன் தன்னுடைய மகிழ்ச்சியைக் கெடுத்துக்கொள்கிறான்.

மற்றவர்களுக்கு ஏதாவது கிடைத்தாலோ அல்லது யாராவது கொடுத்தாலோ, அதைப் பொறுக்க முடியாதவனுக்கு மகிழ்ச்சி போய்விடுகிறது.

### திருப்தி அடையாதவனிடத்தில் மகிழ்ச்சி இல்லை

கிடைத்ததிலும் இருப்பதிலும் திருப்தி அடையாத குணம் உள்ளவனுக்கு மகிழ்ச்சியும் நிலைக்காது.



அணுஅணுவாக எதிர்பார்ப்புக்களை வளர்த்துக்கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. ஏனென்றால், ஏமாற்றம், தோல்வி என்று வரும்போது அவர்கள் மனத்தின் சமநிலை கெட்டுப்போகும்.

தத்துவ மனப்பான்மை இல்லாதவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக்கொண்டு, வருவதையும் நடப்பதையும் பார்வையாளனாகப் பார்க்கும், பக்குவம் தத்துவ மனப்பான்மை கொண்டவர்க்கு உண்டு.

பிறர் பேசுவதையும் செய்வதையும் யதார்த்தமாக எடுத்துக்கொள்ளும் தன்மை எவ்வளவு குறைவாக உள்ளதோ, அந்த அளவுக்கு மகிழ்ச்சியும் குறையும்.

மனத்தையும் பேச்சையும் கட்டுப்பாடாக வைத்துக்கொள்ளத் தெரியாதவர்கள் அவ்வப்போது மகிழ்ச்சியை இழக்க நேரிடும்.

மனித உறவுகள் விடயத்தில் கவனமும் விழிப்புணர்வும் இல்லாது போனால் மகிழ்ச்சியை இழக்க நேரிடும்.

மற்றவர்களிடம் குறை அல்லது பிழைகாண்பதை ஒரு வழக்கம் ஆக்கிக் கொள்பவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது.

மற்றவர்களின் விமர்சனங்களை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சரியான அணுகுமுறையைக் கற்றுக் கொள்ளாதவர்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அளவுக்கு மீறி விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் கவலையைத் தான் வளர்ப்பார்கள்.

மிகையான கோபமும் வெறுப்பும் யாரிடம் இருக்கின்றனவோ அவர்கள் மகிழ்ச்சியைத் தியாகம் செய்ய வேண்டியதுதான். மேற்கூறியவை குறிப்பிட்ட சில உதாரணங்களே. மகிழ்ச்சிக்கு எதிரானவற்றை அடையாளம் கண்டு அவற்றை ஒதுக்கினால் உண்மையான மகிழ்ச்சி என்னும் ஒளி தெரியும். எங்கிருந்தோ வருவது மகிழ்ச்சி என்று நினைப்பவர்களுக்கு அது எட்டாக் கனியாகத்தான் இருக்கும்.

> மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பெரும் செல்வம், பெரிய வீடு, கார் போன்றவை எல்லாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. யார் வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்குத் தேவை மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்ற மன உறுதிதான்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்**: பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**இடபம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரியும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்**: புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.

**கடகம்** : பணவரவு திருப்திகரமாக இருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத்தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்**: வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். அடுத்தவர்களை குறை கூறுவதை நிறுத்துங்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**கன்னி**: எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போங்கள்.

**துலாம்**: நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.

**விருச்சிகம்**: மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.

**தனுசு**: ஆடம்பரமான செலவுகளை குறைப்பீர்கள். மறைமுகப் போட்டி களுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மகரம்**: சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**கும்பம்**: சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுகள்.

**மீனம்**: குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். முகப் பொலிவு கூடும். அரசால் அனுகூலம் உண்டு.


# எனது வாழ்வும் பணியும்



### விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

ஒரு பிரமாண்டமான கட்டடம் இடிந்து பாழாகிக் கிடப்பது போல இந்திய நாட்டின் நிலை சீர்குலைந்து கிடக்கிறது. இந்த நாடு பழையபடி மீண்டும் சீர்பெற்று எழுமா என்றால் முதல் பார்வையில், அந்த நம்பிக்கைக்கு இடம் இருப்பதாகச் சிறிதுகூடத் தெரியவில்லை. அந்த நாடு அழிந்து போனது, போனதுதான். ஆனால் சற்றுப் பொறுமையாக இருந்து நன்கு ஆராய்ந்து பார்த்தால் இந்த அழிவுக்குப் பின்னால் ஏதோ ஒன்று இருந்து கொண்டிருப்பது புலனாகும். உண்மை என்னவெனில், ஒரு மனிதன் எந்தவொரு உயரிய கொள்கை அல்லது ஒரு பெருங் குறிக்கோளின் புற வெளிப்பாடாக விளங்குகிறானோ, அந்த ஒரு சிறந்த லட்சியம் அழிந்து போகாத வரை அவன் நசித்துப் போவதில்லை; அழிந்து விடுவதுமில்லை. மீண்டும் தழைப்பான் என்பதற்கு நம்பிக்கையும் வாய்ப்பும் இருக்கிறது. நாம் அணியும் மேலங்கி (Coat) இருபது தடவைகள் திருட்டுப் போய்விட்டது என்பதால் நாமும் அழிந்து விடுவோம் என்று எண்ணுவதா? புதிதாக வேறு ஒரு மேலங்கி வாங்கிக் கொள்கிறோம். அவ்வளவுதான். ஆகவே மேலங்கி இன்றியமையாத பொருளன்று. பணக்காரன் ஒருவன் கொள்ளையடிக்கப்பட்டான் என்றால் அவனுடைய உயிரே கொள்ளை போயிற்று என்று கொள்வது? அதற்குப் பிறகும் அவன் உயிர் வாழ்கிறான் அல்லவா?

இந்த எண்ணத்தின் அடிப்படையில் இந்திய நாட்டை நோக்கினால், நாம் காண்பது என்ன? இந்தியா, அரசியல் ஆதிக்கம் பெற்ற நாடாக இல்லை; அந்நியரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடு அது. அவர்களுக்குத் தங்கள் சொந்த நாட்டிலேயே பேசவோ, தங்கள் கருத்தை எடுத்துக் கூறவோ உரிமை இல்லை. அவர்கள் ஒரு முப்பது கோடி அடிமைகளே தவிர வேறு எந்தச் சிறப்பும் இல்லாதவர்கள். ஓர் இந்தியக் குடிமகனின் சராசரி மாத வருமானம் ஒன்றரை ரூபாய்தான். பட்டினிதான் பெரும்பான்மையான மக்களின் சர்வ சாதாரணமான நிலைமையாக உள்ளது. வரவில் ஒரு சிறிது குறைந்தாலும் கூட மக்கள் சாவதைத்தான் காண்கிறோம். ஆகவே, அந்த மற்றொரு பக்கத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, நான் அழிவைத்தான் காண்கிறேன்; நம்பிக்கைக்குத் துளியும் இடமில்லாத நலிவைத்தான் காண்கிறேன்.



# சுற்றுலாத் தலமாகியது மண்டேலா வாழ்ந்த சிறை

மறைந்த தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் வாழ்ந்த ரூபன் தீவுச் சிறை சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது. தென் ஆபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா சமீபத்தில் தனது 95 ஆவது வயதில் உயிரிழந்தார். கறுப்பர் இன மக்களின் விடுதலைக்காகப் போராடிய மண்டேலா உலக மக்களின் மனதில் நீங்காத தலைவராக இடம்பெற்றவர். அவர் தனது 27 ஆண்டு கால சிறைவாசத்தை அனுபவித்த ரூபன் சிறையை சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் பார்த்துச் செல்கின்றனராம்.

தென் ஆபிரிக்காவுக்கு சுற்றுலா செல்லும் வெளிநாட்டினர் முதலில் கேப் டவுன் போன்ற இடங்களுக்குச் செல்வதில்லை. மாறாக மிகச்சிறிய நகரமான ரூபன் தீவுக்குத்தான் படையெடுக்கின்றனர். அங்குள்ள சிறைக்கு' சென்று மண்டேலா அடைக்கப்பட்டிருந்த மிகச்சிறிய அறையை மரியாதை கலந்த ஆர்வத்துடன் பார்க்கின்றனர். அந்த அறையில் மண்டேலா படுக்கையாகப் பயன்படுத்திய ஒரு போர்வை, மேசை, தண்ணீர் குடித்த குவளை, குப்பைக் கூடை போன்றவை நினைவுச் சின்னங்களாக உள்ளன. மண்டேலா விடுதலை ஆகி 22 ஆண்டுகளாகியும் இன்னும் அவை நினைவுச் சின்னங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



### நாளை

மார்கழி-10
புதன்கிழமை 25.12.2013
திதி: அட்டமி பி.இ.03.14 வரை
நட்சத்திரம்:
உத்தரம் பி.ப.03.59 வரை
சுபநேரம்:
04.56- 06.26 வரை
இராகுகாலம்:12.26 -01.56 வரை

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | 4 | 3 | 8 |
| | | 2 | | 1 | | | | 6 |
| | 5 | | | 7 | | 9 | | 2 |
| 6 | | 1 | | 3 | 2 | 5 | | 9 |
| 3 | | | | | | | | 4 |
| 7 | | 5 | 4 | 8 | | 1 | | 3 |
| 4 | | 3 | | 6 | | | 2 | |
| 2 | | | | 4 | | 3 | | |
| 5 | 7 | 9 | | | 8 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 3 | 9 | 7 | 5 | 1 | 6 | 8 |
| 7 | 9 | 9 | 2 | 1 | 6 | 4 | 5 | 3 |
| 6 | 1 | 5 | 4 | 8 | 3 | 7 | 9 | 2 |
| 8 | 3 | 2 | ·5 | 4 | 7 | 9 | 1 | 6 |
| 9 | 4 | 7 | 1 | 6 | 8 | 2 | 3 | 5 |
| 1 | 5 | 6 | 3 | 2 | 9 | 8 | 7 | 4 |
| 2 | 6 | 9 | 7 | 3 | 4 | 5 | 8 | 1 |
| 3 | 7 | 1 | 8 | 5 | 2 | 6 | 4 | 9 |
| 5 | 8 | 4 | 6 | 9 | 1 | 3 | 2 | 7 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] அதன் பொ[illegible]ர் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# IHB மாணவர்களுக்கு தமது திறமைகளை வெளிக்காட்ட வழிகோலிய பட்டமளிப்பு விழா




இன்ஸ்ரிடியுட் ஒஃவ் ஹெயார்ட்ரெசர்ஸ் அன்ட் பியுட்டிசியன்ஸ், (IHB), ஓர்கனைசேஷன் மொன்டியேல் கொய்ஃப்புயர் (OMC) உடன் இணைந்து இரண்டாவது பட்டமளிப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வில் 12 க்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் உள்ளடங்கலாக 90க்கும் அதிகமான மாணவர்கள் 2012- 2013 பருவத்துக்கான தமது டிப்ளோமா சான்றிதழ்களை
பெற்றிருந்தனர். பட்டதாரிகள், கல்வியகத்தின் மேலாண்மையாளர்கள் சபையினர் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோரின் ஏற்பாட்டில் கோலாகலமாக இந்த பரிசளிப்பு விழா டிசம்பர் மாதம் 8ஆம் திகதி மாலை 5 மணிக்கு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றது.

(IHB) டிப்ளோமா கற்கைகளைப் பூர்த்தி செய்த மற்றும் செய்முறை பாட்சையில் திறமைச் சித்தியெய்தியிருந்த பட்டதாரிகளுக்கு விசேட கௌரவிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. (IHB) யின் அங்கீகாரம் பெற்ற கல்வியகங்களில் கடமையாற்றும் பயிற்றுவிப்பாளர்கள், (OMC) வெண்கல டிப்ளோமா கற்கைகளை பூர்த்தி செய்தவர்கள் மற்றும் மேலாண்மையாளர்கள் சபையினர் போன்ற (IHB) கல்வியகத்தின் வளர்ச்சிக்காக தொண்டு அடிப்படையில் பணியாற்றும் பலரின் பங்குபற்றலுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

2011 ஆம் ஆண்டு முதல், (IHB) கல்வியகம் கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் 194பட்டதாரிகளை தயார்ப்படுத்தியுள்ளது. (IHB) கல்வியகத்தின் நோக்கம், சிகையலங்காரம் மற்றும் அழகியல் கலைத்துறைகளில் எதிர்கால தலைவர்களை உருவாக்குவதாக அமைந்துள்ளது.

இந்தத் துறையில் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்த மாணவர்கள் தமது திறமைகளைத் தொடர்ச்சியாக வெளிக்காட்டி வருகின்றனர். தங்க விருதைப் பெற்றுக் கொண்ட திருமதி. ஜெஸ்மின் ஃபரூக், கல்வியகத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவம் மற்றும் கல்வித் துறைக்கான வழிகாட்டல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், துறையில் புகழ்பெற்ற நிபுணர்களிடமிருந்து இந்தக் கற்கையை பயில்வதற்கு வாய்ப்பு கிடைந்திருந்தமை மகிழ்ச்சியளிக்கிறது. இந்த கற்கையை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் கற்றிருந்தேன். இவர்களின் வழிகாட்டலில் இந்த கற்கையை புதிய நோக்கில் பார்வையிட உதவியிருந்தது. முழுப்பாடநெறியும் மிகவும் சிறப்பானதாக அமைந்திருந்தது. எனக்கு இந்தகற்கை மூலமாக கிடைத்திருந்த அனுபவம் மற்றும் வாய்ப்புகள் போன்றன மிகவும் பெறுமதி வாய்ந்ததாக அமைந்துள்ளன என்றார்.

(IHB) கல்வியகம் தனது உயர்ரகமான பயிற்சிகள் மற்றும் அழகியல் மற்றும் அழகியல் கற்கைகளை இலங்கையில் வழங்குவதில் புகழ்பெற்ற கல்வியகமாகத் திகழ்கிறது. (IHB) மாணவர்களுக்கு முறையான பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு சிறந்த துறைசார் வல்லுநர்களாகத் திகழ்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

ஓர்கனைசேஷன் மொன்டியேல் கொய்ஃப்புயர் (OMC) என்பது, சிகையலங்காரத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனமாக திகழ்கிறது. தனிநபர்களுக்கான அழகியல் வழிகாட்டல், சலூன் உரிமையாளர்கள், தேசிய கல்வியகம், அவர்கள் எதிர்பார்க்கும் துறைகளில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. சிகையலங்கார நிபுணர்கள் துறையில் ஓர் கனைசேஷன் மொன்டியேல் கொய்ஃப்புயர் (OMC) கல்வியகம் மிகப்பெரிய நிபுணர்களின் கல்வியகமாகத் திகழ்கிறது. 1946ஆம் ஆண்டு இந்த கல்வியகம் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் வாய்ப்பை வழங்கும் SLIIT



புகழ்பெற்ற LMD இதழ் மூலம் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, இலங்கையின் மிகச்சிறந்த உயர் கல்வியகமாக தரப்படுத்தப்பட்ட SLIIT கல்வியகமானது 2013/2014 ஆம் ஆண்டிற்கான பட்டப்படிப்பு கற்கைகளுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்கின்றது. பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகங்கள் மற்றும் சர்வதேச பல்கலைக்கழக அமைப்பின் அங்கீகாரத்தைப் பெற்ற இலங்கையின் தனியார் உயர்கல்வி நிலையமாக SLIIT விளங்குகிறது.

SLIIT இன் பட்டதாரி கற்கைகள் அனைத்தும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. மேலும் ஆஸ்திரேலியா, லண்டன் மற்றும் கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டதாரி கற்கைக்ளையும் வழங்கி வருகின்றது. 24 பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்பட்டு வரும் SLIIT மாணவர்களுக்கு பல்வேறு கல்வி வாய்ப்புக்களை வழங்குவதுடன், 2 வருட கற்கை நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு தமது பங்காளர் பல்கலைக்கழகங்களுக்கு சென்று கற்கையை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.


மாணவர்களுக்கு பல்வேறு கற்கை தெரிவுகளை வழங்கும் நோக்கில் SLIIT, அண்மையில் UK Loughborough பல்கலைக்கழகம், UK Teesside பல்கலைக்கழகம், UK Huddersfiel- பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவின் La Trobe பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கைகோர்த்துள்ளது.

Loughborough பல்கலைக்கழகத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கையை இரு கல்வியகத்தின் சார்பாகவும் துணை அதிபர்(கற்பித்தல்) பேராசிரியர். மொராஜ் பெல் மற்றும் SLIIT பிரதம நிறைவேற்று அதிகாரியான பேராசிரியர் லலித் கமகே ஆகியோர் பரிமாறிக்கொண்டனர். இதனூடாக எமது கல்வியகத்தில் சராசரியாக 60% வீதத்துடன் ஒரு வருட கற்கையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் Loughborough பல்கலைக்கழகத்திற்கு சென்று Artificial Intelligence கற்கையுடன் கணினி அறிவியல் அல்லது கணினி அறிவியல் BSc. கற்கையை பூர்த்தி செய்ய முடியும். முதல் ஆண்டில் 20% கட்டணத்தை மாணவர்கள் செலுத்த வேண்டும். SLIIT கல்வியகத்தின் முதல் ஆண்டு டிப்ளோமாவில் 70% பெறும் மாணவர்கள் 70% கட்டணத்திற்கு தகுதி பெறுவர்.

Teesside பல்கலைக்கழகத்தின் கணினி பிரிவின் உதவி முதல்வர் டாக்டர் Gary Griffiths மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப கல்வியகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர். வட இங்கிலாந்தின் Middleborough இல் அமைந்துள்ள இப் பல்கலைக்கழகமானது ஐக்கிய இராச்சியத்தின் மிகச்சிறந்த 4 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது (இத்தரப்படுத்தல்கள் சர்வதேச மாணவர் பரோமீற்றர் எனும் ஆய்வுக்கமைவாக பெறப்பட்டது). இப் பல்கலைக்கழகம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி BSc கற்கையை வழங்குகிறது. UK இல் தமது இறுதி ஆண்டு கற்கையை தொடரும் அனைத்து SLIIT மாணவர்களுக்கும் 1500 பவுண் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது.

கணினி மற்றும் பொறியியல் கற்கைகளை வழங்கும் நோக்கில் அண்மையில் நாம் UK Huddersfield பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்துள்ளோம். உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மாணவர்களுக்கு பல்வேறு கல்வி வாய்ப்புக்களை வழங்குவதே எமது குறிக்கோளாகும் என SLIIT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசி யர் லலித் கமகே தெரிவித்தார். (த)

# 229 கிளைகள் ஊடாக தேசிய சேமிப்பு வங்கிச் சேவை



யாழ்ப்பாணம், டிசெ.24

சமூகத்தின் பொறுப்புக்களை உணர்ந்து மக்களின் அபிவிருத்திக்காக 229 கிளைகள் ஊடாகச் தேசிய சேமிப்பு வங்கி தனது வங்கிச் சேவைகளை விஸ்தரிப்புச் செய்துள்ளது என்று தேசிய சேமிப்பு வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம் தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.மேற்தரக் கிளையின் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கும்போது:

சமூகத்தில் பொறுப்புக்கள் ஏற்பட வேண்டுமானால் சிறந்த முதலீடுகள் வைப்புகளாக இருக்க வேண்டும். இதனை ஆரம்பத்திலேயே ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகவே மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை வங்கி கொண்டு வந்துள்ளது.

அந்த வகையில் சமூகத்தின் பொறுப்புக்களுக்கு மதிப்பளித்து தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து வருகிறது.

ஏனைய கிளைகளை விட யாழ்.மேற்தரக் கிளை அதிகளவான வாடிக்கையாளர்களைக் கொண்டு மக்களோடு ஒன்றித்த சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது- என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கார்த்திகேசு கணபதிப்பிள்ளை கூறியதாவது:-

ஏனைய மாகாணங்களுடன் போட்டி போட்டு கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்த வடமாகாணத்தின் கல்வி நிலை முன்பு இருந்ததை விட இன்று பின்தங்கிய நிலைக்குச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிலையை மாற்றி மாணவர்களது கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் அவர்களுடைய கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதனை விடுத்து மாணவர்களது உளவியல் சார்ந்த விடயங்களை கருத்தில் எடுக்காமல் பரீட்சைகளுக்காக மாணவர்களை பெற்றோர் தயார்படுத்த நினைப்பது வேதனையளிக்கிறது.

தனியாக பரீட்சையில் சித்தியடைந்தால் மட்டும் போதும் என்று மாணவர்களை கட்டாயப்படுத்திக் கற்பிப்பது அவர்களது உளத்தையும் பாதிப்படையச் செய்யும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் கல்வி கலாச்சாரம் ஒட்டுமொத்த சமூக ரீதியான பிரச்சினையாக நாம் முன்னெடுத்து அதனை நிலைநிறுத்த வேண்டும்.-என்றார். தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.மேற்தரக்கிளை முகாமையாளர் எம்.எம்.திசாரியஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 136 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (த-14)

## ஜெயந்தி விழா

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையம் நடத்தும் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 161 ஆவது ஜெயந்தி விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இல.17, மருதனார் மட வீதி, இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பஜனை, அன்னையின் வாழ்க்கையில் இருந்து சில பகுதிகள் வாசிப்பு, அறநெறி மாணவர்களின் உரை, சொற்பொழிவு, மங்கல ஆரத்தி என்பன இடம்பெறும். (ந)

## ஒளி விழாக்கள்

குருநகர், டிசெ.24

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் ஒளிவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் என்று பங்குத் தந்தை வணபிதா றோய் பேடினன்ட் அடிகளார் அறிவித்துள்ளார். (ஒ-51)

◆ ◆ ◆

குருநகர், டிசெ.24

அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தின் ஒளிவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும். (ஒ-51)

◆ ◆ ◆


குருநகர், டிசெ.24

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் ஒளிவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் என்று பங்குத் தந்தை வண.பிதா ஆர்.நேசராஜா அடிகளார் அறிவித்துள்ளார். (ஒ-51)

◆ ◆ ◆

குருநகர், டிசெ.24

கொழும்புத்துறை வளன்புரம் சூசையப்பர் ஆலயத்தின் ஒளி விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கும், மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தின் ஒளி எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கும் நடைபெறும். (ஒ-51)



திசைகாட்டி கலை இலக்கிய மன்றத்தின் ஆரம்ப விழாவும் கலை இலக்கியக் கருத்தாய்வும் அண்மையில் திசைகாட்டியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.
நிறுவனத்தின் தலைவர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கலை சார்ந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டனர். இதன்போது வாழ்வகத் தலைவர் இரவீந்திரனிடம் திசைகாட்டி நிறுவனத்தால் அன்பளிப்பாக மடிக் கணினி வழங்கப்பட்டது. (ந-14)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.24

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பெறுபேறுகள் வருமாறு:-

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கணிதம்**

தசிவதாஸ்-3ஏ,எஸ்.கிருஷிகா-3ஏ.

**அருணோதயக் கல்லூரி**

**கணிதம்**

இ.கீர்த்தனா-ஏ2பி, அ.தவக்குமார்-ஏ2பி, இ.அனுசன்-ஏபிசி.

**உயிரியல்**

கே.சோபனா-ஏபிசி.

**வர்த்தகம்**

பா.பரதன்-3ஏ, வி.மதுசாளினி - ஏ2சி.

**கலை**

உ.சுகந்தன்-3ஏ, வி.கலாகரன்-2ஏபி, யு.நிக்சன்-2ஏபி, யோ.டிலீப்குமார்-2ஏசி, பா.தர்சன்- ஏ2பி, உ.அகிலன்-ஏ2சி, ந.சிறீசாந்-ஏபிசி, ந.மகதீபசர்மா-2பிசி, த.துலக்சி-2பிசி.

**வவுனியா கனகராயன்குளம் ம.வித்தி.**

**கலை**

கு.குணதீபன்-2ஏபி, சி.நிலக்சன்-ஏ2பி, ச.கீர்த் திகா-ஏ2பி, தே.அனோஜன் -ஏபிசி, ஆ.சசிநாத்-ஏபிசி.

**கிளிநொச்சி முருகானந்தா**

**கணிதப் பிரிவு**

ப.தனோஜன்-3பி

**வர்த்தகப் பிரிவு**

க.தயாளன்-2ஏபி, கி.முகுந்தன்-2ஏபி, சஜீவன்- ஏ2பி, த.கீதன்-ஏபிசி.

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

**உயிரியல்**

கந்தசாமி திவாகரன்-3ஏ, ஜோசேப் அன்ரூ வசந்தன்-3ஏ, நவரத்னராஜா வீரடினேஷ்-2ஏபி, சிதம்பரநாதன் யசோதரகிருஷ்ணா-2ஏபி, சிவனேசன் சிவராம்-ஏ2பி, ரகு சரவணன்-3பி.

**கணிதம்**

தேவராஜா பிரையன் எரிக்-3ஏ, சிவலோகநாதன் குணேசன்-3ஏ, சோமசுந்தரம் நிசாந்தன்-3ஏ, சரவணபவன் கௌமாரன்-2ஏபி, நாகேந்திரன் சுகாஷனன்-2ஏபி,தயாபரராஜா சாம்நிரோஷன்-2ஏபி, சத்தியசீலன் நீபஜன்-2ஏபி, சாந்தகுமார் லெஸ்லி லவன்-3பி.

**வர்த்தகம்**

மகேஸ்வரன் விந்தரகன்-3ஏ, துரைசிங்கம் அனோஜிதன்-2ஏபி, சிதம்பரநாதன் யசோகுலன்-2ஏசி, செல்வரட்ணம் குமரேசன் - ஏ2பி.

**கலை**

சிறிகாந்தன் சிறி நாத்-ஏ2பி, கிரிதரன் மரினோ விஜிதரன்-2ஏபி, தர்மகுலசிங்கம் சிவநந்தன்- ஏபிசி. (ந-9)

## கிறிஸ்து பிறப்பு தினத் திருப்பலி

குருநகர், டிசெ.24

யாழ்.மரியன்னை பேராலயத்தில் கிறிஸ்து பிறப்புத் தினத் திருப்பலி இன்று செவ்வாய்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கும் காலை 7.30 மணிக்கும் திருப்பலிகள் நடைபெறும் என யாழ்.மரியன்னை பேராலயத்தின் பங்குத்தந்தை வணபிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் அறிவித்துள்ளார். (ஒ-51)

◆ ◆ ◆

குருநகர், டிசெ.24

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்புத் திருப்பலி இன்று நள்ளிரவு 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதே ஆலயத்தில் மறுநாள் புதன்கிழமை காலை 5.30 மணிக்கும் குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் காலை 7 மணிக்கும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (ஒ-51)

◆ ◆ ◆

குருநகர், டிசெ.24

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், கொழும்புத்துறை வளன்புரம் சூசையப்பர் ஆலயம், மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயம், உதயபுரம் செபஸ்தியார் ஆலயம் ஆகியவற்றில் கிறிஸ்து பிறப்புத் திருப்பலி இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

நத்தார் தினமான நாளை 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும், கொழும்புத்துறை வசந்தபுரம் யாகப்பர் ஆலயத்தில் காலை 7 மணிக்கும் பூம்புகார் பிலிப்நேரியார் ஆலயத்தில் காலை 7 மணிக்கும், திருப்பலிகள் இடம்பெறும் என பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை வணபிதா றோய் பேடினன்ட் அடிகளார் அறிவித்திருக்கிறார். (ஒ-51)

◆ ◆ ◆

குருநகர், டிசெ.24

கிறிஸ்து பிறப்புத்தின நள்ளிரவு ஆராதனைகள் இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திலும், பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்திலும் நடைபெறவுள்ளன. இதே நேரத்தில் அன்றைய தினம் இரவு 10 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்திலும், உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயத்திலும் கிறிஸ்து பிறப்புத் திருப்பலிகள் இடம்பெறும். மறுநாள் புதன்கிழமை காலை 7.30 மணிக்கு சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆல்யத்திலும், பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்திலும் திருப்பலிகள் நடைபெறும் என சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தின் பங்குத்தந்தை வணபிதா தா.நிருபன் நிசாந் அடிகளார் அறிவித்திருக்கிறார். (ஒ-51)

## சுனாமி நினைவு அஞ்சலி நிகழ்வும் கண்காட்சியும்

'மீண்டும் எழுவோம்' என்ற தொனிப் பொருளில் சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வு கே.கே.எஸ்.வீதி, துர்க்காபுரம், சிற்பாலயக் கலைக்கூடத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுனாமி சிற்பத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.
வழிபாட்டு நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதுடன், அவரது சிற்பப் படைப்புக்களின் கண்காட்சியும் இடம்பெறும். (ந)

## மகரஜோதி மண்டல பூர்த்தி பெருவிழா

யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இருமுடித் தேங்காய் நெய் நிரப்புதல் நடைபெறும்.
மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்திய கேரள சிங்காரி மேள வாத்தியத்துடன் ஐயப்ப சுவாமி யானை மேல் பவனியும், சாமிமார்கள் இருமுடியுடன் அடியார்கள் புடைசூழ பாத யாத்திரையும் இடம்பெறும்.
இந்தப் பாத யாத்திரை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, பலாலி வீதி வழியாக ஐயப்ப ஆலயத்தை வந்தடையும். தொடர்ந்து 18 ப் படி ஏறி படி பூசை நடைபெறும். சனிக்கிழமை காலை சுவாமிக்கு நெய் அபிஷேகம் இடம்பெறும். (ந)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்




கலாநிதி நோயல் அரசரட்ணம் விமலேந்திரன்
THE DOCTOR OF PROFESSIONAL STUDIES (SOCIAL DEVELOPMENT)
கலாநிதிப் பட்டம் பெற்று இன்று அகவை அறுபதில் கால்பதிக்கும் முதல்வரை உளமார வாழ்த்துகின்றோம்
"ஆளுமையின் குறியீடாய்"
அறிவுலகில் சீர்பெற்று
நனிசிறந்து வாழியவே!
விரிவுரையாளர்களும், ஊழியர்களும்,
பட்டதாரிகள் பிரிவு, யாழ்ப்பாணக் கல்லூரி.

**TVகள் மலிவு விலையில்**
மிக மிக மலிவு விலையில் SONY பனசோனிக் TVகள் 21"-14,000/=, 29"-15,000/= DVD-3,000/= குளிர்சாதனப் பெட்டிகள், CDரேடியோ-கசெற் Box அம்பிளிபயர் என்பன.
தொடர்பு : 077 044 0570
ரேடியோ ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S. வீதி, சுன்னாகம். (42918)(7.6.3)

**வாகனம் வாடகைக்கு**
Car, Van, Super 'AC'படி வாகனங்கள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:077 491 4511
077 772 2238
(42923)(4.6.3)

**வாடகைக்கு**
இலக்கம் 09, அரசடி வீதி, தட்டா தெரு சந்தியில் அமைந்துள்ள 4 அறை, 2குளியல் அறை, சமையல் அறை, கிணறுடன் நீண்டகால வாடகைக் குண்டு.
தொடர்புக்கு:V.இளங்கோ
077 310 9585
(43016)(4.6.3)

**கல்வி ஆண்டு - 2014**
**விண்ணப்பம் கோரல்**
சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்களுக்கான தொழில்சார் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரல்
(ACCA) ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS - U.K.
(சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சம்மேளனம்) இன் கற்கை நெறியை யாழ்நகரில் (K-AIMS) கல்வி நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
ACCA கற்கை நெறியானது மூன்று நிலைகளைக் கொண்டது.
1. DIPLOMA - 6 மாதம்
2. DEGREE - ஒரு வருடம்
3. ACCA - ஒரு வருடம்
O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் DIPLOMA நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.
HNDA, AAT,
யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்கள் DEGREE நிலையில் இருந்து ஆரம்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுதிகதி: 31 DECEMBER 2013
மேலதிக தகவல்களுக்கும் விசாரணைகளுக்கும்
077 372 2104/ 021 221 9422
Colombo
No. 35-1/1,Upatissa Road,
Bambalapitiya
JAFFNA
No. 147-2/2, K.K.S. Road,
Jaffna.
(42925) (45.6.3)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி சரஸ்வதி நாகராசா

தாயின் மடியில் :- 07*07*1947
ஆண்டவன் அடியில் :- 03*01*2013

திதி: 24.12.2013 அபரபட்ச ஸப்தமி

ஆண்டொன்று ஆகியதோ
அன்னையே உம்மைப் பிரிந்து
பார்க்கும் இடமெங்கும் – உம்
விம்பம் தானே தெரிகிறது
நீர் வாழ்ந்த வீடின்று
கலகலப்பை இழந்த வெறுமையில்
கனவினில் அடிக்கடி வரும் உம் முகம்
இப்போது நம்ப முடியவில்லை
கட்டிய உம் கணவரும்
பெற்ற பிள்ளைகளும்
பாசப் பேரப்பிள்ளைகளும்
மற்ற உறவுகளுடன்
கலங்கித் தவிக்கின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காய்
என்றென்றும் அஞ்சலிக்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசாரி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் புவனேந்திரன்
(இளைப்பாறிய உத்தியோகத்தர்-RedBarna,UN)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் புவனேந்திரன் (இளைப்பாறிய உத்தியோகத்தர்-Redbarna,UN) 21.12.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் சோமசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மருமகனும், பாக்கியத்தின் (ஓய்வுநிலை உதவி நூலகர்-யாழ் பொது சன நூலகம்) பாசமிகு கணவரும், ஜெயராணி, ஜெய கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துச்சாமி, முத்துக்குமாரு (லண்டன்), காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் ஜெகநாதன் (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.), Dr.சிவநேசன் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவராம், ஜனனி, பிரசாந்தன், நிஷானி, வாரணி, மாதுகா, சனுஜா, தசாங்கினி, சிவறஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும், அஞ்சலா, மெலனி, மோகன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணியளவில் இல.118, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 217 9518
021 300 1095

(42986)(10.6.3)

தகவல்:
திருமதி பாக்கியம்
(மனைவி)

# குழாய் மூலம் குடிதண்ணீர் எப்போது நடைமுறைக்கு?

*மக்கள் ஆதங்கம்*

கொடிகாமம் வேம்பிராய் பிரதேசத்தில் இருந்து வரணிப் பிரதேசம் வரை ஆரம்பிக்கப்பட்ட குழாய்மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படாத நிலை உள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் தொடர்பில் குழாய்கள் பதிக்கும் வேலைகள் இடம்பெற்று முடிவடைந்த நிலையில் குடிதண்ணீர் வழங்கும் வேலைகள் தொடங்கப்படாத நிலை காணப்படுகின்றது. வேம்பிராய் சந்தி, மீசாலை புத்தூர் வீதி, மந்துவில் பிரதேசம், வரணி மகாவித்தியாலய வீதி ஊடாக வரணி அம்மா கடை வரை குழாய்கள் பதிக்கும் வேலைகள் இடம்பெற்று முடிவடைந்து சுமார் ஒரு வருடம் கடந்த நிலையிலும் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் பணி கிடப்பில் போடப்பட்டுள்ளன.

குறித்த திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படாமையால் நல்ல குடிதண்ணீர் கிடைக்கும் என எதிர்பார்த்த மக்கள் ஏமாந்த நிலையில் உள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ரு-122)

# சாயி நிலையத்தில் நத்தார் நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இராமநாதன் வீதியில் உள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளைபுதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொடியேற்றத்துடன் நத்தார் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நிகழ்வில் பாலவிகாஸ் மாணவர்களில் கலை நிகழ்வுகள், நத்தார் பாப்பா வருகை, கிறிஸ்தவ பஜனைப் பாடல்கள் மற்றும் விசேட சொற்பொழிவுகள் இடம்பெறும். சொற்பொழிவை கொழும்புத்துறை புனிதசவேரியார் குருத்துவக் கல்லூரி அருட்தந்தை மைக்கல் சௌந்தரநாயகம் நிகழ்த்துவார். (ரு)

# பாம்பினால் தீண்டப்பட்ட பெண்கள் மருத்துவமனையில்

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவிப் பகுதியில் இரு பெண்கள் பாம்பு தீண்டியதால் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மல்லாவி 4ஆம் யுனிற் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை 7 மணியளவில் ஒரு பிள்ளையின் தாயொருவர் பாம்புக்கடிக்கு இலக்கானார். இவர் மருத்துவமனையில் முதலில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டார். அங்கு அவருக்குரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. ஜெனார்த்தனன் சத்தியவதனி (வயது-33) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

இதேவேளை மல்லாவி சிவபுரம் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரும் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் பாம்புக் கடிக்கு இலக்காகி மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக் காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிவபுரம் மல்லாவியைச் சேர்ந்த 30 வயதான பரமேஸ்வரன் ராதிகா என்பவரே இவ்வாறு மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஒன்பதாம் கட்டைப் பகுதியில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரும் பாம்புக்கடிக்கு இலக்காகி நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-6)

# பயிற்சி வகுப்புகளுக்கு பதிவு செய்க

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் பளைப் பிரதேசத்தில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு ஆங்கில பாட பயிற்சி வகுப்பை விரைவில் ஆரம்பிக்க வுள்ளனர்.

அத்துடன் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்திபெறாமல் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில பாட பயிற்சி வகுப்பினையும் ஆரம்பிக்கவுள்ளனர்.

இதேவேளை பிரதேச பாடசாலைகளில் சங்கீத பாடம் கற்கும் மாணவர்களுக்கும் விசேட வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பளை முல்லையடியில் உள்ள சங்க அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (ரு-9)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வீரகத்தி ராஜா
திதி : ஸப்தமி (24.12.2013)

தோற்றம் 23.05.1942
மறைவு 30.12.2007



அன்பென்னும் கோயிலிலே தரணி என்னும் உலகிலே
பாங்போற்ற வளர்த்தீர் சித்தப்பா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் இழப்பை எங்களால்
தாங்க முடியாது சித்தப்பா
உங்கள் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவின் துயரத்தால் வாடும்
மனைவி, சரஸ்வதி, அண்ணன் - மூதகையா,
பெறாமகள் - ஜெயராணி
பன்னாலை, தெல்லிப்பழை.

# இருபத்து நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராஜா
சந்திரராஜா (போஸ்)
(முன்னாள் உரிமையாளர்
குகன் ஸ்ரோர் - தலவாக்கலை)

திதி: 24.12.2013

பிறப்பு
20.02.1948

இறப்பு
19.12.1989

குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்த அன்பான அப்பாவே!
எங்களை திக்கற்றியாக்கி விட்டு எங்கு சென்றீர்கள்
ஆண்டுகள் ஆயிரம் போனாலும் மறக்க முடியுமா?
உங்கள் நினைவுகள் எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நீங்காத நினைவுகள் எம்முடன் தொடரும்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

என்றும் தங்கள்
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# நீங்கா நினைவில் நிலைத்திருக்கும் ஓராண்டு

அமரர்
## சின்னட்டி திருநாவுக்கரசு
[ஓய்வு நிலை அரச மருந்தாளர்]



மண்ணில் மலர்ந்த நாள்
02.06.1936

இறையில் கலந்த நாள்
04.01.2013

கண்கள் மூடி விழிப்பதற்குள்
ஓராண்டு வந்துற்றாலும்
எங்கள் காதுகளில் உங்கள்
அன்பு வார்த்தைகள் கேட்கிறது

கண்களில் உங்கள் தோற்றம்
நிழலாய்த் தெரிகின்றது
காலங்கள் ஓடி மறைந்தாலும்
எண்ணங்கள் யாவும்

உங்கள் நினைவாகவே என்றும் இருக்கும்


இல5/1,
ஸ்ரான்லி கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில்
நிலைகொண்ட
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவுகள்.

(42919)(3.6.4)

# மரண அறிவித்தல்

## சின்னராசா பாக்கியநாதன்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா பாக்கியநாதன் நேற்று (2013.12.23) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரதுஇல்லத்தில் இன்று (2013.12.24) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

N.M.M.V றோட்,
நெல்லியடி, கரவெட்டி.

தகவல்: மகன்
077 905 9546

# மனக் கணக்குப் போட்டியில் யாழ்.சிறுவர்கள் வெற்றி




யாழ்ப்பாணம், டிசெ.24
மலேசியாவில் டிசெம்பர் முதலாம் திகதி இடம் பெற்ற அபாக்கஸ் யூ.சீ.மாஸ் மனக் கணக்குப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று பங்குபற்றிய மாணவர்கள் குழுவில் நான்குபேர் தமது கன்னி முயற்சியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.
அபாக்கஸ் - யூ.சீ.மாஸ் (ABACAS-UCMAS) என்றழைக்கப்படும் குறித்த மனக் கணக்குப் போட்டியில் உலகின் 55 நாடுகளில் இருந்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். இலங்கையிலிருந்து முதற் தடவையாக 33 மாணவ, மாணவிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். சர்வதேச மட்டத்தில் இந்த மாணவ, மாணவியர் இந்தப் போட்டியில் பங்குபற்றி தமது கன்னி முயற்சியில் நான்கு பரிசில்களை வென்றிருப்பது பாராட்டப் பட்டுள்ளது.
நிலையத்தின் யாழ்ப்பாணக் கிளையிலிருந்து போட்டியில் பங்குபற்றி நிஷான், கௌசிகன், விஹாசினி, ருக்ஷிகா ஆகியோர் போட்டியில் மூன்றாம் இடத்தை வென்றெடுத்ததுடன் ஏனைய மாணவர்களும் பாராட்டுக்குரிய விருதுகளை வென்றுள்ளனர்.
4 வயதிலிருந்து 14 வயது வரையான மாணவர்களுக்கான இந்த மனக் கணக்கு நுட்பம் சீன முறையில் அமைந்ததொன்றாகும். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகமான இந்த முறையானது, டாக்டர் டினோவொங் என்பவரால் 1992ஆம் ஆண்டில் மலேசியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது.
2005 ஆம் ஆண்டில் இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட இந்தப் பயிற்சி நெறியில் தற்போது 140 பேர் வரையிலான சிறுவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்த நிலையத்தின் யாழ்ப்பாண முகவர் திருமதி ராதை பாஸ்கரனால் இந்தப் பயிற்சி நெறி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஞ)

## விழிப்புலனற்றோருக்கு 'வலு' இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.24
விழிப்புலனற்றோருக்கு உதவும் வகையில் இறுவட்டுடன் வெளிவந்துள்ள "வலு" சஞ்சிகை வாசகர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.
திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையம் தனது காலாண்டு இதழின் முதல் இதழை வெளியிட்டுள்ளது.
இந்த இதழுடன் ஒலி வடிவிலான இறுவட்டும் இணைத்து வெளியிடப்பட்டதால் மாற்றுத் திறனாளி கள் பெரிதும் பயனடைந்ததாக வாசகர்கள் தெரிவிக்கின்றனர்.
'வலு' காலாண்டு இதழில் மாற்றுவலு தொடர்பான தன்னம்பிக்கை கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. (ஓ-10)

## தண்டப்பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்

வடமராட்சி, டிசெ.24
துன்னாலை மத்தியில் உள்ள தோட்டத்தில் கட்டாக்காலியாகத் திரிந்து பயிரழிவு செய்த மாடு ஒன்று பிடிக்கப்பட்டு துன்னாலை மத்தி கமக்கார அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
கமக்காரர் அமைப்பின் பாதுகாப்பில் உள்ள இந்தக் கட்டாக்காலி மாட்டினை உரியவர் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பயிரழிவுக்கான தண்டப் பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் ... ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என ... அமைப்பு அறி வித்துள்ளது. (ந-8)

# தங்கப் பதக்கத்துக்கு விண்ணப்பிக்கலாம்

*பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்தமாக*

யாழ்ப்பாணம், டிசெ.24
கல்வி, கலை, விளையாட்டு மற்றும் தலைமைத்துவ பண்புகளில் சிறப்பை வெளிப்படுத்தும் மாணவனுக்கு பேராசிரியர் அழகையா துரைராசா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழங்கப்படவுள் ளது.
யாழ்.பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.
இதில் கடந்த கல்வியாண்டின் இளமானிப்பட்ட இறுதிப் பெறுபேற்றில் சகல துறைகளிலும் வினைத்திறனாக சித்தியெய்திய மாணவருக்கு பல்கலைக்கழக மட்டத்தில் பேராசிரியர் துரைராசா தங்கப்பதக்கமும், பீடங்களின் மத்தியில் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒவ்வொரு தங்கப் பதக்கமும் வழங்கப்படவுள் ளன.
இந்தத் தங்கப் பதக்கத்தை ஈட்டிக் கொள்ள கடந்த 28.02.2013 பின்னர் பட்டப் படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற் பிரிவில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
கடந்த 8 ஆண்டுகளாக மேற்படி விருதும் தங்கப் பதக்கமும் வருடாந்த பட்டமளிப்பு விழாக்களில் வழங்கப் படுகின்றமை தெரிந்ததே. (ந-41)

**சகல துறைகளிலும் வினைத்திறனாக சித்தியெய்திய மாணவருக்கு பல்கலைக்கழக மட்டத்தில் பேராசிரியர் துரைராசா தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது.**

## யாழ்.மாநகர சபை மாதாந்த கூட்டம்

யாழ்.மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில், முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஜானகி திருவருட்செல்வன் அவர்களின் அன்பு மாமியார்

**கனகரஞ்சினி திருலோகசிங்கம்**

அவர்கள் 20.12.2013 அன்று இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிசங்கம், (42910)(4.8.3)
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**ஓராண்டு நினைவாக...**



அமரர் சுப்பர் முத்துக்குமாரசாமி
திதி : ஸப்தமி (24.12.2013)
மலர்வு 07.09.1940
உதிர்வு 04.01.2013

அன்பினிலே இமயமாகி எம் அகத்துள்ளே கோயிலாகி
பண்பாய் இப்பாரினிலே எம்மை வளர்த்து
வாழவைத்த எங்கள் - தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும் என்றும் எம்முடன் இருப்பது
போல் எம்மை வழி நடத்துவது போல் நாம் உணர்கின்றோம்
இருந்தாலும் அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் என்றும் எமக்கு
நீங்கள் தான் அப்பா.

கைதடி மேற்கு,
கைதடி.
உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர். (42932)(7.6.3)

**ஆறாத ஆறாம் ஆண்டு நினைவுடன்**

அன்னை மடியில் 01.02.1945



ஆண்டவன் அடியில் 10.01.2007

அமரர்
**பொன்னையா தம்பையா**
திதி : ஸப்தமி (24.12.2013) செவ்வாய்க்கிழமை

அன்பின் உறைவிடமாய் ஆதரவிற்கு ஆதவனாய்
இனிய இயல்பினனாய் ஈகையில் வள்ளல் பெருந்தகையாய்
எம்மையெல்லாம் பெற்றெடுத்து பாசத்துடனும் நேசத்துடனும்
வளர்த்தெடுத்து வாழவைத்த எம் அப்பாவே!
ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறாது உங்கள் நினைவு
உங்கள் ஆத்மசாந்திக்காகத் தெருவாரப்
பிள்ளையாரை வேண்டுகின்றோம் நாம்.

தெருவாரப்பிள்ளையார் கோயிலடி,
டச்சு வீதி, மந்துவில் கிழக்கு,
சாவகச்சேரி.
நீங்கா நினைவுட...
குடும்ப...

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியரான **ச.ஜெயக்குமார்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கமலாதேவி சண்முகநாதன்**

அவர்கள் 20.12.2013 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

யா/வயாவிளான் ம.மகாவித்தியாலயம்,
பலாலிவீதி, வயாவிளான். (42926)(12.6.3)
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

**மரண அறிவித்தல்**

**திருமதி செல்வராணி கந்தவேள்**



வேலணை மேற்கு, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி கந்தவேள் 22.12.2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - செங்கமலம் (காவேரி) தம்பதியரின் அன்பு மகளும், கார்த்திகேசு கந்தவேளின் அன்பு மனைவியும், கலாரூபி, இளங்கீரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), மோகனதாஸ் (பிரான்ஸ்), ஞானரூபி ஆகியோரின் அன்புத் தாயும், லோகேஸ்வரன், ஜெயசுதா, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், வர்ஷன், திவிஷன், மோஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் (றிச்சாட், சிங்கப்பூர்), இராசரத்தினம் (திருகோணமலை) மற்றும் பரமேஸ்வரன் (திருகோணமலை), காலம்சென்ற திவ்வியரத்தினம் (திருகோணமலை) மற்றும் சற்குணம் (பிரம்படி லேன், கொக்குவில்), சுசிலா (புளியங்கூடல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவக்கொழுந்து (திருகோணமலை), மகாலட்சுமி, கமலேஸ்வரி, செல்வரத்தினம், மகேஸ்வரி, நாகம்மா, பாக்கியம், கிருஷ்ணபிள்ளை, சரஸ்வதி, பரமேஸ்வரி, நாகராசா, பாலசுப்பிரமணியம், தேவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுருவில் (புளியங்கூடல்) இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கா.கந்தவேள்**
முன்னாள் வேலணை ப.நோ.கூ.ச. முகாமையாளர்.
வேலணை மேற்கு,
புளியங்கூடல். (2.6.3)(42935)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தங்கம் இராசையா



புதூர், புளியங்குளத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பண்டாரிக்குளம், முனியப்பர் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் இராசையா நேற்று (23.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், முத்துலிங்கம் மற்றும் பூலோகசிங்கம், இராமலிங்கம், லோகநாதன், நாகேஸ்வரி, அன்னலட்சுமி, மகேஸ்வரி, இராமநாதன், நாகராசா ஆகியோரின் அன்புத் தாயும், நாகம்மா, நாகேஸ்வரி, விஜயலட்சுமி, யோகேஸ்வரி, நவமலர், சிவலிங்கமூர்த்தி, லலிதாதேவி, குலநிதி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 024 568 5720
இல.28, முனியப்பர் கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா. (2.6.3)(43563)

# எதிர்வரும் மார்ச் மாதமளவில் புதிய கட்டடத்தில் செயலகம்

*கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு*

கிளிநொச்சி மாவட்ட செயலகத் தின் புதிய கட்டடம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் திறந்து வைக்கப்பட வுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத் துக்கான புதிய கட்டடத்தை அமைக்கும் முதற் கட்டப் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. கட்டட வேலைகள் முடிவடைந்ததும் எதிர் வரும் மார்ச் மாதத்தில் புதிய கட்டடத்தில் மாவட்ட செயலகம் இயங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் தற்போது இட நெருக்கடியுடனேயே இயங்கி வருகின்றது. கூட்டங்களை நடத்தக் கூடிய மண்டப வசதியில் பாதக நிலையும் காணப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் அதிகள வான நிகழ்வுகளை வாகனத் தரிப்பிடத்தில் நடத்தும் அளவுக்கு மாவட்ட செயலகத்தில் இட நெருக்கடி காணப்படுகின்றது. புதிய கட்டடத்தில் மாவட்ட செயலகம் இயங்கத் தொடங்கும் போது தற் போதைய இடம் வர்த்தகப் பகுதியாக விளங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

> "-"
> கிளிநொச்சி அரச செயலகத்துக்கான புதிய கட்டடத்தை அமைக்கும் முதற் கட்டப் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

**கோழி இறைச்சி விற்பனைக்கு**

தரமான சுத்தம் செய்யப்பட்ட புறோயிலர் இறைச்சி மலிவான விலையில் விற்பனைக்குண்டு.
1Kg 400/=
சிவசக்தி பாம்
காரைக்கால் சிவன் கோயிலடி, கோண்டாவில்.
T.P: 077 950 7269
(42943)(10.14)

A/L இன் பின்னர்... கணினி டிப்ளோமா கற்கை நெறிகள்

Diploma in Information Technology DiTec
Diploma in Office Automation DOA
Diploma in Pc Applications DPCA
Adv. Dip. in Hardware & Networking ADHN
Dip. in Video Production & Multimedia DVPM
Dip.in Web Designing & Development DWD
Dip. in Computerized Accounting DCA
Tally, JAVA, AutoCAD



DMI COMPUTER EDUCATION
75% OFF

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு I - 26/ 12 /2013 9.30 am
பிரிவு II - 30/ 12 /2013 9.30 am
முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கன்னாதிட்டி வீதி, | M.M.V. வீதி, | No.174, கண்டி வீதி, | No.130, K.K.S. வீதி, |
| Tel.: 021-222 4403 | Tel. : 021-226 2470 | Tel. : 021-227 0775 | (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970 |

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி கந்தையா (ஓவசியர்)



மட்டுவில் வடக்கு, சிவன்கோயிலடியைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி கந்தையா (ஓவசியர்) நேற்று (23.12.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அருணாசலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளு஝், காலஞ்சென்ற கந்தையாவின் (ஓவசியர்) அன்பு மனைவியும், சிவசக்தி (பிரான்ஸ்), சிவராணி ஆகியோரின் அன்புத் தாயும், குணம் (பிரான்ஸ்), திருச்செல்வம் (தாய்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சரவணபவானந்தன் (சின்னானந்தம்) மற்றும் சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஐயாத்துரை, சின்னத் தம்பி (விதானையார்), சின்னம்மா மற்றும் இராமலிங்கம், ஆச்சிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் மைத்துனரும், பிரவீண், பிரதீப், சிந்துஜா, குகப்பிரியா, சஞ்சீவன், சந்தோஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொட்டயடி தூவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சிவன்கோயிலடி.
(33049) (10.14)
தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சின்னப்பு அருளப்பு



வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னப்பு அருளப்பு நேற்று (23.12.2013) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தவமலரின் அன்புக் கணவரும், தேவமலர் (ஆசிரியை, புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), காலஞ்சென்ற தேவரஞ்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோசேப் ஸ்டாலினின் (முகாமையாளர்- ஒட்டுசுட்டான், சி.க.கூ.சங்கம்) அன்பு மாமனும், நிதர்ஷிக்கா, அனோஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கச்சாய் புனித செபமாலை அன்னை தேவாலயத்தில் இடம்பெற்று, அல்லாரை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரம் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.
(C72017) (10.14)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி சண்முகநாதன்

(அம்மாப்பிள்ளை)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சண்முகநாதன் 20.12.2013 சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-செல்லம்மா தம்பதியினரின் அன்புமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம்- வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், சண்முகநாதன் (சின்னராசா) அவர்களின் பிரியமிகு மனைவியும், உதயகுமாரன்(பிரான்ஸ்), சிவகுமாரன் (லண்டன்), ஜெயகுமார்(ஆசிரியர் யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), இந்திரகுமார் (உரிமையாளர், அம்பாள் தளபாட நிலையம், சுழிபுரம்), சந்திரகுமார்(ஆசிரியர், யா/ யாழ். இந்துக்கல்லூரி), சுரேஸ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்,UN-HABITAT, புதுக்குடியிருப்பு), ஞானகுமார் (ஆசிரியர், கண்/இராஜவலை இந்து தேசிய கல்லூரி, திகன) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம், கமலேஸ்வரி, மகேஸ்வரி(கனடா), முத்துலிங்கம், லோகேஸ்வரி, பத்மநாதன், ருக்மணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பேரின்பநாயகம், செல்வரத்தினம், தங்கராசா, யோகமலர், பரராஜசிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, யோகநாதன், காலஞ்சென்ற சிவகுமாரன், சிவகுரு, விஸ்வலிங்கம், செல்லப்பா, பறுவதம், காலஞ்சென்ற அப்புத்துரை, தவமணி, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்சினி(பிரான்ஸ்), கௌசல்யா(லண்டன்), சிவகௌரி(ஆசிரியை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), பங்கயற்செல்வி, இந்துமதி, உமாகௌரி(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், துணுக்காய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிதுனா(பிரான்ஸ்), வர்ணிகா (பிரான்ஸ்), அஸ்வினி(பிரான்ஸ்), ஹர்சனா(லண்டன்), மோகிலன்(லண்டன்), மகிழ்ஜன்(லண்டன்), சகானா, பூர்விகா, பாவனா, தர்சனன், தினுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'ஞானதீபம்'
பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம்.
(42938)(3.6.4)
தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி அந்தோனியாப்பிள்ளை இராசநாயகம்

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் - பளை அரசினர் வைத்தியசாலை)



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், இல.38, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனியாப்பிள்ளை இராசநாயகம் (செல்வம்) நேற்று (23.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் மனுவற்பிள்ளை - ஞானமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசநாயகத்தின் (புகையிரதக் களஞ்சியக் காப்பாளர் - மருதானை) அன்பு மனைவியும்,நீக்கிலஸ் துரைநாயகம் (USA), சாந்தி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மேரிமாகிறெற் மற்றும் லயனல் ஆகியோரின் அன்பு மாமியும், நிலாந்தி (ஆசிரியர், யா/ கனகரத்தினம் ம.ம.வி), ஜெயமதி (கனடா), றெமிஷியன், ஜெயபதி, யூட் செல்வகுமார் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஷர்வியோ, சைனுகா, மிஷேல் (கனடா), ஹனா (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இல.38, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் இருந்து மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.
(42939)(2.6.)
தகவல்:
நிலாந்தி ஜெயபதி.

# ஹோமாகம பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் தோல்வி

கொழும்பு,டிசெ 24
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசமுள்ள ஹோமாகம பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் 2 வாக்குகளினால் தோல்வியடைந்துள்ளது.
பிரதேச சபையின் தலைவர் ஏ.டீ.குமாரசிறி நேற்று வரவு-செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

"-"

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவான 10 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வாக்களிப்பின்போது வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 10 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
உப தலைவர் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் 9 பேர் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர். (த)

## கடவுச்சீட்டுத் தகவல் அறிய புதிய தொலைபேசி இலக்கம்

கொழும்பு,டிசெ 24
கடவுச்சீட்டு உள்ளிட்ட அதனுடன் தொடர்பான சரியான தகவல்களை வழங்குவதற்காக, குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தினால் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
1962 என்ற தொலைபேசி இலக்கமே புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
வாரநாள்களில் குறித்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பினை ஏற்படுத்தி, கடவுச்சீட்டு உள்ளிட்ட அதனுடன் தொடர்பான சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.
கடந்த காலங்களில் கடவுச்சீட்டு, விசா, குடியுரிமை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டமையினால் இந்தத் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.
1962 என்ற இந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு வார நாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை அழைப்பை ஏற்படுத்தி, எந்தவொரு தகவலையும் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

## 59 இலங்கை மீனவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

சென்னை,டிசெ 24
தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் தேமல் நகர் பொலிஸார் தாம் கைது செய்த இலங்கை மீனவர்கள் 59 பேர் மீது இராமநாதபுரம் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.
இலங்கை அரசு தம்வசமுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமெனஎதிர்பார்த்து இலங்கை மீனவர்களை விடுவித்து வந்த தமிழக அரசு இப் போது கடுமையான நிலைப் பாட்டை எடுத்து இலங்கை மீனவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகையைத் தயாரித்துள்ளது.
தற்போது புழல் மத்திய சிறையிலுள்ள இந்த மீனவர்கள் நீர்கொழும்பு,புத்தளம் மற்றும் களுத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஜனவரி 3 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் கன்னியாகுமரிக் கடலுக்கு அப்பால் கடலில் வைத்துக் கரையோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
தூத்துக்குடி மீன்பிடித்துறை முக உதவிப் பணிப்பாளர், இலங்கை மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ட்ரோலர்கள் நல்ல நிலையில் இருப்பதாக உறுதி செய்துள்ளார். (த)

## நீரில் மூழ்கி இளம்பெண் சாவு: 2 சிறுவர் வைத்தியசாலையில்

கம்பளை பகுதியில் நீரில் மூழ்கி இளம் யுவதி ஒருவர் மேலும் இரு சிறுவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் கம்பொலவெல பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற மூவர் நீரில் மூழ்கி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.
பின்னர் இவர்கள் பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டுக் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.
இதில் 18 வயதான யுவதி உயிரிழந்ததோடு, 17 வயதான சிறுமி ஒருவரும், 15 வயதான சிறுவன் ஒருவரும் கம்பளை வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)


மிகப் பிந்திய வரவு
கனடா படிக்க உழைக்க
1 மாதத்தில் பறக்கலாம்
3 பேருக்கு மாத்திரமே இவ் அரிய வாய்ப்பு
முடிவு திகதி 26.12.2013
முக்கிய குறிப்பு:- இவை சம்பந்தமான சட்ட ஆவணங்களை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.
www.thisaivisa.com
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 221 9016, 021 568 9090


## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



தோற்றம்
1936★07★29
மறைவு
2013★11★23

**வெற்றிவேலு இரத்தினசிங்கம்**
(இளைப்பாறிய நெற்களஞ்சிய பொறுப்பாளர்)

கடந்த 23.11.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகத் துயர் பகிர்ந்தவர்கள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பலாலி வீதி
திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

## வரவு - செலவுத் திட்டம் தோற்ற சபைகளுக்கு புதிய தலைவர்கள்

கொழும்பு,டிசெ 24
2014ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட் டத்தைத் தோற்கடித்த மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தலைவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.
இதன்படி புதிய தலை வர்களின் பெயர்கள் தேர்தல்கள் திணைக் களத்துக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.
வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் புதிய தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.
இதேவேளை வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமது செயற்பாடு குறித்து விளக்கமளிக்குமாறு கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (த)


வீடு வாடகைக்கு
யாழ். பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
T.P : 077 0090425



தேவை
அரைக்கும் ஆலை, சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றுக்கு அனுபவம் உள்ளவரும் பழக விரும்புபவரும் தேவை.
தொடர்பு : பிருந்தா மில்ஸ்
No.18 றக்கா றோட் யாழ்ப்பாணம்.
T.P : 077 9912304



விசேட அறிவித்தல்

நான்காவது வருட சேவையில் கால் பதிக்கும் ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை

இன்று தொடக்கம் முதலாம் திகதி வரை ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை வழங்கும் விசேட கட்டணக் கழிவு
~~1300~~ 1000/=
முதலாம் திகதி வரை பொதிகள் விஷேட கழிவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு:- 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளுங்கள் எமக்கு வேறுமுகவர்கள் இல்லை நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள் முகவர்களின் போலிவார்த்தைகளை நம்பி உங்கள் பயணநேரங்களை வீணடிக்காதீர்கள்
உடன் அழையுங்கள்
யாழ். 0777 806 573 (கோபி)
கொழும்பு:- 0777 806 583 (குமார்)
முறைப்பாடுகளுக்கு:- 0777 674119


## பேஸ்புக் குறித்து 2200 முறைப்பாடுகள்

கொழும்பு,டிசெ 24
இந்த வருடத்தில் பேஸ்புக்சமூகவலைத்தளம் தொடர்பில் 2 ஆயிரத்து 200 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவசர தொழிநுட்பப் பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
இவற்றுள் அதிகமானவை போலியான பேஸ்புக்சமூகவலைத்தளம் தொடர்பிலானவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த நிலையில், பேஸ்புக்சமூகவலைத்தளம்மற்றும்இணைய முகவரிஎன்பவற்றைப் பயன்படுத்தம் போது மிக வும் கவனமாகப் பயன்படுத்தி தமது தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)


TRADE FINANCE & INVESTMENTS PLC.
(Registered with the Central Bank of Srilanka under the Finance Companies Act no. 78 of 1988)
(Registration No. PB 445)
பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் பொருள்கள் விற்பனைக்கு

| MODEL | Reg.No |
|---|---|
| CD DAWN | NP BAC - 9513 |
| PLEASURE - HERO | NP BAB - 8276 |
| MD - 90 (JAPAN) | NP BAB - 7527 |
| SPLENDER NXG | NPXJ - 7711 |
| CB TWISTER | NPXU - 9694 |
| DIDO CARGO | NPQY - 4129 |
| DIDO CARGO | NPQY - 3272 |
| BOWSER | 4000L |
| LORRY - ISSUZU | 26-5162 |
| HARVESTER - MUBOTA | 220123 |
| PHOTO COPY MACHINE | TOSHIBA |
| ICECREAM MACHINE | USED |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
(CR BOOK, DELETION LETTER AND YARD RELEASE LETTER)
லீசிங் வசதியையும் பெற்றுக்கொள்ளமுடியும்.
** நிபந்தனைக்குட்பட்டது.
KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.
மேலதிக விவரங்கள் - 021 2280110, 021 2280108

# வவுனியாவில் இன்று கூடுகிறது கூட்டமைப்பு

தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் அடுத்த கட்ட நகர்வுக்கான முடிவை எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் இரா. சம்பந்தனின் தலைமையில் இன்று வவுனியாவில் கூடுகின்றனர்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த முக்கிய சந்திப்பில் தமிழ்த் கூட்ட மைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண அமைச்சர்கள், வடக்கு, கிழக்கு மாகாணசபைகளின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த முக்கிய சந்திப்பில் வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகள், இரணைமடுக்குளம் நீர் விநியோகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுகின்றமை, தமிழர் தாயகத்தில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, அரசியல் தீர்வு, ஜெனிவாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆகியவை உட்பட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி முடி வுகள் எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் ஆளுகைக்குள் வடக்கு மாகாணசபை வந்த பின்னர் கட்சியின் வடக்கு, கிழக்கு மக்கள் பிரதி நிதிகள் முதன்முதலாக ஒன்றுகூடி நடத்தும் முக்கிய சந்திப்பு இது வென்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

# பாப்பரசரை இலங்கைக்கு அழைத்து புலிகளுக்கு உயிர் கொடுக்க முயற்சி

## கத்தோலிக்க திருச்சபை மீது தேரர் பாய்ச்சல்

கொழும்பு, டிசெ. 24

"பாப்பரசர் பிரான்ஸிஸை இலங்கைக்கு அழைத்து வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்க கத்தோலிக்க திருச்சபை முயற்சித்து வருகிறது" என்று தர்மபாலாவின் தலைமுறை என்ற சபையின் தலைவர் மெதகம தம்மவன்ன தேரர் குற்றம்சாட்டினார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சர்வதேசத்தின் கைப்பொம்மையாகவே கத்தோலிக்க திருச்சபை அன்று முதல் இன்று வரை செயற்பட்டு வருகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபையால் முன்வைக்கப்பட்ட மேய்ப்பனின் பிரகடனத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு பத்தரமுல்ல செஸ்திரிபாயவில் நேற்று நடைபெற்றது. இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் போர் நடைபெற்ற போது பிரிவினைவாதமும், தீவிரவாதமும் பௌத்தமதத்திற்கு எதிராகவே செயற்பட்டன. ஏனைய மதப் பிரதிநிதிகள் எம் முடன் கைகோர்த்துச் செயற்பட்டாலும் அவை சர்வதேசத்தின் கைப்பொம்மையாகவே பெரும்பாலான நேரங்களில் காணப்பட்டன.

தற்போது கத்தோலிக்கத் திருச்சபையானது வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பூர்வீக பூமி, வடக்கிலிருந்து இராணுவ ஆளுநர் உடன் வெளியேற வேண்டும் என்ற கருத்துகள் அடங்கிய 'மேய்ப்பானின் பிரகடனம்' என்ற ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூண்டும் விதமாகக் காணப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேசம் முயற்சிக்கும் பிரிவினைவாத செயற்பாட்டையே கத்தோலிக்கச் திருச்சபையும் முன்னெடுத்து வருகிறது.

ஏன், போர் காலத்தின்போதும் கத் தோலிக்கத் திருச்சபை புலிகளுக்கு உதவிகளை செய்தது. அதுமட்டுமல்ல, ஆனந்தசங்கரியின் சகோதரர்கள் கொலை செய்யப்பட்டமை, மகேஸ்வரன் கொலை செய்யப்பட் டமைக்குப் பின்னாலும் கத்தோலிக்கத் திருச்சபை இருந் தமைக்கான ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன.

இந்நிலையில் தற்போது 'மேய்ப்பானின் பிரகடனம்' என்ற ஒன்றை வெளியிட்டு மறுபடியும் புலிகளுக்கு உயிரூட்டவே இந்த திருச்சபை முயற்சித்து வருகிறது. அதற்காகவே பாப்பரசர் பிரான்ஸிஸையும் நாட்டிற்கு அழைத்துள்ளது. இவர் வரு கின்றமையை நாம் எதிர்க்க வில்லை என்றாலும் இவரின் செயற்பாடுகள் அனைத்தையும் நாம் அவதானித்துக் கொண்டே இருப்போம்" என்றார்.

அதேவேளை, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர கருத்து தெரிவிக் கையில்,

"கத்தோலிக்கத் திருச்சபையின் மேய்ப்பானின் பிரகடனம் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் இத் திருச் சபையானது தொடர்ந்தும் பெரும்பான்மையினத்தவர்களுக்கு எதிராகவே நாட்டின் செயற்பட்டுக் கொண்டு வந்தது - வருகிறது. தற்போது இந்த பிரகடனத்தைக் கொண்டு வந்து மக்களை மூளைச் சலவை செய்ய முயற்சிக்கிறது." என்றார். (த-சி)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மன்னார் புதைகுழி

யுறுத்தியுள்ளார். போரின் போதும், அதன் பின்னரும் வடக்கு, கிழக்கில் கண்டுபிடிக்கப் பட்ட மனிதப்புதைகுழிகள் குறித்து இதுவரை நீதியான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை என்றும், அங்கு இன்னும் பல மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி யில் இருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை 11 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மனிதப் புதைகுழி இடம்பெற்ற பகுதியில் இராணுவ முகாம் ஒன்று இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், இந்தப் பகுதியில் ஏராளமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வருவது அங்குள்ள மக்கள் மத்தியில் பெரும்பரபரப்பையும் பதற்றத்தையும் தோற்றுவித்துள் ளது.

இதுதொடர்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப்பை நேற்று 'உதயன்' தொடர்புகொண்டு கேட்டது. இதன் போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் ஒருபுறம் நடைபெற் றுக்கொண்டிருந்தவேளை மறுபுறம் இளைஞர், யுவதிகள், குடும்பஸ்தர்கள், குடும்பப்பெண்கள், மத குருமார்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என ஆயிரக்கணக்கான தமிழ் உறவுகள் இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் மற்றும் அரசுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களினால் கடத்தப்பட்டு காணாமற்போயுள்ளனர்.

இவ்வாறு காணாமற்போனவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்று அவர்களின் உறவினர்கள் ஏக்கத்துடன் இருக்கின்றாகள். அத்துடன், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நீதி கோரி அவர்கள் ஜனநாயகப் போராட்டங்களை நடத்தியும் மனுக்களை உரிய தரப்பினர்களிடம் கையளித்தும் வருகின்றனர். ஆனால், இவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை; உண்மைகள் வெளிவரவில்லை.

இந்நிலையில், மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மனித புதைகுழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம் இருந்த அந்தப் பகுதியிலிருந்து ஏராளமான மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வருவது எமக்குப் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர்க் காலத்தில் அரச படைகளினால் கடத்தப்பட்டு காணாமற்போன தமிழ் உறவுகளே இவ்வாறு எலும்புக் கூடுகளாக மீட்கப்படலாம் என்று நாம் சந்தேகிக்கின்றோம். இது குறித்து சர்வதேச ரீதியில் உடன் விசாரணை நடத் தப்பட வேண்டும். அப்போதுதான் உண்மைகள் வெளிவரும்.

போரின் போதும், அதன் பின்னரும் வடக்கு, கிழக்கில் பல மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால், இது குறித்து இதுவரை நீதியான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை. வடக்கு, கிழக்கில் இன்னும் பல மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்படலாம். ஏனெனில், அரச படைகளினால் கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள், இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள், இராணுவத்தினரால் கைதுசெய் யப்பட்டவர்கள் என ஆயிரக்கணக்கான தமிழ் உறவுகளின் நிலை குறித்து இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை - என்றார். (த-சி)

## போர்

துக்கு அனுப்பி வைக்குமாறு புள்ளி விபரவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகப் போர்க்கால இழப்பீடுகள் தொடர்பில் கணக்கெடுப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. 1982 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடையில் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் அங்க வீனமடைந்தவர்கள், சொத் திழப்புக்கள் தொடர்பில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பைப் பொது நிர்வாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சு மற்றும் புள்ளிவிபவியல் திணைக்களம் ஆகியன இணைந்து முன்னெடுத்திருந்தன.

கடந்த நவம்பர் 28 ஆம் திகதி ஆரம்பமான நடவடிக்கைகள் கடந்த 20 ஆம் திகதியுடன் முடிவடைந்தன. கிராம சேவையாளர் பிரிவுகள் ரீதியாகவே இந்தக் கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வழமையாக இவ்வாறு மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்பின் முடிவில் கிராம சேவையாளர் ரீதியாக, பிரதேச செயலர் ரீதியாக, மாவட்ட ரீதியாக தகவல்கள் தொகுக்கப்பட்ட பின்னரே அவை கொழும்புக்கு அனுப்பப்படும். ஆனால் இந்தக் கணக்கெடுப்புப் படிவங்களைக் கிராம சேவையாளர் ரீதியாக மாத்திரம் தொகுத்த பின்னர் நேரடியாகக் கொழும்புக்கு அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## மன்னார் மனித

பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றுப் புதைகுழி தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் திடீரென்று அது நிறுத்தப்பட்டது. அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரியும் நேற்றுப் புதைகுழி தோண்டும் பகுதிகளுக்கு வந்து மீட்கப்பட்ட பொருள்களை ஆய்வு செய்ததாகக் கூறப்படுகின்றது.

கொழும்பிலிருந்து விசேட சட்ட வைத்திய அதிகாரிகள் குழுவினர் வருகை தந்து, அவர்கள் முன்னிலையிலேயே அது தோண்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தோண்டப்பட்டு வரும் குழியின் அருகாகச் செல்லும் வீதியின் கீழேயும் மனித எச்சங்கள் காணப்படுவதால் வீதியைக் கிளறி எச்சங்களை மீட்க வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதி 1990 ஆம் ஆண்டிலிருந்து 1993 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததெனவும். அதன் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருந்துள்ளது எனவும் கூறப்படுகிறது.

இந்தப் பகுதியை அறிவிக்கப்படாத உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினர் பிரகடனப்படுத்தி வைத்திருந்தாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட மண்டையோடுகளில் கடுமையான காயங்கள் இருந்த தடயங்கள் காணப்படுவதாக சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார். (த-5)

## யாழ். இந்து

மாவட்டக் காரியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் சுமார் நூறுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

இளைஞர்களே எதிர்காலத் தூண்கள்; அவர்களை அழிக்காதீர்கள், வன்முறைகளுடாக இளைஞர்களின் எதிர் காலத்தை நசுக்காதே, இளைஞர்கள் மீதான வன்முறையினை நிறுத்து , வருங்கால விருட்சங்களைக் கருக்காதே போன்ற சுலோகங்களைத் தாங்கி இவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாகப் பேரணியொன்று நடத்தத் திட்டமிடப் பட்டிருந்த போதும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியின்மை காரணமாகப் பின்னர் அது கவனவீர்ப்புப் போராட்டமாக நடத்தப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன நிர்வாகசபை உறுப்பினர்கள், பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களின் பிரதிநிதிகள், தேசிய சம்மேளனப் பிரதிநிதிகள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தின் நிறைவில், இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சருடாக ஜனாதிபதிக்கும் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், வடக்கு மாகாண இளைஞர் விவகார அமைச்சருக்கும், மனு அனுப்பி வைக்கப்பட்டது. (த-5)

## பஸ் மோதி

அதே திசையில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா ஊடாக மன்னாருக்குச் சென்ற பஸ் மோதியதில் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்தில் உயிரிழுந்தார்.

சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிஸார் பஸ் சாரதியைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததையடுத்து சம்பவ இடத்தையும் சாவகச்சேரி வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தையும் பார்வையிட்ட நீதிவான் சடலத்தை வைத்தியசாலை பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திச் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார். (த-9)

## சுனாமி

மைத்துவப் பிரிவினரால் சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு, ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பில் பொதுமக்கள் செயற்படுமாறும் ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்ப மடையத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## செய்தியாளரை

டில் நாதன் என்பவரைக் கைது செய்த பொலிஸார் அவரை நேற்றுக் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விஜயராணி, குறித்த தாக்குதலுக்கு பத்திரிகைச் செய்திகள் எதனுடனும் தொடர்பில்லை என்றும், இது தனிப்பட்ட பிரச்சினை என்றும் தெரிவித்துடன் அவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவரைக் கைது செய்யவேண்டியுள்ளதாகவும், விசாரணைகள் இன்னும் முடிவுறவில்லை என்றும் மன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தாக்குதலில் ஈடுபட்ட நபர் கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருடன் இணைந்து வேலை செய்தவர் என்பதற்கு அந்த ஊரில் சாட்சிகள் பலர் உள்ளனர். (த-6)

## கட்டாய

கடந்த ஓகஸ்ட் மாதம் 50 பெண்கள் கட்டாயக் கருத்தடைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இதில் மலையாளபுரத்தைச் சேர்ந்த ஒரு இளம் தாய் உயிரிழந்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய கிளையிடம், மேற்படி விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று சிவில் சமூகம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்கமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளை வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரிடம் இது குறித்து விளக்கம் கோரியிருந்தது.

இவர்களால் கடந்த வாரம் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குப் பதில் அனுப்பப்பட்டிருந்தது. அவர்கள் வழங்கிய பதில் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார். (த-5)

# டைமன்ஸ் நூற்றாண்டுக் கிண்ணத்தை தனதாக்கியது நாவாந்துறை சென்.மேரிஸ்





வடமராட்சி, டிசெ.24
உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பந்தைத் தம் வசம் வைத்து மாயாஜாலம் காட்டினர் சென்.மேரிஸ் அணி வீரர்கள். இதனால் அந்த அணி நூற்றாண்டுக் கிண்ணத்தைத் தம் வசப்படுத்தினர்.

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் தமது நூற்றாண்டு விழா கிண்ணத்துக்காக நடத்திய 7பேர் கொண்ட உதைபந் தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாவாந் துறை சென்.மேரிஸ் அணி தனது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி கிண்ணத்தைச் சுவீகரித்தது. இந்த இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென். லூசியஸ் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியபோதே சென்.மேரிஸ் அணி வீரர்கள் பந்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். இந்த அணியைச் சேர்ந்த யூட் 2 ஆவது நிமிடத்திலேயே சென்.லூசியஸ் அணியின் கோல்காப்பாளர் பந்தை பெற முன்னோக்கி வந்தபோது அவரையும் ஏமாற்றி பின்கள வீரர்கள் இருவரையும் தாண்டி மிக அற்புதமான கோல் ஒன்றைப் போட்டு அபாரம் காட்டினார்.

இதனால் ஆட்டம் விறுவிறுப்படைய 8 ஆவது நிமிடத்தில் சென். லூசியஸ் அணிக்கு நேர் உதை ஒன்று கிடைத்தது. அதனைச் சரியாகப் பயன்படுத்திய அந்த அணி வீரர் பிராங்கி ளின் சென்.மேரிஸ் அணியின் 3தடுப்புச் சுவர் வீரர்களையும் தாண்டிநேரடியாக கோல்கம்பத்துக்குள் பந்தைப் புகுத்தினார். இதனால் 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் இருந்தது. அதனைத் தொடர்ந்து 10 ஆவது, 11 ஆவது, 12 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்துக் கிடைத்த அரியவாய்ப்புக்களை சென்.மேரிஸ் வீரர்கள் பயன்படுத்தத் தவறிவிட்டனர். அதே போல் 15 ஆவது நிமிடத்திலும் யூட்டும், ஜொனிற்றனும் தமக்குள் அழகான பந்துப் பரிமாற்றத்தை மேற்கொண்டு சென்.லூசியஸ் அணியின் பின்கள வீரர்களைத் தாண்டிச் சென்று பந்தை வெளியில் அடித்து வெறுப்பேற்றினர்.

சென்.மேரிஸ் அணி வீரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பந்தை மீட்பதற்கு சென்.லூசியஸ் அணி வீரர்கள் சிரமப்பட்டனர். அவ்வளவு அற்புதமாக பந்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் சென்.மேரிஸ் அணியினர். 20 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணிக்கு மூலை உதையொன்று கிடைத்தது. இதனை அவ்வணியைச் சேர்ந்த அன்ரனி சாள்ஸ் உதைக்க மேலே வந்த பந்தை யூட் தலையால் இடித்துக் கோலாக்கினார். அதனைத் தொடர்ந்து 23 ஆவதுநிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் யுனிற்றன் தட்டிக் கொடுத்த பந்தை நிதர்சன் கோலாக்கினார். 24 ஆவது நிமிடத்தில் முறையற்ற ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்.லூசியஸ் அணி வீரர் பிரான்சிஸ் சேவியருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.26 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் அணி வீரர் கொடுத்த பந்தை அவ்வணி வீரர் எடிசன் தலையால் இடித்துக் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 3:2 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளாலும் கோலைப் பெற முடியவில்லை. ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்ற போது 16 ஆவது நிமிடத்தில் இரு அணி வீரர்கள் இருவருக்கிடையில் முரண்பாடு ஏற்பட்ட போதும் பின்னர் அது தீர்க்கப்பட்டது.

அதன் பின்னர் சென்.மேரிஸ் அணியின் ஆட்டத்தில் அனல் பறந்தது. சென்.மேரிஸ் அணி வீரர்களின் பந்துப் பரிமாற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் சென்.லூசியஸ் அணி வீரர்கள் திணறினார்கள். 18, 19 ஆவது நிமிடங்களில் சென். மேரிஸ் அணி வீரர்கள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை கோலாக்கத் தவறிய போதும் 25 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் யூட் பின்கள வீரர்களையும் தாண்டி பந்தைப் பிடிக்க வந்த கோல் காப்பாளரையும் ஏமாற்றித் தனது சகவீரரான நிதர்சனிடம் கொடுக்க அதைச் சரியாகப்பயன்படுத்தி அவர் கோலாக்கினார். இதனால் வெற்றி வாய்ப்பை சென்.மேரிஸ் அணி உறுதி செய்தது.

ஆட்டநேர முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி நூற்றாண்டு வெற்றிக் கிண்ணத்தையும், 50,000 ரூபா பெறுமதியான காசோலையையும் பெற்றுக் கொண்டது. 2 ஆவது இடத்தைப் பெற்ற சென். லூசியஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும், 20,000 ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டது.

ஆட்டநாயகனாக சென்.மேரிஸ் அணியைச் சேர்ந்த யூட், தொடர் ஆட்ட நாயகனாக சென்.லூசியஸ் அணியைச் சேர்ந்த எடிசன், சிறந்த கோல் காப்பாளராக சென்.மேரிஸ் அணியைச் சேர்ந்த சுதாகர், அதிக கோல்களைப் போட்ட வீரராக இளவாலை யங்ஹென்றிஸ் அணியைச் சேர்ந்த ஞானரூபன் (7போட்டியில் 21கோல்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டு, விளையாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து சிறப்பித்தார். (கு-8-23-422)

# தேசிய மேசைப் பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற வீராங்கனைகள்



யாழ்ப்பாணம், டிசெ.24
ஆசியா-ஜேர்மன் விளையாட்டுத்துறை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்-வவுனியா மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கங்களின் ஏற்பாட்டில் அபான்ஸ், ஸ்ரை இன்ரநஷனல் ஆகியவற்றின் அனுசரணையுடன் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரியில் முதன்முறையாக இடம்பெற்ற அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளின் விவரம்:-

8வயது - பெண்கள்
முதலாமிடம் - ஜனனி உமா சங்கர்(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாமிடம் - தரணி கவிந்திய (பண்டாரவளை சஸ்பெக்ஸ் கல்லூரி)

10வயதுப் பிரிவு - பெண்கள்
முதலாமிடம் - இமல்ஷா லக்றன்தி(பௌத்த பெண்கள் கல்லூரி கல்கிசை), இரண்டாமிடம் - ஒஷாடி உமயங்கன்(கல்கிசை பௌத்த பெண்கள் கல்லூரி)

12வயதுப் பிரிவு - பெண்கள்
முதலாமிடம் - சயூரி பவானக்கா (பண்டாரவளை சஸ்பெக்ஸ் கல்லூரி), இரண்டாமிடம் - இமல்ஷா லக்றன்தி (கல்கிசை பௌத்த பெண்கள் கல்லூரி)

15வயதுப் பிரிவு - பெண்கள்
முதலாமிடம் - அயோத்யா சந்தீபனி (கண்டி சென்.அன்ரனிஸ் பெண்கள் கல்லூரி), இரண்டாமிடம் - [illegible] ஹம்ஷா (கொழும்பு பிஷப் கல்லூரி)

18வயதுப் பிரிவு - பெண்கள்
முதலாமிடம் - சிந்துஷா(யூனியன் கல்லூரி), அனுஷியா ஜயலத்(கொழும்பு பிஷப் கல்லூரி)

21வயதுப் பிரிவு - பெண்கள்
முதலாமிடம் - சிந்துஷா(யூனியன் கல்லூரி), இரண்டாமிடம் - சிவகங்கா சிவபாலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

திறந்தபோட்டி - பெண்கள்
முதலாமிடம் - சிந்துஷா(யூனியன் கல்லூரி), இரண்டாமிடம் - பிரதுஷா (இந்துமகளிர் கல்லூரி)

பெண்களுக்கான போட்டியில் [illegible] வீராங்கனையாக யூனி[illegible]ல்லூரி சிந்துஷா தெரிவு [illegible] என்.பெஸ் [illegible] விருது [illegible]ங்கிக் கௌ[illegible]ப்பட்டார். (கு-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்துடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கை இணைக்கும் நிகழ்வு கடந்த வாரம் உடுவில் பிரதேச சபையின் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்றது.
இதில் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோவுக்கு முன்னாள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் நடராஜா நினைவுச் சின்னம் வழங்குகிறார். (கு-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.24
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்-மதார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூபைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

## வென்றது வவுனியா யங்ஸ்ரார்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.
இதில் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு-23)

# இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்குச் செல்லும்



பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைவரங்கள் திருப்திகரமாக இருந்தால், இலங்கையின் கிரிக்கெட் அணி அங்கு சுற்றுலாப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கைக் கிரிக்கெட்டின் அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டி, பாகிஸ் தானிய ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.
2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் - லாஹூரில் இடம்பெற்ற இலங்கைக் கிரிக்கெட் அணி மீதான தாக்குதலைத் தொடர்ந்து, அங்கு எந்த கிரிக்கெட் அணியும் சென்றிருக்கவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலவரங்கள் திருப்திகரமாக இருந்தால், இலங்கை கிரிக்கெட் அணியை அங்கு அனுப்பத் தயாராக இருப்பதாக இலங்கைக் கிரிக்கெட் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் எதிர்வரும் நாள்களில் பாகிஸ்தான் மற்றும் இலங்கைக் கிரிக் கெட் தரப்புகளுக்கு இடையிலான பேச்சு ஒன்றுக்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (கு)

# தென்னாபிரிக்காவின் வெற்றியை தடுத்து நிறுத்தியது இந்திய அணி



பரபரப்பாக சென்ற இறுதி நிமிடங்களில் அடுத்தடுத்து வீழ்ந்த 3 இலக்குகளால் தென்னாபிரிக்க அணியின் வெற்றியை தடுத்து நிறுத்தி இந்தி யாவால் போட்டியை சமநிலை செய்ய முடிந்தது.
தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜொகன்னஸ்பேர்க் நகரில் கடந்த 18ஆம் திகதியிலிருந்து நடை பெற்று வருகிறது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாட முடி வெடுத்தது.
தொடக்க ஆட்டக்காரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமி ழந்த போதிலும், சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்திய நடுக்கள ஆட்டக்காரர் விராட் கோஹ்லி 119 ஓட்டங்களைக் குவித்தார். ரஹானேயும் தன் பங்குக்கு 47 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் யாரும் சோபிக் காததால் இந்திய அணி 280 ஓட் டங்களுக்கு அனைத்து இலக்கு களையும் இழந்தது.
பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி நிதானமாக தனது ஆட்டத்தை வெளிப்ப டுத்தியது. அந்த அணியின் அணித்தலைவர் ஸ்மித் 68 ஓட்டங் களும், பிலாண்டர் 59 ஓட்டங்களும் எடுத்தநிலை யில் மற்ற ஆட்டக் காரர்கள் சரியாக சோபிக்காததால் அந்த அணி 244 ஓட்டங்களுக்கு அனைத்துஇலக்குகளையும்இழந்தது.
முதல் இன்னிங்சில் 36 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற இந்திய அணி வீரர்கள் இரண்டாவது இன்னிங்சிலும் தங்களது சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தினர். தொடக்க ஆட்டக்காரர்கள் பெரிய அளவில் ஓட்டங்களை சேர்க்க தவறியபோதும் மூன்றாவது ஆட்டக்காரராக வந்த புஜாரா அற்புதமாக விளையாடி 153 ஓட்டங்களை குவித்தார்.
இரண்டாவது இன்னிங்சிலும் கலக்கிய கோஹ்லி நூலிழையில் சதத்தை தவறவிட்டார். கோஹ்லி தன் பங்குக்கு 96 ஓட்டங்களை எடுத்தார். மற்றவர்கள் சுமாராக விளையாடி ஓரளவு ஓட்டங்களைச் சேர்த் தனர். இறுதியில் 421 ஓட்டங்கள் குவித்து இந்தியா தனது அனைத்து இலக்குகளையும் இழந்தது.
வெற்றி பெற 458 ஓட்டங்கள் தேவை என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி வீரர்கள் மீண்டும் தங்கள் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.
204 பந்துகளை சந்தித்த பீற்றர்சன் 76 ஓட்டங்களிலும், 126 பந்துகளை சந்தித்த அணித்தலைவர் ஸ்மித் 44 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.
ஹசீம் அம்லா சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்த போதும் பின்னர் வந்த டூ பிளசிஸ்சும், கலிஸும் ஓரளவு நிலைத்து நின்று ஆடினர். இந்நிலையில் 34 ஓட்டங்கள் எடுத்திருந்த கலிஸ் சகிர்கான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.
பின்னர் டூ பிளிசிஸ்சுடன் ஜோடி சேர்ந்த டி வில்லியர்ஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் நிதானமாக விளையாடினர். முதலில் டூ பிளிசிஸ் சதத்தைப் பூர்த்தி செய்த நிலையில், டி வில்லியர்சும் தன் பங்குக்கு சதமடித்தார். 103 ஓட் டங்கள் குவித்த டி வில்லியர்ஸ் இஷாந்த் சர்மா பந்தில் ஆட்டமிழந் தது ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது.
பின்னர் வந்த வீரர்கள் ஓட்டங்களை குவிப்பதில் ஈடுபடா மல் தடுக்க டோனி தொடர்ந்து வேகப்பந்து வீச்சாளர்களையே பந்து வீசச் செய்தார். பின்னர் டுமினி 5 ஓட் டங்களில் ஆட்டமிழக்க, ஆட்டத்தின் 132ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ரஹானேயிடம் பந்தை அடித்துவிட்டு டூ பிளசிஸ் ஓர் ஓட்டம் எடுக்க ஓடியபோது துல்லியமாகப் பந்தை எறிந்து ஸ்டம்ப்பை தகர்த்து அவரை ஆட்டமிழக்கச் செய்தார். இதனால் தென்னாபிரிக்க அணி ஆட்டத்தைச் சமநிலை செய்யும் நோக்கில் ஆட ஆரம்பித்தது.
458 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 7 இலக்குகளை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் போட்டி முடிவடைந்ததால், இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.
இப்போட்டியில் கலிஸின் இலக்கை வீழ்த்தியதன் மூலம், டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 300 இலக்குகள் வீழ்த்தியவர்கள் பட்டியலில் சகீர் கானும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. ஆட்ட நாயகனாக விராட் கோஹ்லி தேர்ந் தெடுக்கப்பட்டார். (கு)

# பாகிஸ்தானிடம் இலங்கை படுதோல்வி




இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் பாகிஸ்தான் அணி 113 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.
இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்திருந்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 326 ஓட்டங்களைக் குவித்தது. இமாலய வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 44.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 213 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்துள்ளது. ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் 2:1 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கிடையிலான நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (கு)

> முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 326 ஓட்டங்களைக் குவித்தது.

# சச்சின் கனவு பலிக்குமா?



சச்சின் கவனம், தற்போது உதைபந்து பக்கம் திரும்பியுள்ளது. எதிர்வரும் 2022 இல் நடக்கும் உலக கிண்ண உதைபந் துத் தொடருக்கு இந்தியா தகுதி பெறும் என நம்பிக்கை தெரிவித்தார்.
எதிர்வரும் 2017 இல் உலக (17 வயதுக் குட்பட்டோர்) கிண்ண உதைபந்துத் தொடர் இந்தியாவில் நடக்கவுள்ளது. இதன் மூலம், சர்வதேச உதைபந்தாட்டக் கூட்டமைப்பின் (பிபா) மிகப்பெரிய தொடரை முதல் முறையாக நடத்துகிறது. இந்நிலையில், அடுத்த ஆண்டு பிரேஸிலில் நடக்க உள்ள உலக கிண்ணத் தொடருக்கான தங்கக் கிண்ணம் இந்திய மக்களின் பார்வைக்காக கொல்கத்தா வந்துள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற சச்சின் கூறியது:
எதிர்வரும் 2014இல் நடக்க உள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு இந்திய அணி தகுதி பெறவில்லை. 2022இல் விளையாடுவதே இலக்காக இருக்க வேண்டும். இது ஒரே இரவில் நடந்து விடாது. படிப்படியாக செயல்படுத்த வேண்டும். இதற்கான அடித்தளத்தை இளம் வீரர்களுக்கு உருவாக்கி தருவது அவசியம். கடின பயிற்சி, சரியான திட்டமிடல் முக்கி யம். இதன்படி செயல்பட்டால், சாம்பியனாக உருவாக முடியும். என் ஆதரவு என்றும் இளம் உதைபந்து வீரர்களுக்கு உண்டு. (கு)

**கடை வாடகைக்கு**

கஸ்தூரியார் வீதியில் 26அடி அகலமும், 70 அடி நீளமும் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறையுடன் சகலவசதிகளும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (நிதிநிறுவனங்கள், வங்கிகளுக்கு ஏற்றது.) தொடர்பு: 077 732 4648/077 732 4637

**கிறிஸ்மஸ்ஸினை முன்னிட்டு இன்று மட்டும்**

சகல பொருள்களுக்கும் அதிரடி விலைக் குறைப்பு

மலிவு

**மங்களா**

**இன்று மட்டும்**

தெரிவுக்கு முந்துங்கள் காசை மீதப்படுத்துங்கள்

SALE

10% - 50% வரையிலான விலைக்கழிவு

இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 - 2228367, 0777 286069

**Physics (A/L)**
English & Tamil Medium
Group & Personal Classes
தொடர்புக்கு :
0777158667
**S.Uiroviyam**

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது. (சி/10647) (7.6.3)
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள், பிறபகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்

Batch1: 28.12.2013
Batch2: 30.12.2013
Batch3: 02.01.2014
Batch4: 04.01.2014

Free
Web
Network
Hardware
Multimedia
Type Free <NAME>& send to 772 395 895
OL-AL-ICT

க.பொ.த உயர்தரத்தில் A சித்தியைப்பெற்றுள்ளீர்களா, பின்வரும் கற்கைநெறிகளிற்கு 100% வரை புலமைப்பரிசில்கள்
**CIMA-UK, BIT-University of Colombo**
**COMPUTER ENGINEERING USA**

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையவில்லையா? கவலையை விடுங்கள். வேலைவாய்ப்பு அதிகமுள்ள கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிகிறி, அமெரிக்க கணினிப்பொறியியலாளர் கற்கை நெறிகள் உங்களை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும்.

புலமைப்பரிசிலிற்கு <NAME> <Course><AL Result> என்பவற்றை type செய்து 772395895க்கு sms செய்யவும்.மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.




பாடசாலை மாணவர்களுக்கான Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள
**கபிலா காலணியகம்**
24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Navalar road junction, Brown road, Jaffna.

**2016 A/L SCIENCE**
**ஆரம்பம்**
**28.12.2013**
**7.30 A.M**

**பௌதீகவியல்**
திரு. R. குமரன்
திரு. R. குகன்

**இரசாயனவியல்**
திரு. டயஸ்
Tamil & English Medium
திரு. T. சிவகுமார்

**உயிரியல்**
திரு. S. பொன்திவாகரன்
திரு. V. உமாசங்கர்


## CHEMISTRY 2015 A/L DIAS B.Sc (Hons) Spl.in che.

மாதாந்த தொடர் போட்டிப்பரீட்சைப் பெறுபேறுகள்

| | MEDIUM | NAME | SCHOOL | STREAM | MARK | RANK |
|---|---|---|---|---|---|---|
| 1 | E | Anantharajah Harishankar | J.H.C | Bio | 92 | 1 |
| 2 | E | Navaradnarajah Sutharsanan | J.H.C | Maths | 91 | 2 |
| 3 | E | Kanagarajah Sathursan | J.K.H.C | Maths | 87 | 3 |
| 4 | E | Jeyakumar Johny Jonathan | S.J.C | Maths | 86 | 4 |
| 5 | E | Canthareswaran Vithyasahar | J.H.C | Maths | 85 | 5 |
| 6 | E | Paramanayakam Varatheepan | S.J.C | Maths | 85 | 6 |
| 7 | E | Sukirtha Sivasubramaniyam | V.G.H.S | Maths | 85 | 6 |
| 8 | E | Ratneswaran Shiveswaran | J.H.C | Maths | 84 | 8 |
| 9 | E | Dushyanthi Shalom | V.G.H.S | Bio | 84 | 8 |
| 10 | E | Thankavadivel Sobithan | J.H.C | Maths | 84 | 10 |
| 11 | E | Januja Thiruchelvam | V.G.H.S | Bio | 83 | 11 |
| 12 | E | Balasuntharam Artheeban | J.H.C | Maths | 83 | 12 |
| 13 | E | Pavithra Muruganantha Sarma | V.G.H.S | Bio | 82 | 13 |
| 14 | E | Mathuvanthi Thavarasha | V.G.H.S | Bio | 82 | 14 |
| 15 | E | Sujanie Kumaramoorthy | V.G.H.S | Maths | 81 | 15 |
| 16 | E | Kannanathan Piranavan | J.H.C | Bio | 80 | 16 |
| 17 | E | Thayaparan Ninujan | J.H.C | Maths | 80 | 16 |
| 18 | E | Tharshiga Logeswaran | V.G.H.S | Bio | 80 | 18 |
| 19 | E | Yalini Kailayapathy | V.G.H.S | Bio | 79 | 19 |
| 20 | E | Sriranganathan Aravinthan | J.H.C | Bio | 78 | 20 |
| 21 | E | Robert Dean Osbert | S.J.C | Maths | 77 | 21 |
| 22 | E | Tharmila Kunarathinam | V.G.H.S | Bio | 76 | 22 |
| 23 | E | Kuganathan Priyatharsan | J.H.C | Bio | 76 | 23 |
| 24 | E | Prapakaran Pravinth | J.C | Bio | 76 | 23 |
| 25 | E | Sivakumaran Charvakgnan | J.H.C | Maths | 75 | 25 |
| 26 | E | Gowsy Satkunaradnam | J.V.C | Maths | 75 | 25 |
| 27 | E | Sivasangeetha Vigneswaran | V.G.H.S | Maths | 75 | 25 |
| 28 | E | Junaitheen Mahamed Najiheen | T/Al-HMV | Maths | 74 | 28 |
| 29 | E | Rasathurai Sivaram | J.V.C | Maths | 74 | 28 |
| 30 | E | Sulaxsana Murugadas | V.G.H.S | Bio | 74 | 28 |
| 31 | E | Sivashangaran Gowseegan | J.H.C | Bio | 72 | 31 |
| 32 | E | Harina Thramarasa | V.G.H.S | Bio | 72 | 31 |
| 33 | E | Manogaran Jeshuran | J.H.C | Maths | 72 | 31 |
| 34 | E | Sharmila Parameswaran | J.M.L.C | Bio | 72 | 31 |
| 35 | E | Thillainathan Mathuran | J.K.H.C | Maths | 72 | 35 |
| 36 | E | Anchala Sivasubramaniyam | V.G.H.S | Bio | 71 | 36 |
| 37 | E | Meruja Raveendran | V.G.H.S | Bio | 71 | 36 |
| 38 | E | Thangavel Vibeeshan | S.J.C | Bio | 71 | 36 |
| 39 | E | Mahalingam Mathushanth | J.H.C | Bio | 71 | 39 |
| 40 | E | Mahendiran Arumugan | J.H.C | Maths | 70 | 40 |
| 41 | E | Thanasika Sinarasa | Mu.P.C.C | Bio | 70 | 40 |
| 42 | E | Thevagaran Luxman | J.H.C | Bio | 70 | 42 |
| 43 | E | Jesuthasan Rosan | J.V.C | Maths | 70 | 42 |
| 44 | E | Satkunasingam Kirishanth | J.V.C | Maths | 70 | 42 |
| 45 | E | Tharmasanthiran Aathman | S.J.C | Maths | 69 | 45 |
| 46 | E | Muthalithamby Sinthushan | J.H.C | | 69 | 45 |
| 47 | E | Thaneswaran Nijanthan | J.P.S.C | | 69 | 45 |
| 48 | E | Umayal Sriskantharajah | V.G.H.S | Bio | 69 | 45 |
| 49 | E | Vithusha Arokiyaseelan | C.G.C | Bio | 69 | 45 |
| 50 | E | Edwin Donaldson | S.P.C | Bio | 69 | 50 |
| 51 | E | Makesan Lakshman | S.P.C | Maths | 69 | 50 |
| 52 | E | Vishnuya Shantharuban | V.G.H.S | Maths | 68 | 52 |
| 53 | E | Tharmanandhasivam Naveenan | J.H.C | Bio | 68 | 52 |
| 54 | E | Kajavathani Panchaligam | V.G.H.S | Maths | 68 | 54 |
| 55 | E | Pakeerathan Jinoth | J.K.H.C | Maths | 68 | 54 |
| 56 | E | Kajapriya Sivakananathan | V.G.H.S | Bio | 67 | 56 |
| 57 | E | Mithusha Thirukketheeswaran | V.G.H.S | Bio | 67 | 56 |
| 58 | E | Nagarasa Nagenthiran | J.C.C | | 67 | 56 |
| 59 | E | Sarenya Nadesaranthan | V.G.H.S | Bio | .67 | 56 |
| 60 | E | Shojitha Jeyanathan | V.G.H.S | Bio | 67 | 56 |
| 61 | E | Karunananthan Anoban | J.H.C | Bio | 67 | 61 |
| 62 | E | Sivasothy Mayuran | J.M.H.C | Maths | 67 | 61 |
| 63 | E | Shinthuja Arudchelvan | V.G.H.S | Bio | 66 | 63 |
| 64 | E | Thamayanthi Ranganathan | J.H.L.C | Bio | 66 | 63 |
| 65 | E | Thiruvarangan Venuraj | J.V.C | Maths | 66 | 63 |
| 66 | E | Thurairasa Kabisan | J.H.C | Bio | 66 | 63 |
| 67 | E | Thiruchelvanathan Sayeeshan | S.J.C | Bio | 66 | 67 |
| 68 | E | Kanakarathnam Pirashanth | J.V.C | Maths | 66 | 67 |
| 69 | E | Nishana Ramachandran | U.G.C | Bio | 66 | 67 |
| 70 | E | Sharmini Ravichanthan | V.G.H.S | Maths | 66 | 67 |
| 71 | E | Sriharan Iniyavan | S.J.C | Bio | 66 | 67 |
| 72 | E | Srimuruganathan Niroshan | J.V.H.C | Maths | 66 | 67 |
| 73 | E | Kulasegaram Piranavan | S.J.C | Bio | 65 | 73 |
| 74 | E | Nicalin Stanisha Anton | V.G.H.S | Bio | 65 | 74 |
| 75 | E | Priyanthini Sivasubramaniyam | V.G.H.S | Maths | 65 | 74 |
| 76 | E | Keerthiga Uruthiralingam | V.G.H.S | Bio | 65 | 74 |
| 77 | E | Merycolastika Shanmugarasa | V.G.H.S | Bio | 65 | 74 |
| 78 | E | Vigneswaran Kajakaran | J.H.C | Maths | 65 | 74 |
| 79 | E | Anantharajah Ragathipan | S.J.C | Bio | 64 | 79 |
| 80 | E | Niluja Sukumaran | J.R.C | Maths | 64 | 79 |
| 81 | E | Sathukaran Thinesh | S.H.C | Maths | 64 | 79 |
| 82 | E | Thanusiya Karunakaran | V.G.H.S | Bio | 64 | 79 |
| 83 | E | Abirami Thuraisingam | J.K.H.C | Maths | 63 | 83 |
| 84 | E | Pushparajah Hajamuhan | J.H.C | Maths | 63 | 83 |
| 85 | E | Subaharan Harievarthan | J.H.C | Maths | 63 | 83 |
| 86 | E | Ananthamoorthy Harijeyan | J.H.C | Maths | 63 | 86 |
| 87 | E | Navaradnarajah Suman | J.H.C | Maths | 62 | 87 |
| 88 | E | Johnson Elmar | J.C | Maths | 62 | 87 |
| 89 | E | Mithusha Thavaththurai | J.V.C | Bio | 62 | 87 |
| 90 | E | Thanushiya Mahenthiran | V.G.H.S | Bio | 62 | 87 |
| 91 | E | Thushangi Balachandran | J.H.L.C | Maths | 62 | 87 |
| 92 | E | Pavanitha Puviraj | V.G.H.S | Bio | 62 | 92 |
| 93 | E | Viththiya Sivasankaranathan | V.G.H.S | Bio | 62 | 92 |
| 94 | E | Balasingam Ampujan | S.P.C | Bio | 61 | 94 |
| 95 | E | Shanmugaradivel Piranavan | J.H.C | Maths | 61 | 94 |
| 96 | E | Sivapalan Gowthaman | Kn.M.V | Bio | 61 | 94 |
| 97 | E | Vithusha Mohanarajan | V.G.H.S | Bio | 61 | 94 |
| 98 | E | Sivakumar Karthick | J.H.C | Maths | 61 | 98 |
| 99 | E | Rameshkumar Nirujan | J.K.H.C | Bio | 61 | 98 |
| 100 | E | S.Satheersameem | T/Al-H.M.V | Bio | 61 | 98 |
| 101 | E | Daksana Vijiayanathan | V.G.H.S | Bio | 60 | 101 |
| 102 | E | Dijeerthana Jeyanandarajah | J.H.L.C | Bio | 60 | 101 |
| 103 | E | Janani Kaneshan | V.G.H.S | Maths | 60 | 101 |
| 104 | E | Shalini Rakeswaran | V.G.H.S | Bio | 60 | 101 |
| 105 | E | Shivakumar Kugappriyan | J.K.H.C | Maths | 60 | 101 |
| 106 | E | Subanki Pushparajah | J.H.L.C | Bio | 60 | 101 |
| 107 | E | Rajakumaran Archulan | S.J.C | Maths | 60 | 107 |
| 108 | E | viruthiga Senthurselvan | U.G.C | Bio | 60 | 107 |
| 109 | E | Harishikka Yasotharan | Kn.M.V | Bio | 60 | 107 |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.